பக்கங்கள்: 28 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 21, ஞாயிற்றுக்கிழமை 06.08.2017 கதிர் 273

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992




நேற்று மாலை இடம்பெற்ற கூட்டத்தில்...

## சுரேஷ், செல்வம், சித்தார்த்தனை கூட்டத்துக்கு வரவைத்தார் விக்கி!

யாழ்ப்பாணம்,ஓக.06

நேற்று மாலை நடைபெற்றிருந்த கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பங்குபற்றுமாறு வடக்கு மாகாண முதல்வர் சி.வீ. விக்னேஸ்வரன் புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியமூன்றுகட்சித்தலைவர்களையும் தொடர்பு கொண்டு பேசினார் என்றும், அதையடுத்தே அக் கூட்டத்தில் பங்குபற்றும் தீர்மானங்களைஅவர்கள் எடுத்தார்கள் என்றும் நம்பகரமாக அறியவந்தது.

பக்கம் 26 »

# அமைச்சரவையைத் தம் இஷ்டப்படி முதல்வர் மாற்றுவதற்கு அங்கீகாரம்!

## கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் சம்பந்தர் தலைமையில் கூடி முடிவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 06

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தமது அமைச்சரவையைத் தமக்குள்ள தற்றுணிவு அதிகாரங்களைப் பிரயோகித்து தமது விருப்பப்படி மாற்றுவதற்கும் அல்லது திருத்தி அமைப் பதற்கும் உள்ள உரிமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் அங்கீகரித்து அதற்குத் தமது சம்மதத்தைத் தெரிவித்துள்ளன.

நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் முதல்வர் விக்னேஸ்வரனின் இல்லத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு அங்கீகாரம் வழுங்கும் முடிவு எட்டப்பட்டது.

பக்கம் 26 »

## அங்கத்துவக் கட்சிகள் அனைத்தினதும் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஓக.06

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நேற்றைய யாழ்ப் பாணக் கூட்டத்தில் அதன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் பங்குகொண்டனர்.

இந்தக் கூட்டத்துக்கான அழைப்பு நேற்றுமுன்தினம் இரவு விடுக்கப்பட்ட நிலையில் நேற்று இக்கூட்டத்தில் அவர்கள் பங்குபற்றுவார்களா என்ற சந்தேகம் நீடித்திருந்தது.

ஆனால்எல்லாக்கட்சித் தலைவர்களும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதி ராசா எம்.பி. –

புளொட்சார்பில்அதன் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி. –

ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில்அதன்தலைவர்சுரேஷ் பிறேமச்சந்திரன் –

ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்

பக்கம் 26 »

## மாகாண உறுப்பினர் அஸ்மின் அவரது கட்சியிலிருந்து நீக்கம்



யாழ்ப்பாணம்,ஓக.06

வடமாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போனஸ் ஆசனத்துக்கு நல்லாட்சிக்கானதேசியமுன்னணியின் சார்பில் நியமிக்கப்பட்டு கடந்த நான்கு வருட காலமாக சபை உறுப்பின ராகச் செயற்பட்டுவரும் அயூப் அஸ்மினை தமது முன்னணியிலிருந்து நீக்குவதாக அந்த முன்னணி உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றது.

பக்கம் 26 »

## அரசியல் கைதிகளின் விடுதலை கோரி நாளைமறுதினம் யாழில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.06

சிறையில் கொல்லப்பட்ட அரசியல்கைதிடில்ருக்ஷனின்நினைவுதினத்தை முன்னிட்டுஅரசியல்கைதிகளின் விடுதலையைக் கோரி யாழில் மாபெரும் ஆர்ப்பாட்டம்ஒன்றைமுன்னெடுக்க அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், சமூக விஞ்ஞான ஆய்வு மையம், தமிழ் மக்கள் வாழ்வுரிமைக்கானசெயற்பாட்டுமையம் ஆகியன

பக்கம் 26 »




போக்குவரத்து அமைச்சில் புகுந்து அட்டகாசம்

## துவாரகேஸ்வரன் கைது ஒரு வார விளக்கமறியல்!

யாழ்ப்பாணம்,ஓக.06

ஐக்கிய தேசியக் கட்சியின்யாழ்.மாவட்டஅமைப்பாளர் எனத் தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொள்பவரும், யாழ். வர்த்தகரும், யாழ். – கொழும்பு தனியார்பஸ்சேவை நடத்துபவருமான தி.துவாரகேஸ்வரன் நேற்று முன்தினம் கொழும்பில் கைதானார்.

பக்கம் 26 »

## புலிகளின் பிரமுகர் எமில்காந்தன் இங்கு வந்து சாட்சியமளிப்பாராம்!

கொழும்பு,ஓக.06

விடுதலைப் புலிகள் அமைப்பின் நிதிப் பிரிவில் செயற்பட்டவர் எனக் கூறப்படும் எமில்காந்தன் என்பவர் விரைவில் இலங்கை வரவுள்ளார் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட் டுள்ளது.

இதுவரை வெளியாகாத சர்ச்சைக்குரிய பல

பக்கம் 26 »




## உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க மாநாடு கோலாகலமாக ஆரம்பம்

### முதல்வர் விக்னேஸ்வரன் சமூகம் தரவில்லை

யாழ்ப்பாணம்,ஓக.06

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13 ஆவது சர்வதேச மாநாடு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் கோலாகலமாக நேற்றுக் காலை ஆரம்பமானது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர்ரத்னம் விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகவும், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா எம்.பி. ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

மற்றொருசிறப்புவிருந்தினராக

பக்கம் 26 »

# குற்றச்செயல்களுடன் முன்னாள் போராளிகளை தொடர்புபடுத்தும் பின்னணிச் சக்திகள் பற்றி கண்டறிந்து நடவடிக்கை எடுங்கள்!

அண்மைக்காலமாகவடக்கு மாகாணத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களுடன் முன்னாள்போராளிகளைத் தொடர்புபடுத்தும் பின்னணிச்சக்திகள் பற்றிக்கண்டறிந்துநடவடிக்கை எடுங்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர்சிவஞானம்சிறீதரன் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

அண்மைக் காலமாக வட மாகாணத்தில் நடைபெற்று வருகின்றஅமைதியற்றசூழலை உருவாக்கக்கூடிய பாதுகாப்பு நிலைவரங்கள்தொடர்பாக அவர் நேற்றைய தினம் சிறீதரன் ஜனாதிபதிக்குக்கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

'நல்லிணக்கத்தைப் பாதுகாக்க விரைந்து நடவடிக்கை எடுங்கள்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள அந்தக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

அண்மைக்காலமாக வட மாகாணத்தில் நடைபெற்று வருகின்றஅமைதியற்றசூழலை உருவாக்கக் கூடிய பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து உங்களின் கவனத்திற்கு கொண்டுவர இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

நல்லாட்சி அரசு மீது நாமும் எமது மக்களும் கொண்டிருந்த அதிக நம்பிக்கையின் காரணமாகவே நல்லிணக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையை நீங்கள் அறிவீர்கள்.



சிறீதரன் எம்.பி.
ஜனாதிபதிக்குக் கடிதம்

எமது மக்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மனிதாபிமான கரிசனைக்குரிய விடயங்கள் எவையும் மக்கள் திருப்தி அடையும் வகையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அரசு நன்கறியும்.

அரசிடன் தொடர்ச்சியான தமிழ் மக்கள் மீதான மெத்தனப் போக்கு அதன் மீது எமது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை விரைந்து பலமிழக்கச் செய்கின்றது என்பதை சம கால கள நிலைவரங்கள் பிரதிபலிக்கின்றன.

விசேடமாக வடக்கு கிழக்கில் நடைபெறுகின்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னால் புனர்வாழ்வு பெற்ற விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருக்கின்றமையான தோற்றம் பிரமாண்டமான முறையில் வெளிக்காட்டப்படுகின்றது.

நீதிபதி மா.இளஞ்செழியன் மீதான துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கொக்குவில் நந்தாவில் பகுதியில் பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலின் பின்னால் புலி உறுப்பினர்கள் இருக்கின்றனர் எனதெரிவிக்கும் பொலிஸார் அவர்கள் அவ்வாறு செயற்பட்டிருந்தால் அவர்களைப் பின்னால் இருந்து இயக்கும் சக்திகள் யார் என்பதை இனம் காட்டத் தவறி வருகின்றனர்.

இந்த நிலைமை ஏனைய முன்னாள் போராளிகளுக்கிடையே அச்சத்தை உருவாக்கி அவர்களுக்கு நிம்மதியற்ற ஒரு எதிர்காலத்தை உருவாக்கி வருகின்றது.

அதிவிசேடமாக கடந்த 2009ஆம் ஆண்டில் இறுதி யுத்தம் நிறைவு பெற்றபோது சர்வதேச சமூகங்களின் பரிந்துரையின் பேரில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்த அனைத்துப் போராளிகளுக்கும் புனர்வாழ்வு அளிக்கப்பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்.

புனர்வாழ்வு என்பது விடுதலைப்புலிகள், அவர்கள் புரிந்ததாக அரசு கருதிய குற்றங்களுக்கு ஒட்டுமொத்த தண்டனையாகவே வழங்கப்பட்டது என்பதைத் நீங்களும் நன்கறிவீர்கள்.

ஆனால், கடந்த வாரம் முன்னாள் போராளியான கனேச சுந்தரம் கண்ணதாஸ் (கண்ணதாசன்) என்பவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்த காலத்தில் மேற்கொண்ட ஒரு குற்றம் தொடர்பாக வவுனியா உயர் நீதி மன்றத்தில் தனி நபரான நாகரட்ணம் ஜெயபாலன் என்பவர் வழக்குத் தொடர்ந்திருந்தார் அந்த வழக்கை விசாரணை செய்த வவுனியா மேல் நீதிமன்றம் கண்ணதாசனை குற்றவாளியாக அறிவித்து தண்டனையும் வழங்கியுள்ளது.

இது நீதித்துறைக் கட்டமைப்பிற்கு உட்பட்டவகையில் பொருத்தமாக இருந்தாலும் முப்பது வருட கால போரை நிறைவுக்குக் கொண்டு வந்து அறுபது வருடகால இன முரண்பாட்டை தீர்க்க முயற்சிக்கும் நல்லாட்சி அரசின் தத்துவங்களுக்குப் பொருத்தமானது அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்று நிற்கின்ற போது அதன் தலைமைத்துவக் கட்டளைகளை நிறைவேற்றியவர்களே போராளிகள் அவ்வாறான செயல்களுக்கு அவர்களுக்குத் தண்டனையும் கொடுத்து புனர்வாழ்வும் அளித்துவிட்டு அதே குற்றங்களுக்காக மீண்டும் தனிநபர் வழக்குகளை ஏற்றுக்கொள்ள முனைந்தால் பாரதூரமான சமூக விளைவுகள் நாட்டில் ஏற்படும்.

அத்துடன், தொடர்ந்து முன்னாள் போராளிகள் வாழ்வில் தொடர்ந்து நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றபோது அவர்களுடைய சிந்தனை, செயற்பாடுகளில் விரும்பத்தகாத மாற்றங்கள் ஏற்படும் என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்த நிலைமை நல்லாட்சி அரசுக்கும் அதன் நல்லிணக்கம் நோக்கிய பயணத்திற்கும் பேராபத்தை ஏற்படுத்திவிடும் எனவும் அஞ்சுகின்றேன்.

ஜனாதிபதி அவர்களே மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களின் பாரதூரத் தன்மைகளைச் சரிவர விளங்கிக்கொண்டு முன்னாள் அரசியல்துறைப் போராளி கண்ணதாசனுக்கு அவர் ஏற்கனவே பெற்றுக்கொண்ட தண்டனை, புனர்வாழ்வு என்பவற்றுடன் அவரது கல்வித் தகைமை, மற்றும் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளராகக் கடமையாற்றுதல், அவரது நல்லொழுக்கம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு பொது மன்னிப்பை வழங்குங்கள்.

அத்துடன், அண்மைக்கால குற்றச்செயல்களுடன் முன்னாள் போராளிகளைத் தொடர்புபடுத்தும் பின்னணிச் சக்திகள் பற்றியும் கண்டறியவேண்டும். நீண்டகாலங்களாகவே துன்பங்களைச் சந்தித்து வரும் போராளிகளின் வாழ்வு, அமைதியான எதிர்காலம் ஒன்றை நோக்கி பயணிப்பதற்கு விரைவானதும் பொருத்தமானதுமான ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கஞ்சா விற்றவருக்கு தொழில் வழங்கும் பொலிஸார்!

கொழும்பு, ஒக. 06

கஞ்சா போதைப் பொருள் மற்றும் சட்ட விரோத மதுபானம் ஆகியனவற்றை விற்பனை செய்த நபருக்கு பொலிஸார் தொழில் வாய்ப்பு வழங்கவுள்ளனர்.

அம்பலாந்தொட்ட பொலிஸ் பிரிவின் போலான சிஹும் பலகஸ்வில பிரதேசத்தில் இந்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

வருமான வழி எதுவும் இல்லாத காரணத்தினால் தாம் போதைப்பொருள் விற்பனை செய்வதாக இந்த நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

தொழில் வாய்ப்பு ஒன்றை வழங்கினால் இந்தச் சட்டவிரோதத் தொழிலை கைவிடுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து தொழில் வாய்ப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் உறுதியளித்துள்ளார்.

## சின்மயா மிஷனில் இன்று அருளுரை

நல்லூர், ஒக.06

நல்லூர் பருத்தித்துறைவீதி, இலக்கம் 700 என்ற முகவரியில் உள்ள யாழ்ப்பாணம் சின்மயாமிஷனில் இன்று ஞாயிறு முதல் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை ஆன்மீக அருளுரை இடம்பெறும்.

நாளாந்தம் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா மாலை 7.15 மணி முதல் 8 மணிவரை அருளுரை வழங்குவார்.

இன்றைய தலைப்பு 'இலக்கு'




யாழ்ப்பாணம், ஒக. 06

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வான வயலின் சோலோவில் வயலின்: சைந்தவி நிஷாகரன், மதுரா பாலச்சந்திரன், மிருதங்கம்: வி.ரமணா, கடம்: கே.ரவிசங்கர்.

***

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் இன்று இளஞ்சைவப் புலவர் சைவநெறி சன்மார்க்கர் ச.நவநீதன் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' எனும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார்.

***

நல்லூர் சைவ மகா சபையில் நடத்தப்படும் தெய்வீகத் தொடர் இசைப்பேருரை தினமும் மாலை 6.30 மணிமுதல் 8 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய இசைப்பேருரையில் கம்பராமாயணம் என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா உரை நிகழ்த்துவார். (இ)

## மன்னாரில் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய பதுங்குகுழியிலிருந்து ஆயுதங்கள் மீட்பு!

மன்னார், ஒக. 06

மன்னாரில் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய பதுங்கு குழிக்குள் இருந்து ஒருதொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் பாப்பா மோட்டை பிரதேசத்திலுள்ள பதுங்கு குழியொன்றில் இந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஏழு மோட்டார் குண்டுகள் உட்பட ஆயுதத் தொகை ஒன்றே இவ்வாறு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது என மன்னார் அடம்பன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விமானப் படை அதிகாரிகளுக்கு கிடைத்த புலனாய்வு பிரிவு தகவலுக்கமைய இந்த



ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 81 மில்லிமீற்றர் ரக மோட்டார் குண்டுகள் நான்கும், 60 மில்லி மீற்றர் ரக மோட்டார் குண்டுகள் மூன்றும் உள்ளடக்குகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட உத்தரவிற்கமைய, இந்த வெடிபொருள்கள் இராணுவ வெடிகுண்டு அகற்றும் பிரிவினால் கண்காணிக்கப்பட்டது.

இது தொடர்பில் அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அமைச்சர் சபை மாற்றம் விரைவில் என்கிறார் விக்கி

## நேற்றிரவு கூட்டத்தின் பின் அவர் தெரிவிப்பு

வடமாகாண அமைச்சர் சபையில் மாற்றம் ஏற்படலாம். ஆனால் முழுமையாக அமைச்சர் சபை மாற்றியமைக் கப்படுமா, அல்லது பகுதியள வில் மாற்றியமைக்கப்படுமா என்பது தொடர்பாக நான் இன்னும் தீர்மானிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பின் நிறைவில் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

நேற்றிரவு கூட்டமைப்புத் தலைவர்களின் கூட்டத்தில் பங்கு பற்றிய பின்னர் அது குறித்து முதல்வர் மேலும் கூறியவை வருமாறு:-

அமைச்சர் சபையில் மாற்றம் வரும். ஆனால் அது முழு அளவு மாற்றமா, அல்லது பகுதியளவு மாற்றமா என்பதை நான் இன்னும் தீர்மானிக்கவில்லை.

மேலும் கூடுமான அளவுக்கு தனிப்பட்ட கருத்து வேறு பாடுகளை மறந்து தமிழ் மக்களின் நலனுக்காக தொடர்ந்து சந்திப்புக்களை நடத்துவதென இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல்புதியஅரசமைப்பு தொடர்பாகவும் விரைவில் சந்தித்து பேசுவதெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது - என முதலமைச்சர் மேலும் கூறினார்.

### வடமராட்சி கிழக்கில் இளைஞன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம்

# கீழ்நோக்கிச் சில்லுக்குச் சுடுமாறே ஹான்ஸ்டபிள் முபராக்கிடம் கூறினேன்

## சப் இன்ஸ்பெக்டர் சஞ்சீவன் நீதிமன்றில் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், ஓக. 06

ஹன்ரை வடிவா பார்த்து கீழ் நோக்கி சில்லுக்கு சுடுமாறு முபாரக்கு உத்தரவிட்டேன். முபாரக் சுட்டார் என வடமராட்சி கிழக்கு துப்பாக்கிச்சூட்டுச்சம்பவம்தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சப் இன்ஸ்பெக்டர் பரிசோதகர் சஞ்சீவன் நீதிமன்றில வாக்குமூலம் அளித்துள்ளார்.

யாழ். வடமராட்சி கிழக்குப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேகநபர்களில் ஒருவரான சப் இன்ஸ்பெக்டர்பரிசோதகர் சஞ்சீவன், உயிரிழந்தவரின் தாய் மற்றும் சகோதரி ஆகியோர் அதன் போது நீதிமன்றில் வாக்குமூலம் வழங்கினர்.

சப்இன்ஸ்பெக்டர் சஞ்சீவன் தமது வாக்குமூலத்தில் தெரிவித்தவை வருமாறு:-

வாகனமொன்றில் மணலுக்குள் புதைத்து கஞ்சா கடத்தப் படுகின்றது என்று இரகசியத் தகவல் கிடைத்தது. பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு விடயத்தைத் தெரிவித்தேன். பொலிஸ் சீருடையுடன் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரை வருமாறு கூறினேன். பொலிஸ்சீருடையுடன்வந்த முபாரக் என்ற கொன்ஸ்டபிளை அழைத்துக் கொண்டு வல்லிபுரக் கோயில் பிரதான வீதியூடாக நாகர் கோயில் வரை சென்றோம்.

முபாரக்கின் கையில் ரி-56ரக துப்பாக்கி கொண்டுவரப்பட்டது. அங்கு சென்ற நாம் தகவல் தொடர்பிலான சில கடமைச் செயற்பாடுகளை மேற்கொண்டோம். பின்னர் நாகர்கோயில் - குடத்தனை பிரதான வீதியூடாகச் சென்று வீதியோரமாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி நானும் முபாரக்கும் மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கி நின்றோம்.

அப்போது நீல நிறத்திலான ஹன்ரர் ஒன்று வந்தது. அதன் முன்பக்கத்தில் மூன்று பேரும், பின்பக்கத்தில் நான்கு பேரும் இருந்தனர். வீதியின் மத்திக்கு வந்துகையைக்காட்டிவாகனத்தை நிறுத்துமாறு சைகை காட்டினேன்.

ஹன்ரர் என்னை இடிப்பது போல் வந்தது. நான் வீதியோரமாகப் பாய்ந்தேன். ஏன் நிறுத்தாமல் செல்கிறார்கள் என்று கேட்டுக் கொண்டு மோட்டார் சைக்கிளை ஸ்ராட் செய்து ஹன்ரரைத் துரத்தினோம்.

ஹன்ரரை நிறுத்துவதற்கு முயன்றோம். பின்னுக்கு இருந்தவர்களை நோக்கி ஹன்ரரை நிறுத்துமாறு கத்தினேன். ஆனால் ஹன்ரரை நிறுத்த வில்லை.

மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கூட்டி ஹன்ரருக்கு அருகில் 750 மீற்றர் அண்மையாகச் சென்று ஹன்ரரை நிறுத்துமாறு கூறினேன். நான் நெருங்கிய சமயம் ஹன்ரர் மண் பாதை ஒன்றுக்குள் சடுதியாகத் திரும்பியது. உடனே முபாரக்கை நோக்கி ஹன்ரரை நோக்கி வடிவாகப் பார்த்து ரயரை நோக்கி, கீழ் நோக்கிச் சுடுமாறுகூறினேன். அவர்ஒருவெடியை ஹன்ரரை நோக்கிச் சுட்டார்.

ஹன்ரர் நிறுத்தப்பட்டு அதில் இருந்தவர்கள் குதித்துப் பற்றைக்குள் ஓடினர். மோட்டார் சைக்கிளை நிறுத்தினோம். முபாரக் அவர்களைச் துரத்திச் சென்றார். நான் ஹன்ரரில் திறப்பு இருக்கின்றதா என்று பார்ப்பதற்காக ஆசனப் பக்கம் சென்றேன். அப்போதுதான் ஹன்ரருக்குக் கீழ் ஒருவர் காயத்துடன் விழுந்து கிடந்தார்.

ஹன்ரருக்குள் காயத்துடன் இருந்தவரை மீட்டோம்.

முபாரக்கை கூப்பிட்ட நான் காயப்பட்டு விழுந்து கிடந்த அவரைத் தூக்கி எமது மோட்டார் சைக்கிளில் ஏற்றி நான் மோட்டார் சைக்கிளைச் செலுத்த அவரை எனக்கும் முபாரக்குக்கும் இடையில் வைத்து, அம்பன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென் றோம். அங்கு அம்புலன்ஸில் ஏற்றினார்கள். எங்களில் ஒரு வரை வருமாறு கேட்டனர்.

முபாரக்கை அம்புலன்ஸில் செல்லுமாறு கூறியதுடன் அவரிடம் இருந்து ரி-56 ரக துப்பாக்கியை நான் வாங்கிக் கொண்டேன். பின்னர் பொலிஸ் நிலையத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் வழங்கினேன். அதிகாரி என்னைப் பொலிஸ் நிலையம் வருமாறும், பொலிஸ் குழுவை அனுப்புகின்றேன் என்று கூறினார். -என நீதி

பக்கம் 26 »


## இதோ ஓர் அரிய வாய்ப்பு...!

**இது வரைக்கும் 3200 முன்பள்ளி டிப்ளோமாதாரிகளை உருவாக்கிய நிறுவனத்தில் கல்வி பயின்று டிப்ளோமாதாரி யாக மாறி சாதனை படைத்திடவாரீர்!!!**

**ஆறுதல் நிறுவனத்தின் 2016/2017 ஆம் ஆண்டுக்குரிய முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

**எமது பலம்**

- ★ கல்வி அமைச்சு மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
- ★ பயிற்றப்பட்ட சிறந்த வளவாளர்
- ★ நவீன முறையிலான கற்றல் கற்பித்தல் செயன்முறை வகுப்புகள்.
- ★ பயிற்சிக்காலம் - ஒரு வருடம் (வார இறுதி நாள்களில் விரிவுரைகள் இடம்பெறும்)

முன்பள்ளி ஆசிரியர்கள் க.பொ.த. சாதாரண சித்தியுடனும்
ஏனையவர்கள் க.பொ.த. உயர்தர சித்தியுடனும் விண்ணப்பிக்க முடியும்

**உங்கள் விண்ணப்ப படிவங்களை**
முன்பள்ளி ஆசிரியர்கள்
தமது வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) ஊடாகவும்.
ஏனையோர்
இல.51 வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். எனும் முகவரியில் அமைந்துள்ள எமது நிறுவனத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 021 221 7092
விண்ணப்ப முடிவுத் திகதி - 20.08.2017
உங்கள் விண்ணப்பப் படிவங்களை (www.aaruthal.lk) எனும் இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.


# யாழ். பல்கலை - சென்றலைட்ஸ் இன்றைய இறுதி ஆட்டத்தில்!





(குங்கா)

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் பிரிவு - 3 அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில், இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும், சென்றலைட்ஸ் அணியும் மோதவுள்ளன.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் ஒழுங்குபடுத்தி நடத்திய, மேற்படி சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 23 அணிகள் பங்குபற்றின. அணிகள் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, போட்டிகள் லீக் முறையில் நடைபெற்றது. முதற்சுற்றின் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிரு இடங்களையும் பெற்ற அணிகள், காலிறுதிக்குத் தகுதி பெற்றன. காலிறுதியிலிருந்து போட்டிகள் லீக் முறையில் நடைபெற்றன.

அரையிறுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியையும், சென்றலைட்ஸ் அணி ஓல்ட்கோல்ட் அணியையும் வென்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தன.

இறுதிப்போட்டிக்கு பிரதம அதிதியாக சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கமும், சிறப்பு அதிதியாக முன்னாள் யாழ்.மாவட்ட பயிற்றுவிப்பாளர் வி.கே.சண்முகலிங்கமும் கலந்துகொள்கின்றனர்.

இறுதிப்போட்டிக்குள்நுழைந்த இரண்டு அணிகளும் இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் பிரிவு - 2 அணிகளுக்குள் நேரடியாக நுழைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.




## நெஞ்சையள்ளும் மஞ்சம்

வெஞ்சமரைத் தணிவிக்கும்
விரோதிகளைப் பதப்படுத்தும்,
நெஞ்சையள்ளும் திருமஞ்சம்
நல்லூரின் எழில் கொஞ்சும்,
கொஞ்சு மணி அசைந்தாடக்
கோடியென மக்கள் வர,
அஞ்சேலென அழகொழுக
அரோகரா நீண்டொலிக்கும்.

- கே.எஸ்.சிவஞானராஜா.




தங்க நகை உலகில் 34 வருட அனுபவத்தைக் கொண்ட
**ரூபி ஜுவல்லரி**
இல.227-229,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 6919

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஒன்றிணைந்து செயற்படுக!

தமிழர் தரப்பில் முக்கிய அரசியல் சக்தியாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பில் வெளிவரும் செய்திகள் ஆரோக்கியமானவையாக இல்லை.

தமிழ்க் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அல்லாத மற்றைய மூன்று கட்சிகளும் கூட்டமைப்புக் குறித்து அதிகம் அதிருப்தியுற்றிருக்கின்றன என்பது வெளிப்படை.

அண்மையில் வவுனியாவில் அந்த மூன்று கட்சிகளினதும் மாவட்ட நிர்வாகிகள் ஒன்று கூடி ஒரு கூட்டம் நடத்தித் தங்கள் நிலைமை குறித்து ஆராய்ந்தமையும் அதையடுத்து வெளிவந்த செய்திகளும் ஒரு குழப்பத்தை உண்டு பண்ணுவனவாக அமைந்தன.

இந்த மூன்று கட்சிகளும் மாவட்ட ரீதியில் தனித்து இயங்கத் தீர்மானித்திருக்கின்றன என்றவாறு செய்திகள் வெளியாகின.

அதனையடுத்து, அதனை உத்தியோகபூர்வமாக மறுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட ரெலோ, அவ்விடயம் குறித்துத் தனது நிலைப்பாட்டைப் பகிரங்க அறிக்கை மூலம் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நான்கு கட்சிகளும் கூட்டமைப்பில் ஒன்றுபட்டுச் செயற்படுவது காலத்தின் கட்டாயம் என்று ரெலோவின் பொதுச்செயலாளர் என்.சிறிகாந்தா அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

புளொட்டின் நிலைப்பாடும் கூட அத்தகையதுதான். அதன் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பியும் கூட இதையே கூறி வருகின்றார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தருணத்தில் நாம் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தி விட முடியாது. அந்த முயற்சி தீர்க்கமான ஒரு முடிவை எட்டும் வரை இந்தக் கூட்டமைப்பில் நாம் இணைந்துதான் நிற்க வேண்டும்; அதனால் இணைந்து நிற்கிறோம். - என்று திரும்பத் திரும்பக் கூறி வருகின்றார் சித்தார்த்தன்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கூட கூட்டமைப்பின் தலைமை குறித்தும், அதன் பிரதான அங்கத்துவக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி குறித்தும் கடும் அதிருப்தியுடன் கருத்துக்களை வெளியிட்டு வந்தாலும், கூட்டமைப்பை உடைக்கும் எத்தனத்தில் ஈடுபடவில்லை.

ரெலோ செயலாளர் நாயகம் சிறிகாந்தா கூறியபடி கூட்டமைப்பில் ஒன்றித்திருக்க வேண்டியது இந்த நான்கு கட்சிகளினதும் கட்டாயம்.

தமிழர்களுக்காக மட்டுமல்ல. அக்கட்சிகளினதும் நலனுக்காகவும் அவை அந்தக் கூட்டமைப்பில் கட்டுண்டு கிடப்பது அவசியம் என்பதுதான் இன்றைய அரசியல் யதார்த்தம்.

இதை அந்தக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிப் பாத்திரம் வகிக்கின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி தனக்கு சாதகமான அம்சமாகப் பாவிக்கக் கூடாது.

தான் நினைத்தபடி இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்க் கூட்டமைப்பைக் கொண்டு நடத்துகின்றது என்ற எண்ணம் மற்றைய கட்சிகளுக்கு வராமல் பார்த்துக் கொள்வது தமிழரசுக் கட்சியின் பிரதான கடப்பாடாகும்.

இந்தக் கட்சிகளிடையேயான பிணக்கில் கடைசியாக நடந்த சம்பவம் வடக்கு மாகாண சபைக்குக் கிடைத்த போனஸ் ஆசனத்தை சுழற்சி முறையில் கட்சிகளுக்கு இடையில் பங்கீடு செய்த விவகாரமாகும்.

இது தொடர்பில் புளொட் தலைவர் சித்தார்த்தனும், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவும் பகிரங்கக் கடித அறிக்கைகளை வெளியிட்டுக் கருத்து மோதலில் - அல்லது பரிமாறலில் - ஈடுபட்டுள்ளனர்.

இதில் யார் பக்கம் சரி, யார் பக்கம் நியாயம், யார் செய்தவை தப்பு என்பன பற்றியெல்லாம் நாம் விமர்சிக்கப் போவதில்லை. ஒரேயொரு விடயத்தை மட்டும் சுட்டிக்காட்டிக் குறிப்பிட விரும்புகிறோம்.

இந்த விவகாரத்தை ஒட்டிக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனுக்குத் தாம் எழுதி, பகிரங்கப்படுத்திய கடிதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, *"கூட்டமைப்புப் பங்காளிக் கட்சிகளின் தலைமைப் பண்புகள் பற்றி நாம் தற்போது விமர்சிக்க விரும்பவில்லை."* - என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

நல்ல விடயம். இன்னொரு கட்சியின் தலைமையை - அதுவும் தம்முடன் கூட்டமைப்பாக இயங்குகின்ற கட்சியின் தலைமையை - பகிரங்கமாக விமர்சிக்காமல், இந்த விவகாரத்தை அவர் கையாளுகின்றமை உயர்ந்த அரசியல் நாகரிகமே; பாராட்டத்தக்க அரசியல் முதிர்ச்சி.

ஆனால், சுழற்சி முறையில் போனஸ் ஆசனத்துக்கு ஒருவரை நியமிக்கும் செயல் உட்பட அது போன்ற முக்கிய அரசியல் நடவடிக்கைகளை - காய் நகர்த்தல்களை - கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளையும் கூப்பிட்டு வைத்துப் பேசி, விளங்கப்படுத்தி, அவர்களையும் அரவணைத்து, அவர்களுக்குத் தெரியப்படுத்தி, முன்னெடுத்தால் அது இன்னும் சிறந்த அரசியல் முதிர்ச்சியாகவும், அரசியல் பண்பியல்பாகவும் அமையும்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் யாழ்ப்பாணத்தில் வந்து நிற்கும் இச்சமயத்தில், ஏனைய அங்கத்துவக் கட்சித் தலைவர்களுடன் பேசி, அவ்வாறு கூட்டாக இயங்குவதற்குரிய ஓர் ஒழுங்கு முறையை ஏற்பாடு செய்தால், அது இந்தக் கட்டத்தில் முக்கிய கட்டுறுதியை ஏற்படுத்த வழி செய்யும். எல்லாத் தலைவர்களும் சேர்ந்து அந்த உறுதி நிலையை உறுதிப்படுத்த முயலுவார்களா?

# 130 இலங்கையர்களுக்கு எதிராக 'இன்டர்போல்' சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 06

130 இலங்கையர்களுக்கு எதிராக இன்டர்போல் பொலிஸார் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கைக்குண்டு, துப்பாக்கி ரவைகளை வைத்திருந்த தர்மசீலன் முனுசாமி மற்றும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள எமில் லக்ஸ்மி காந்தன் ஆகியோரே இறுதியாக சிவப்பு எச்சரிக்கை பட்டியலில் இணைக்கப்பட்ட இலங்கையர்களாவர்.

இவ்வாறு பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்ட எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை.

பெரியளவில் நிதி மோசடியில் ஈடுபட்ட ஒருவருக்கு பிரிட்டனும், புலிகளின் ஐந்து சிரேஷ்ட தலைவர்களுக்கு பிரான்ஸும் கனடாவும் அடைக்கலம் வழங்கியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் பிரிவின் பிரதானிக்கு கனடா புகலிடம் வழங்கியுள்ளது எனவும் அவருக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்னதாக இன்டர்போலால் தேடப்பட்டு வந்த இலங்கையர்களின் எண்ணிக்கை 70 ஆகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## முல்லைத்தீவு ராணுவத் தலைமையகத்தை கேப்பாபிலவில் இருந்து அகற்ற முடிவு




கொழும்பு, ஓக. 06

கேப்பாபிலவில் இருந்து முல்லைத்தீவு இராணுவத் தலைமையகத்தை அகற்றுவதற்கு இலங்கை அரசு முடிவு செய்துள்ளது என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காக அமைச்சரவைப் பத்திரம் அடுத்தவாரம் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் புனர்வாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் முன்வைக்கப்படவுள்ளது.

இந்த இராணுவத் தலைமையகத்தை அகற்றுவதன் மூலம், பொதுமக்களுக்குச் சொந்தமான 111 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட உள்ளன.

அதேவேளை, வேறோர் இடத்தில் முல்லைத்தீவு படைகளின் தலைமையகத்தை அமைப்பதற்கு இராணுவத்துக்கு 4 கோடியே 80 லட்சம் ரூபாவை, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு வழங்கவுள்ளது என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (க)

## ரக்ன லங்கா, அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவர்கள் மீது 47 குற்றச்சாட்டுகள்!

கொழும்பு, ஓக. 06

ரக்ன லங்கா பாதுகாப்பு சேவை நிறுவனத்தின் முன்னாள் தலைவரான மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ மற்றும் அவன்ட் கார்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மேஜர் நிசங்க சேனாதிபதி ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் இருவருக்கும் எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 47 குற்றச்சாட்டுகளை முன்வைத்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில், பாதுகாப்புச் செயலராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவின் உதவியுடன் ரக்ன லங்கா பாதுகாப்புச் சேவை நிறுவனம் மற்றும் அவன்ட் கார்ட் நிறுவனம் என்பன உருவாக்கப்பட்டிருந்தன.

## மன்னாரில் உயர்தரப் பரீட்சை; 1940 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்!

மன்னாரில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 1940 பரீட்சார்த்திகள் தோற்ற இருக்கின்றனர்.

எதிர்வரும் 8 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை இலங்கை முழுவதும் நடைபெற இருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் 16 பரீட்சை நிலையங்களில் 1940 பேர் பரீட்சையில் தோற்ற இருக்கின்றனர்.

இவர்களில் 1439 பேர் பாடசாலை மாணவர்களும் 501 நபர்கள் தனியார் பரீட்சாத்திகளுமாவர். இதற்காக இப் பகுதியில் 7 இணைப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெற இருக்கும் ஐந்தாம் ஆண்டுக்கானபுலமைப் பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்திலிருந்து 28 பரீட்சை நிலையங்களில் 2284 மாணவர்கள் தோற்ற இருக் கின்றனர்.

இவற்றை கண்காணித்து செயற்படுத்துவதற்காக 15 இணைப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க- 112)

## மாற்றுத் திறனாளிகளின் உற்பத்திக் கண்காட்சி

கிளிநொச்சி, ஓக.06

டெவ்லிங் அமைப்பால் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகளின் உற்பத்திப் பொருள் கண்காட்சி நிகழ்வு நாளைதிங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி கருணா நிலையத்தில் இடம் பெறும். (இ)

## சரியான போசாக்கு - ஆரோக்கியமான சமுதாயம்



- ஆறு வகையான உணவுக் கூறுகளும் கிடைக்கக் கூடியதாக ஒரு நாளுக்கான உணவைத் திட்டமிடல்.
- பதப்படுத்திய உணவு வகைகள் தவிர்த்தல்/குறைத்தல்.
- அதிக சக்தி நிறைந்த உணவுகள் குறைத்தல். (சீனி சேர்ந்த உணவுகள், கேக், பிஸ்கட்ஸ், மென் பானங்கள்).
- வீட்டிலே தயாரித்த உணவுகளை உண்ணல்.
- நாள்தோறும் 2.3L தண்ணீர் அருந்துதல்.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

07.08.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம் : திருவோணம் பி.இ. 4.50 வரை
திதி : பூரணை பி.இ. 12.18 வரை
சுபநேரம் : 12.04 – 1.34 வரை
இராகுகாலம் : 7.34 – 9.04 வரை

## அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக

# நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரும் தார்மீக உரிமை கூட்டு எதிர்க்கட்சிக்கு இல்லை!




### ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 30

அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வரும் தார்மீக உரிமை கூட்டு எதிர்க்கட்சிக்கு இல்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் 32 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர் அது சபாநாயகரின் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிடும்போதே அதன் தேசிய அமைப்பாளர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் இன்னும் முடிவடையவில்லை. இன்னும் பலரிடம் விசாரணைகளை நடத்த வேண்டிய தேவையுள்ளது.

இவ்வாறான நிலைமையில் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகக் கூட்டு எதிர்க்கட்சி நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வருவதானது தகவல்கள் வெளியாக கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை வேறு பக்கம் திசை திருப்பும் முயற்சியோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அதேபோல் கூட்டு எதிர்க்கட்சியினருக்கு நம்பிக் கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட தார்மீக உரிமை இருக்கின்றதா?.

இதில் கையெழுத்திட்டுள்ள ரோஹித்த அபேகுணவர்தன, விமல் வீரவன்ஸ, காமினி லொக்குகே, மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோருக்கு எதிராக குற்றங்கள் சுமத்தப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கும் விசாரிக்கப்பட்டு வருகிறது.

எவ்வாறாயினும் தற்போது காணப்படும் நிலைமையில் ரவி கருணாநாயக்க தனது பதவியை ராஜினாமாச் செய்வதே பொருத்தமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பயங்கரவாதச் செயற்பாடு: 9 சிங்களவர்கள் தடுப்புக் காவலில்!

கொழும்பு, ஓக. 06

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஒன்பது சிங்களவர்கள் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் துணைப் பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் குரே கடந்த எட்டு ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள், பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு உதவியவர்கள் உள்ளிட்டவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## சீனாவின் மருத்துவமனை கப்பல் இலங்கையில் இலவச சிகிச்சை!

சீன கடற்படைக்குச் சொந்தமான அதியுயர் தொழில்நுட்பம் கொண்ட மருத்துவமனை கப்பலான ஆர்க் பீஸ் என்ற கப்பல் இன்றைய தினம் கொழும்புத் துறைமுகத்திற்கு வரவுள்ளது.

இன்றைய தினம் அதிகாலை 10 மணிக்கு கொழும்புத் துறைமுகத்திற்கு வரும் இந்தக் கப்பலை வரவேற்க வைபவ ரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து மாலையில் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக கப்பலைத் திறந்து விடப் போவதாக கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் 11.30 வரையும் பிற்பகல் 3 மணி முதல் 5.30 வரையும் பொதுமக்கள் இந்த மருத்துவமனைக் கப்பலில் இலவசமாக சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சீனாவில் தயாரித்துள்ள இந்தக் கப்பல் 178 அடி நீளம் கொண்டது. கப்பலில் உள்ள வைத்தியசாலை 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் இது வரை 13 ஆயிரம் மணி நேரத்திற்கு மேலாக ஒரு லட்சத்து 70 கடல் மைல்களில் இந்தக் கப்பல் பயணித்துள்ளதுடன் 29 நாடுகளுக்குச் சென்றுள்ளது.

உலகம் முழுவதும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேருக்கு இந்தக் கப்பல் மூலம் சுகாதார சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

## ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக ஜனாதிபதி மைத்திரி அதிரடி உத்தரவு!



இல்லை என மறுக்கிறார் ரவி!

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவைப் பதவி விலகவேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியுள்ளார் என சிங்கள ஊடகம் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணை முறி விநியோகம் தொடர்பில் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியில் ரவி கருணாநாயக்க, இனி மேலும் அமைச்சரவை அமைச்சுப் பதவியைத் தொடருவது அரசுக்கும் ரவி கருணாநாயக்கவுக்கும் பெரும் பிரச்சினை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், பதவி விலகுவதே சிறந்த தீர்வு என அமைச்சர் ரவி கருணா நாயக்கவிடம் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் என அரச உயர்மட்ட வட்டாரங்களை மேற்கோள் காட்டி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற வாழ்வின் 40 ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த வியாழக்கிழமை இரவு அலரி மாளிகையில் நடந்த விருந்து பசாரத்தின் போதே, ஜனாதிபதி இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து விலகுமாறு தனக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார் என வெளியான செய்திகளை அமைச்சர் ரவி கருணாநாயக்க நிராகரித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பதவியை விட்டு நான் விலக வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என வெளியாகிய அறிக்கைகள் மற்றும் வதந்திகள் முற்றிலும் முட்டாள்தனம் என்று அவர் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

## இராணுவ பிரதித் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னாண்டோ!

கொழும்பு, ஓக. 06

இலங்கை இராணுவத்தின் பிரதித் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார் என்று இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இராணுவப்பிரதித்தலைமை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் ரேனக உடவத்த அண்மையில் ஓய்வு பெற்றதை அடுத்து, நேற்றுமுன்தினம் முதல் இந்தப் பதவிக்கு மேஜர் ஜெனரல்டம்பத்பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

கெமுனு வோச் படைப் பிரிவின் தலைமைக் கட்டளை அதிகாரியாகவும் உள்ள மேஜர் ஜெனரல்டம்பத்பெர்னாண்டோ, இதற்கு முன்னர் முல்லைத்தீவு படைகளின் தலைமையக தளபதியாகப் பணியாற்றினார்.



இவர் 1983ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தில் இணைந்து கொண்டு, 1984 ஆம் ஆண்டு தொடக்கம் இரண்டாவது லெப்டினன்ட் தர அதிகாரியாக இராணுவத்தில் பணியாற்றத் தொடங்கினார்.

காலாட்படை அதிகாரியாக இவர் இரண்டு பற்றாலியன்கள், இரண்டு காலாட்படை பிரிகேட்கள், மூன்று காலாட்படை டிவிசன்களின் கட்டளை அதிகாரியாக, வடக்கு, கிழக்கு பகுதிகளில் பணியாற்றியவர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, பிரதான இராணுவ நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றியவர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர், மஹிந்த ராஜபக்ஷ அரசின் நெருக்கடிகளால் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னாண்டோ, 2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன சிறிலங்கா அதிபராகப் பதவியேற்ற பின்னர், மீண்டும் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார். (க)

காலைக்கதிர் Kalaikkathir



### மாகாணசபையின் ஆட்சி நீடிக்கப்பட்டால்

# கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி தமிழருக்கே வழங்கப்பட வேண்டும்!

## இப்படிக் கூறுகிறார் மாகாணசபை உறுப்பினர் கருணாகரம்

மட்டக்களப்பு, ஒக. 06

கிழக்கு மாகாணசபையின் ஆட்சிக்காலம் நீடிக்கப்படும் பட்சத்தில் முதலமைச்சர் பதவி தமிழர் ஒருவருக்கே வழங்கப்பட வேண்டும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோ. கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட கல்லடி உப்போடை விவேகானந்த மகளிர் கல்லூரியின் வரலாற்று சாதனையாளர் பாராட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சுமார் இரண்டரை வருடகால மாக முஸ்லிம் காங்கிரஸுடன்



இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்துள்ளது. அதில் முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக உள்ளார். இந்த நிலையில், மாகாணசபையின் ஆட்சிக் காலம் நீடிக்கப்படுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபையின் ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அந்த ஆட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கத்துவம் வகிக்கக் கூடாது.

மேலும், அமைச்சரவையிலும் முக்கிய மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதில் கூட்டமைப்பினர் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்.

கிழக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களைக் கொண்டுள்ளது. அத்துடன், ஏனைய மூன்று தமிழ் மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களுடன் 14 தமிழ் மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளனர். எனவே ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

நாங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தால் மட்டுமே கடந்த காலத்தில் பாதிப்புக்குள்ளான எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்யமுடியும். தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளையும் ஓரளவு பூர்த்தி செய்ய முடியும்.

இதேவேளை, கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு ஆட்சி அதிகாரங்கள் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டால் கிழக்கு மாகாணசபையின் ஆட்சி பெரும்பான்மையினத்தவர்களின் கைகளுக்குச் சென்றுவிடும். இந்த நிலைமை ஏற்பட இடமளிக்கக் கூடாது.-என்றார். (ச)

### காணாமற்போனோரின் உறவினர்களுக்கு கிழக்கு ஆளுநர் வாக்குறுதி!

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் பெயர் விவரங்களை சத்தியக் கடதாசி ஒன்றின் மூலம் தம்மிடம் ஒப்படைக்குமாறும், அதன் பின்னர் உரிய அதிகாரிகளிடம் கலந்துரையாடி தீர்வை பெற்றுத் தருகிறேன் எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்துள் ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கிழக்கு ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம், 156 நாள்களைக்கடந்துள்ளது. இந்நிலையில், கிழக்கு ஆளுநரிடம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மகஜர் ஒன்றை அவர்கள் கையளித்தனர்.

அதனைப் பெற்றுக் கொண்ட பின்னரே ஆளுநர் மேற்படி வாக்குறுதியை அளித்துள்ளார் எனக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது சங்கத் தலைவி நாகேந்திரன் ஆஷா தெரிவித்துள்ளார். (ச)

# பிரதமர் ரணிலை வாழ்த்தும் அமர்வை கூட்டு எதிரணி, ஜே.வி.பி. புறக்கணிப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி தொடர்ச்சியாக 40 வருடகால சேவையைப் பூர்த்தி செய்தமைக்காக வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட நாடாளுமன்ற அமர்வை கூட்டு எதிரணியான மஹிந்த அணியும், ஜே.வி.பியும் புறக்கணித்தன.

நாடாளுமன்றம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு முடிவடைந்த பின்னர், பிரதமருக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கும் பிரேரணையை முன்வைத்து சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல உரையாற்றினார்.

பிரேரணையை வழிமொழிந்து எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்றினார். அதன் பின்னர் நிமல் சிறிபால டி சில்வா, ரவூப் ஹக்கீம், திகாம்பரம், மனோ கணேசன், டக்ளஸ் தேவானந்தா, ரிஷாத் பதியுதீன் ஆகியோர் கட்சிகளின் சார்பில் பிரதமரை வாழ்த்தி உரை நிகழ்த்தினர்.

சிரேஷ்ட உறுப்பினர் என்ற அடிப்படையில் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவுக்கும், ஆளுங்கட்சியின் பிரதம கொறடா என்ற வகையில் அமைச்சர் கயந்த கருணாதிலக்கவுக்கும் உரையாற்ற வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது.

எனினும், கூட்டு எதிரணி மற்றும் ஜே.வி.பியின் சார்பில் எந்தவோர் உறுப்பினரும் விசேட நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்கவில்லை. பிரதான எதிர்க்கட்சியான கூட்டமைப்பு பங்கேற்றிருந்தது.

கூட்டு எதிரணியினதும், ஜே.வி.பியினதும் இந்த நடவடிக்கையை அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் வன்மையாகக் கண்டித்தனர்.

பார்வையாளர் கலரியும், சபாநாயகர் விருந்தினர் கலரியும் நிரம்பியிருந்தன. காலை 10.30 மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவைக்குள் வரும்போது அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று வரவேற்பளித்தனர். பிரதமரின் பாரியார் மைத்திரி விக்கிரமசிங்கவும் விருந்தினர் கலரியில் அமர்ந்திருந்தவாறு சபை நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.



### வெண்கரம் படிப்பகத்தின் ஆரம்பமும் பெயர்ப்பலகை திரை நீக்கமும்!

பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தின் ஆரம்ப நிகழ்வும் பெயர்ப்பலகை திரை நீக்கமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வெண்கரம் செயற்பாட்டாளர் மு.கோமகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக டென்மார்க் நாடாளுமன்ற உறுப்பினர் டிரோல்ஸ் ரவின்ஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக டென்மார்க் உயர் நீதிமன்ற ஜூரரும் சட்ட ஆலோசகருமான தர்மகுலசிங்கம் தருமன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், வலி. மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.சந்திர மௌலி ஆகியோர் கலந்துகொள்வர். மேலும் பலர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வின் போது, வெண்கரம் மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன், சிறப்பு நிகழ்வாக, ஒரு கிராமத்தின் வளர்ச்சியில் பெரிதும் பங்கெடுப்பது சிவில் சமூக அமைப்புக்களா அரச நிறுவனங்களா என்ற தலைப்பிலான பட்டிமன்றமும் இடம்பெறும்.

### கூட்டம்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் வனவள ஜீவராசிகள் திணைக்களத்துக்கு என வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒதுக்கப்பட்ட இடம் தொடர்பில் ஆராய்வதற்கான கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெறும். (ச)

# படுகொலை செய்யப்பட்ட அரசியல் கைதிகளுக்காக செவ்வாயன்று வடக்கில் நினைவேந்தல் நிகழ்வுகள்!

இலங்கை சிறைச்சாலைகளில் படுகொலை செய்யப்பட்ட அரசியல் கைதிகளை நினைவு கூரும் வகையில் வடக்கில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதற்குரிய ஏற்பாடுகளை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு செய்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை மா. சக்திவேல் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

''அரசியல் கைதிகளான நிமலரூபன், டில்ருக்ஷன் ஆகிய இருவரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் தாக்குதலுக்குள்ளாகி 2012ஆம் ஆண்டு கொல்லப்பட்டனர்.

''இவர்களுடைய 5 ஆம் ஆண்டு நினைவேந்தலும், இதுவரை கொல்லப்பட்ட அனைத்து அரசியல் கைதிகளினதும் நினைவேந்தலும் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அனுஷ்டிப்பதற்கு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

''அரசியல் கைதிகள் இல்லையென அரசு கூறுவதோடு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்ற நிலையில், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இவர்களை விடுதலை செய்ய மாட்டோம் என நீதிமன்றுக்குச் சவால் விட்டுள்ளார்.

இதனைக் கண்டித்தும், அரசு அரசியல் தீர்மானம் எடுத்து அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

''இந்த நிலையில், நினைவேந்தல் மற்றும் போராட்டத்தை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்புடன், வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், அரச செயற்பாட்டுக் குழு, தமிழ் மக்களின் வாழ்வுக் கான செயற்பாட்டு மையம், சமூக விஞ்ஞான ஆய்வு மையம் என்பன இணைந்து நடத்துகின்றன.

''தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை எட்டுவதில் ஆர்வமுள்ளோரும் பிரச்சினைத் தீர்வுகளில் களத்தில் நிற்போரும், ஆதரவு சக்திகளும் இணைந்து குரல் எழுப்ப ஒன்றுதிரளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்'' என்றுள்ளது.

## வித்தியா படுகொலை வழக்கு;

# அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் உதவி கோரியுள்ளார் விஜயகலா!

### சிங்கள ஊடகத்தில் வெளியான தகவல்



கொழும்பு, ஓக. 06 புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன்வித்தியா படுகொலை தொடர்பில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கைது செய்யப்படலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில்விஜயகலா கைது செய்யப்படுவதைத் தடுக்க அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் உதவி கோரியுள்ளார் என சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சுவிஸ் குமார் என்பவரை புங்குடுதீவு பிரதேச மக்கள் சுற்றிவளைத்த போது அவரைவிடுவித்து தப்பிச் செல்வதற்காக உதவியமை தொடர்பில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்ஹ இந்திரதிஸ்ஸ வினால் நீதிமன்றத்தில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் விஜயகலாவிடம் விசாரணை மேற்கொள்ளுமாறு குற்ற விசாரணை திணைக்களத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதற்கமைய கடந்த மாதம் 31ஆம் திகதி குற்றவிசாரணைத் திணைக்களத்திற்கு வருகை தருமாறு இராஜாங்க அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டது.

எனினும், அதற்கான அறிவித்தல் தனக்கு கிடைக்கவில்லை என அவர் ஊடகங்களுக்கு தெரிவித்ததுடன், விசாரணையை அவர் புறக்கணித்துள்ளார்.

அத்துடன் கடந்த வாரம் முழுவதும் குற்ற விசாரணைத் திணைக்களத்தில் விஜயகலா ஆஜராகவில்லை.

எப்படியிருப்பினும் இராஜாங்க அமைச்சர் தனக்கு நெருக்கமான ஒருவரிடம், தற்போதைய நெருக்கடி தொடர்பில் பிரதமர் மற்றும் அமைச்சர் சாகலவிடம் தெரிவித்துள்ளேன். அச்சப்பட ஒன்றும் இல்லை என அமைச்சர் சாகல என்னிடம் குறிப்பிட்டார். என விஜயகலா மகேஸ்வரன் கூறியுள்ளார் என்று சிங்கள ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

எப்படியிருப்பினும் இராஜாங்க அமைச்சர் விஜயகலாவிடம் இது தொடர்பில் குற்ற விசாரணைத் திணைக்களம் விசாரணை மேற்கொள்வதற்கு மந்தமான நிலைமைகடைப்பிடித்து வருகிறது என்றும், அமைச்சர் சாகலவின் அழுத்தப் பிரயோகமே அதற்குக் காரணமாக இருக்கலாம் எனவும் அந்த ஊடகம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.(க)

## இலங்கைப் பாதுகாப்புச் செயலருடன் சீனப் பாதுகாப்பு ஆலோசகர் சந்திப்பு!





கொழும்பு, ஓக. 06 இலங்கையில் உள்ள சீனத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் கேணல் சூ ஜியான்வேய் நேற்று முன்தினம் இலங்கைப் பாதுகாப்புச் செயலர், கபில வைத்தியரத்னவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன் போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளன எனத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாந்தோட்டைத்துறைமுகத்தின் 70 வீத உரிமையைச்சீன நிறுவனம் பெற்றுள்ள நிலையிலும், சீன இராணுவத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த மாதஇறுதியில் கொண்டாடப்பட்ட நிலையிலும், சீனக் கடற்படையின் பெரிய மிதக்கும் மருத்துவமனை இன்று கொழும்புத் துறைமுகம் வரவுள்ள நிலையிலும் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

காலிமுகத்திடல் விடுதியில் கடந்த ஜூலை 27ஆம்திகதி நடந்த சீன மக்கள் விடுதலை இராணுவத்தின்90 ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் உரையாற்றிய, சீனத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கேணல் சூ ஜியான் வேய், இலங்கையுடன் இராணுவ உறவுகளையும் ஒத்துழைப்புகளையும் மேலும் வலுப்படுத்திக் கொள்ளச் சீனா எதிர்பார்க்கிறது எனக் கூறியுள்ளார்.

## வெளிநாட்டுத் தூதரகம் தொடர்பில் விசாரணை நடத்த பிரதமர் உத்தரவு!



அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் நடக்கவிருந்த விவாதம் குழப்பப்பட்டதன் பின்னணியில் வெளிநாட்டுத் தூதரகம் இருந்ததா என்பது குறித்து விசாரணை நடத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைசீனநிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் உடன்பாட்டு வரைவு குறித்த விவாதம் கடந்த மாதம் 28ஆம்திகதி நாடாளுமன்றத்தில் நடக்கவிருந்தது.

எனினும், கூட்டு எதிரணியினர்குழப்பம்விளைவித்ததால், விவாதம் நடத்தப்படாமல் உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகத்தில் இருந்து வந்த தொலைபேசி அழைப்பு ஒன்றை அடுத்தே, கூட்டு எதிரணியினர் நாடாளுமன்றத்தில் குழப்பம் விளைவித்து உடன்பாடு குறித்து விவாதம் நடத்த முடியாத நிலையை ஏற்படுத்தியது என அமைச்சரவை இணைப் பேச்சாளர் தயாசிறி ஜெயசேகர கூறியிருந்தார்.

இந்த நிலையில், நாடாளுமன்ற விவாதத்தைக் குழப்பும்வகையில்வெளிநாட்டுத் தூதரகம் செயற்பட்டதா என்பதைக் கண்டறியும் விசாரணைகளை நடத்த அறிக்கை சமர்ப்பிக்குமாறு, வெளிவிவகார அமைச்சுக்கு பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

## உமாஓயாத் திட்டத்தில் பெரிய கசிவுகள்: நோர்வே நிபுணர்கள் அறிக்கை!




கொழும்பு, ஓக. 06 உமா ஓயாத் திட்டத்தில் பெரிய கசிவுப் பிரச்சினைகள் இருப்பதை நோர்வேயின் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

முன்னதாகவே ஆய்வு செய்யப்பட்டிருந்தால், திட்டத்துக்காக அமைக்கப்பட்டுள்ள சுரங்கங்களுக்குள் நீர் செல்வதைத் தடுத்திருக்க முடியும்.

அத்துடன், நீர் நிலைகளில் நீர் வற்றிப்போவதையும் தடுத்திருக்கமுடியும் என்றும் நோர்வே நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உமா ஓயாத் திட்டத்தால் பண்டாரவளை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள இயற்கைப் பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டறிவதற்கும் அதனை நிவர்த்திப்பதற்கும் நோர்வே நிபுணர் குழு ஒன்றை அரசு அழைத்திருந்தது இதற்கமைய இலங்கை வந்த நோர்வேயின் குழு தமது ஆராய்வின் இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் நேற்றுமுன்தினம் சமர்ப்பித்துள்ளது.

அதில், உமா ஓயாத் திட்டத்துக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள பெரிய இயந்திரங்கள், உரிய தன்மைகளைக் கொண்டிருக்கவில்லை.

இதன்காரணமாக சுரங்கப் பாதைக்குள் நீர் கசிவதை தடுப்பதற்காக அதன் சுவர்களை உரிய வகையில் மெழுகிட முடிந்திருக்கவில்லை.

இதற்காக உரிய உறுதியான அடைப்புப் பொருள்களும் பயன்படுத்தப்படவில்லை என்று நிபுணர் குழுவின் தலைவர் பென்ட் ஆகார்ட் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அதிகளவான நீர் சுரங்கத்துக்குள் வருவதைத் தடுக்க ஒப்பந்தக்காரர்கள் தயாராக இருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை செவிமடுத்த ஜனாதிபதி, நீர் கசிவை முழுமையாக கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய வழிவகைகளை ஆராய்ந்து அறிக்கை தருமாறு நோர்வே குழுவிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார் என ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

06.08.2017 - 12.08.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆடித் திங்கள் 22 ஆம் நாள் சதுர்த்தசி திதி இரவு 10.28 மணி வரை. பின்னர் பூரணை. நட்சத்திரம்: உத்தராடம் பி.இ.01.46 மணி வரை. பின்னர் திருவோணம். அமிர்தயோகம் முழுவதும். பிறந்த நட்சத்திர வழிபாடு: உத்தராடம்.

ராகுகாலம்:- மாலை 4.56 மணி முதல் 6.30 மணி வரை.

சுபநேரம்:- காலை 9.05 மணி முதல் 10.35 மணி வரை.

திவசம் செய்ய வேண்டிய திதி:- ஆடி மாத வளர்பிறை சதுர்த்தசி.

**சந்திராட்டமநாள்:** மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் சுப கருமங்களில் கலந்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

**கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரக்குருக்கள் ஜே.பி.**



## மேஷம்:

மத்திமமான வாரம் ஆகும். பணவரவு சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகமாகும். தொழிலில் நிம்மதி, ஈடுபாடற்ற சூழல் ஏற்படும். குடும்பத்தில் ஒற்றுமை அளவுடன் இருக்கும். பயணத்தின் போது பொருள்களைப் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

ஆரோக்கியம் சற்று பின் தங்கி இருக்கும். மருத்துவச் செலவுகள் உண்டாகும். எடுக்கும் புதிய முயற்சிகள் தடைப்படும். நண்பர்கள், உறவினர்களின் உதவிகள் குறையும். மாணவர்கள் கல்வியில் அக்கறை எடுக்க வேண்டும். கொடுக்கல் வாங்கலில் அவதானம் தேவை.



## ரிஷபம்:

ஆக்கபூர்வபலன்கள்காணப் படுகின்றன. தனவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம்காணப்படும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் அபரிமிதமாக வளர்ச்சியடையும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள்.

பெண்களுக்கு அரச உதவியால் சுய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். பிள்ளைகளின் வளர்ச்சி முன்னேற்றப் பாதையில் செல்லும். உடலாரோக்கியம் சுறுசுறுப்புடனும் தெம்புடனும் காணப்படும். உத்தியோகத்தர்களின் திறமைகள் வெளிப்படும். தொழிலாளர்கள் தொழிலில் முன்னேற்றமடைவார்கள்.



## மிதுனம்:

கவலையான வாரம் ஆகும். தனவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தோல்வியடையும். வியாபாரத்தில் முதலீடுகளில் நஷ்டம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும்.

தொழிலாளர்களுக்கு கடின உழைப்புடன் பாடுபட்டதன் பலன்குறையும். வாகனத்தில் செல்லும்போது விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. உடல் நலன் பாதிப்படையும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். நெருங்கிய உறவினர் ஒருவரின் துக்கச் செய்தியைக் கேட்க நேரும்.



## கடகம்:

சம பலன்கள் உள்ள வாரமாகும். பொருள் வருவாய் இருப்பினும் செலவுகள் அளவுக்கதிகமாகும். குடும்ப உறவு பேணப்படும். தேக நிலை பாதிப்படையும்.

உறவினர் வரவால் களிப்பும் செலவுகளும் அதிகரிக்கும். வீடு, வாகனத் திருத்தச் செலவுகளும் உண்டாகும். புதிய தொழில் முயற்சியைக் கைவிடவும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும். திருமண காரியங்கள் இழுபறியின் பின் ஒப்பேறும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறையும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.



## சிம்மம்:

மேன்மையான வாரம் ஆகும். பணம் தாராளமாக புழங்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உத்தியோகத்தில் மேன்மை உண்டாகும். பிள்ளைகளால் பெருமையும், மகிழ்ச்சியும் உண்டாகும். சகோதர உறவு வலுவடையும்.

மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கௌரவப் பதவிகள் கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு புகழ் மேலோங்கும். பெண்கள் செய்யும் தொழிலில் மேன்மை அடைவார்கள். கொடுக்கல், வாங்கலில் திருப்தி உண்டாகும்.



## கன்னி:

உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். ஆரோக்கியம் வெகு சிறப்பாக இருக்கும். புதிய ஆடை, நகைகள் வந்து சேரும். பணவரவைப் பொறுத்த மட்டில் உழைப்பிற்கேற்ற ஊதியம் வரும்.

சில அரிய சாதனைகளைச் செய்து நற்பெயரும், புகழும் பெற்று மகிழ்வார்கள். எல்லோரும் விரும்பும்படி நடந்து கொள்வார்கள். குடும்பச் சூழலில் ஒற்றுமை போற்றும்படி இருக்கும். மனதில் தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய தொழில் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கொள்வார்கள்.



## துலாம்:

யோசனையான வாரம் ஆகும். பணவரவில் தொய்வு நிலை ஏற்படும். குடும்ப வாழ்வில் ஒற்றுமை குறையும். உறவினர்கள், நண்பர்களுடன் அளவுடன் பழகினால் பிரச்சினைகள் வராமல் தடுக்கலாம். வியாபாரத் தொழிலில் மந்த நிலை ஏற்படும். உத்தியோகத்தர்கள் வேலையில் கவனக் குறைவால் உயர் அதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளாவார்கள்.

மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். திருமணமாகாதவர்களுக்கு மங்கல கருமம் கைகூடுவது கடினம். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.



## விருச்சிகம்:

மத்திமமான வாரம் ஆகும். வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். உடலில் ரோகங்கள் உண்டாகும். மருத்துவச் செலவுகள் உண்டாகும். உறவினர் வீட்டுச் சுபச் செலவுகளும் ஏற்படும்.

எடுக்கும் முயற்சிகளுக்குத் தடை ஏற்படும். வியாபாரம் ஏறு இறங்குமுகமாக நடக்கும். தொழிலில் கடின உழைப்பும், அலைச்சல்களும் அதிகமாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளுவுடன் பொறுப்புகளும் அதிகமாகும். யாருக்கும் பிணை போதல் கூடாது.



## தனுசு:

அனுகூலமான வாரம் ஆகும். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். வெளிநாட்டு வியாபார ஒப்பந்தங்களால் வருமானம் அதிகரிக்கும். சிலருக்கு வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு அனுகூலமாகும். சிலருக்கு திருமண காரியங்கள் மளமளவென்று நிறைவேறும்.

கலைஞர்களுக்கு வெளிநாட்டுப் பட வாய்ப்புகள் கிடைக்கும். பெண்களுக்கு அரசாங்க வழியால் தொழிற்பயிற்சிகள் கிடைக்கும். வழக்கு விவகாரங்கள் சுலபமாய்த் தீர்வடையும். மாணவர்களுக்கு உயர்கல்வி கற்பதற்கு அரச உதவிப் பணம் கிடைக்கும்.



## மகரம்:

ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வியாபாரம் ஆக்கபூர்வ முன்னேற்றமடையும். சிலர் சுய தொழிலில் மேம்படுவார்கள். மாணவர்கள் கல்வியில் முதன்மை அடைவார்கள்.

சகோதர உறவு பலப்படும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புகள் அமையும். பெண்களின் அபிலாஷைகள் நிறைவேறும். சிலர் குடும்பத்துடன் புண்ணிய ஸ்தல யாத்திரையை மேற்கொள்வார்கள். சொத்து சம்பந்தமான வழக்குகள் சுபமாய்த் தீர்வடையும்.



## கும்பம்:

குழப்பமான வாரம் ஆகும். மனதில் யோசனை, குழப்பம் அதிகரிக்கும். பணவரவு குறையும். செலவினங்கள் அதிகரிக்கும். தொழிலில் கவனக்குறைவு ஏற்படும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைப்பது கடினம். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும்.

உறவினர்களுடன் சச்சரவுகள் உண்டாகும். உத்தியோகத்தில் கௌரவக் குறைவு உண்டாகும். யாருடனும் தம் பொறுப்புகளை ஒப்படைக்காமல் தானே செய்வது சாலச் சிறந்தது. பெண்கள் எதிலும் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். பயணத்தில் கவனமாக இருத்தல் வேண்டும்.



## மீனம்:

மேன்மையான வாரம் ஆகும். பொருளாதாரம் மேன்மை அடையும். குடும்ப உறவில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். உடல் நிலை புத்துணர்ச்சி தரும். எண்ணிய கருமங்கள் திட்டமிட்டவாறு நடைபெறும்.

உத்தியோகத்தர்களுக்கு உரிய கௌரவம் கிடைக்கும். வர்த்தகத்துறையினர் முதலீடுகளால் லாபமீட்டும் சந்தர்ப்பங்கள் உருவாகும். அந்நியத் தொடர்புகள் நற்பலனைத் தரும். திருமண முயற்சிகள் சுலபமாகக் கைகூடும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும்.

# தமிழர்கள் அனுபவித்த சித்திரவதைகள்

## வெறும் வார்த்தைகளில் விவரிக்க முடியாதவை!

செவ்வி - Taylor Dibbert
வழிமூலம் - The Diplomat
மொழியாக்கம் - நித்தியபாரதி

**அனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக பிரான்சிஸ் ஹரிசன் பணியாற்றி வருகிறார். இவர் சிறி லங்காவில் இடம் பெற்ற இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பாக நூல் ஒன்றையும் வெளியிட்டிருந்தார். அனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டத்தால் வெளியிடப்பட்ட புதிய அறிக்கை தொடர்பாக பிரான்சிஸ் ஹரிசன் TheDiplomat ஊடகத்திற்கு நேர்காணல் ஒன்றை வழங்கியுள்ளார்.**

**கேள்வி:** அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான நிகழ்ச்சித் திட்டத்தால் அண்மையில் புதிய அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் என்ன?

**பதில்:** சிறிலங்காவில் 2016 தொடக்கம் 2017 வரையான காலப் பகுதியிலும் வெள்ளைவான் கடத்தல்கள், சட்ட ரீதியற்ற தடுப்புகள், சித்திரவதைகள் போன்றன தொடர்ந்துள்ளன. சிறிலங்காவின் பாதுகாப்புப் படையினரின் ஒரு குழுவினர் ஆட்களைக் கடத்துகின்றனர். பிறிதொரு குழுவினர் சித்திரவதைகளை மேற்கொள்கின்றனர். மூன்றாவது குழுவினர் கடத்தப்பட்டவர்களை கப்பம் வாங்கிய பின் விடுவிக்கின்றனர். பலவந்தமாகக் கடத்தப்படும் தமிழர்கள் இதற்கென சிறப்பாக அமைக்கப்படும் சிறைக்கூடுகளில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

சிறிலங்கா பாதுகாப்புப் படையைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் சித்திரவதைகளில் ஈடுபடுகின்றனர். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி இவ்வாறு தடுத்து வைக்கப்படுபவர்களைக் கப்பம் பெற்று விடுவிப்பதற்கு ஏற்பாடு செய்வதுடன் இவர்கள் விடுவிக்கப்பட்ட பின்னர் விமான நிலையத்திற்கூடாக சட்ட ரீதியற்ற வகையில் இவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகிறது. இராணுவ மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தமது சித்திரவதைக் கூடமாகத் தற்போதும் ஜோசப் முகாமைப் பயன்படுத்தி வருகின்றனர். இவற்றை விட வேறு இரகசியமான சித்திரவதைக் கூடங்களும் உள்ளன.

போருக்குப் பின்னான காலப் பகுதியில் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவோரின் குடும்பங்களைப் பார்க்கும் போது நான் அதிர்ச்சியடைந்துள்ளேன். சிலர் பல தடவைகள் அதாவது மூன்று அல்லது நான்கு அல்லது அதற்கும் மேலாக பல தடவைகள் மீண்டும் மீண்டும் வெவ்வேறு தடவைகளில் சித்திரவதைகளுக்கு ஆளாகியுள்ளனர். இவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் இவர்கள் பிரித்தானியாவில் தஞ்சம் புகுகின்றனர். குறிப்பாக சிறிலங்காவில் இடம்பெற்ற பயங்கரமான யுத்தம் மற்றும் சித்திரவதைகளுக்கு உள்ளாகும் தமிழ் மக்கள் இதன் பின்னர் பிரித்தானியாவில் தஞ்சம் கோரும் போது அவர்கள் மனவடுக்களுடன் உள்ளமை உறுதிப்படுத்தப்படுகிறது.

இதனால் இவ்வாறான சித்திரவதைகளிலிருந்து தப்பிப் பிழைத்து பிரித்தானியாவில் தஞ்சம் கோரிய 30 பேருக்கு உளவளத்துணையை மேற்கொள்வதற்கான சிறியதொரு திட்டத்தை நான் அண்மையில் நடைமுறைப்படுத்தியிருந்தேன். இவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஆலோசனைகள் வழங்கப்பட்டு, சுவையான உணவும் வழங்கப்பட்டது. இதில் கலந்துகொண்டவர்கள் எவ்வாறான துன்பங்களை அனுபவித்தனர் என்பதை வெறும் வார்த்தைகளில் விவரிக்க முடியாது. சித்திரவதைகளிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களுக்கு முதலில் அவர்களின் உள




உடல் நலன்களை மேம்படுத்துவதற்கான பணிகள் ஆற்றப்பட வேண்டும்.

தற்போது நாங்கள் சந்தித்தவர்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் தமது சுயவிருப்புடன் இணைந்து கொண்டு பயிற்சிகளைப் பெற்று பல ஆண்டுகள் அதில் பணியாற்றியவர்கள் மிகவும் குறைவானவர்களாவர். ஆனால் புலிகள் அமைப்புடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாகியவர்களே அதிகமாக உள்ளனர்.

நாட்டின் எதிர்காலப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளனர் என்கின்ற குற்றச்சாட்டின் பேரில் புலிகள் அமைப்பின் மூத்த உறுப்பினர்களை சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கியுள்ளனர் என்பதற்கு அப்பால் சிறிலங்காவின் குடிமக்கள் என்ற வகையில் தமது ஜனநாயக உரிமைகளைத் தருமாறு கோரும் தமிழ் மக்கள் அனைவரும் சிறிலங்கா அரசால் இலக்கு வைக்கப்படுகின்றனர் என்பது தற்போது தெளிவாகிறது. தமிழ் மக்கள் தமது உரிமைகளைத் தருமாறு கோரும் போது இவர்கள் மீண்டும் புலிகள் அமைப்பை ஆரம்பிக்கப் போகிறார்கள் எனக் குற்றம் சாட்டப்படுகின்றனர் என்பதே உண்மையாகும்.

**கேள்வி: தாங்கள் இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கு எவ்வளவு காலம் எடுத்தது?**

**பதில்:** சிறிலங்காவில் 2016 தொடக்கம் 2017 வரையான காலப் பகுதியில் சித்திரவதைகளுக்கு உள்ளான 24 பேரிடம் இருந்து தகவல்களைப் பெற்று இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2015இல் சித்திரவதைகளுக்கு உள்ளாகிய 33 பேரிடமிருந்தும் தகவல்கள் பெறப்பட்டன. ஒவ்வொருவரிடம் இருந்தும் அவர்கள் சந்தித்த பிரச்சினைகளைக் கேட்டறிவதற்கு 3-4 நாள்கள் எடுத்தன. கடந்த 30 மாதங்களாக நாங்கள் இதற்காகப் பணியாற்றியுள்ளோம். நாங்கள் பெற்றுக் கொண்ட தகவல்களை ஆராய்ந்து அவற்றை அறிக்கையாக்கியுள்ளோம்.

சிறிலங்காவில் 2016 தொடக்கம் 2017 வரையான காலப் பகுதியில் சித்திர வதைகளுக்கு உள்ளான 24 பேரிடம் இருந்து தகவல்களைப் பெற்று இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2015 இல் சித்திரவதைகளுக்கு உள்ளாகிய 33 பேரிடமிருந்தும் தகவல்கள் பெறப்பட்டன. ஒவ்வொருவரிடம் இருந்தும் அவர்கள் சந்தித்த பிரச்சினைகளைக் கேட்டறிவதற்கு 3-4 நாள்கள் எடுத்தன. கடந்த 30 மாதங்களாக நாங்கள் இதற்காகப் பணியாற்றியுள்ளோம். நாங்கள் பெற்றுக் கொண்ட தகவல்களை ஆராய்ந்து அவற்றை அறிக்கையாக்கியுள்ளோம்.

**கேள்வி: சித்திரவதைகள், கடத்தல்கள், சட்டரீதியற்ற தடுப்புகள், பாலியல் வன்முறைகள், தண்டனைகள் போன்றன தொடர்பாக சிறிலங்கா அரசு ஆக்கபூர்வமானதொரு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு இவ்வாறான மீறல்கள் தடையாக இருக்கும் என்பதைச் சிறிலங்கா அரசு உணர்ந்து கொண்டு அடுத்த சில மாதங்களில் இவற்றை சீர்செய்வதற்கு எவ்வாறான சாதகமான நகர்வுகளை எடுக்க முடியும் என தாங்கள் கருதுகிறீர்கள்?**

**பதில்:** சிறிலங்கா அரசின் முன் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளை அரசியல் ரீதியாக அல்லாது நிர்வாக ரீதியாகப் பிரித்துள்ளேன். இவை வெறும் தனிப்பட்ட தெரிவுகளாகும். ஆகவே முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய சில பரிந்துரைகளாக நான் பின்வருவனவற்றைத் தெரிவு செய்துள்ளேன்:

★ சனல்-4 ஊடகத்தால் வெளியிடப்பட்ட ‘போர் தவிர்ப்பு வலயம்’ ஆவணப்படம் சிங்கள மொழியில் சிறிலங்கா ரூபவாகினி கூட்டுத்தாபனத்தின் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட வேண்டும்.

★ நாட்டின் அதிபர், பிரதமர் மற்றும் இராணுவப் படைகளின் தளபதிகள் பலாலி விமான நிலையத்திற்குச் செல்வதுடன் அங்கிருக்கும் பல நூற்றுக் கணக்கான இராணுவ வீரர்களுக்கு இந்த ஆவணப்படத்தைக் காண்பிப்பதுடன் அவர்களுக்கு இவ்வாறான பாலியல் வன்முறைகளில் மேலும் ஈடுபடக்கூடாது என்பதை அறிவுறுத்த வேண்டும்.

★ உள்ளகக் கண்காணிப்பு சேவைகளுக்கான ஐ.நா அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட 2004-07 வரையான காலப்பகுதியில் ஹெய்ற்றியில் சிறிலங்கா அமைதி காக்கும் படைகளால் மேற்கொள்ளப்பட்ட சிறுவர் பாலியல் மீறல்கள் தொடர்பான பதிப்பை அதிபர் மற்றும் பிரதமர் ஆகியோர் வெளியிடுவதுடன் சிறிலங்காப் பாதுகாப்பு வீரர்கள் அல்லது அதிகாரிகள் இவ்வாறான குற்றங்களில் ஈடுபடும் போது தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்பது தொடர்பாகவும் அறிவிக்க வேண்டும்.

★ ஐ.நா அமைதி காக்கும் பணிக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் சிறிலங்கா இராணுவ வீரர்களின் மற்றும் பெண் வீராங்கனைகளின் பெயர்கள் மற்றும் அவர்களின் ஒளிப்படங்கள் வெளியிடப்பட வேண்டும்.

★ போர்க் குற்றச்சாட்டுக்கள் இடம் பெறவில்லை என்பதை ஜனாதிபதி மற்றும் பிரதமர் மறுப்பதை நிறுத்த வேண்டும். அத்துடன் போர்க் கதாநாயகர்கள் என இராணுவ வீரர்களைப் போற்றுவதையும் நிறுத்த வேண்டும்.

★ கலப்பு நீதிப் பொறிமுறை தொடர்பாக வெளியிடப்பட்ட பரிந்துரைகள் அடங்கிய ஆலோசனைச் செயலணி அறிக்கையை நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அமுல்படுத்த வேண்டும்.

★ மே 18, 2009 தொடக்கம் சரணடைந்தவர்களின் விவரத்தை முல்லைத்தீவு நீதிமன்றில் ஒப்படைக்குமாறு 58வது டிவிசனிற்குக் கட்டளையிட வேண்டும்.

(24 ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kālaikkathir



# இலங்கை – இந்திய ஒப்பந்தமும் இன்றைய அரசியல் தீர்வும்

செல்வரட்ணம் சிறிதரன்

இலங்கையில் தமிழர்கள் மீது ஓர் இன அழிப்பு நடவடிக்கையாக 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம் பெற்ற இனக்கலவரத்தின் பின்னணியில் 1987 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வுக்கான வழி திறந்திருந்தது.

அதன் பின்னர், முப்பது ஆண்டுகளின் பின்னர் மீண்டும் ஒரு தடவை புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் மூலம் அரசியல் தீர்வுக்கான ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக நம்பப்படுகின்றது. அரசியல் ரீதியான அந்த வாய்ப்புக் குறித்துத் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை நம்பிக்கை ஊட்டிவருகின்றது. இது, அரசியல் உரிமைகளுக்காக நடத்தப்பட்ட ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, 2009ஆம்ஆண்டு,முள்ளிவாய்க்காலில் இன அழிப்பை முனைப்பாகக் கொண்டு நடத்தப்பட்ட மோசமானதோர் இராணுவ நடவடிக்கையின் பின்னணியில் உருவாகியுள்ள அரசியல் நிலைமையாகும்.

தனிநாட்டுக்கான அங்கீகாரத்தை, 1977 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழ் மக்கள் ஏகோபித்த ஆதரவை வழங்கியிருந்தார்கள். ஆனால், அந்தத் தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு நடைமுறையில் சாத்தியமான அரசியல் ரீதியாக சுயமாக வடிவமைக்கப்பட்ட செயற்திட்டங்களோ அல்லது இராஜதந்திர வழிமுறைகள் சார்ந்த அணுகுமுறைகளோ கூட்டணித் தலைவர்கள் வசம் இருக்கவில்லை.

உணர்ச்சிகரமான ஒரு சூழலில் தமிழ் மக்களை எழுச்சிபெறச் செய்து வாக்களிப்பதற்கு ஊக்குவிப்பதற்கான தேர்தல் நலன்சார்ந்த ஒரு திட்டமாகவே தனிநாட்டு கோரிக்கை முன் வைக்கப்பட்டிருந்தது எனலாம்.

## ஆறாவது திருத்தச் சட்டம்

ஏனெனில் தமிழர் விடுதலைக் கூட்டணியை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெறத்தக்க வகையில் தமிழ் மக்கள் 1977 ஆம் ஆண்டு தேர்தலில் வாக்களித்து வெற்றிபெறச் செய்திருந்தார்கள். தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் இது தமிழ் மக்களுக்கு நாடாளு மன்றத்தில் கிடைத்திருந்த உச்சகட்ட அந்தஸ்து நிலைமையாகும். அத்தகையதோர் அரசியல் அந்தஸ்தைப் பெற்றிருந்த போதிலும், உள்நாட்டிலோ அல்லது சர்வதேசத்தின் உதவியுடனோ தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியால் முடியாமல் போயிருந்தது.

தனிநாட்டுக்கான கோரிக்கையை முன்வைத்து தேர்தலில் வெற்றி பெற்றிருந்த போதிலும், அது குறித்து செயற்பட முடியாத வகையில், இலங்கை அரசமைப்பில் 6 ஆவது திருத்தச் சட்டம் அப்போதைய அரசால் கொண்டு வரப்பட்டிருந்தது. நாட்டுப் பிரிவினைக்கு எதிரான இந்த திருத்தச் சட்டம் நாட்டின் ஒருமைப்பாட்டை சட்டரீதியான அதிகாரத்துடன் வலியுறுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசமைப்பை ஆதரித்துப் பாதுகாப்பதுடன், இலங்கையில் தனிநாடு ஒன்றை உருவாக்குவதற்கு, ஆதரவளிக்கவோ, ஊக்குவிக்கவோ, நிதியுதவி அளிக்கவோ, அதற்கான பிரசாரத்தை முன்னெடுக்கவோ மாட்டேன் என உறுதியளித்து சத்தியம் செய்து கையெழுத்திட வேண்டும் என்று 6 ஆவது திருத்தச் சட்டம் வலியுறுத்தியுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகளின் உறுப்பினர்கள், அமைச்சர்கள், அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் பணயாற்றும் சகலரும் இந்த சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும் என்று இந்தச் சட் டம் கூறுகின்றது. அவ்வாறு சத்தியப் பிரமாணம் செய்யாதவர்கள் அந்தந்தப் பதவிகள் பொறுப்புக்களில் இருந்து நீக்கப்படுவார்கள் என்றும் அந்தச் சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கின்றது.

## ஆரம்பக் கட்ட ஆயுதப் போராட்டம்

வட்டுக்கோட்டை மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்து தமிழர் விடுதலைக்கூட்டணி 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அமோகமாக வெற்றிபெற்றிருந்தது. அதே வேளை, 70களின் ஆரம்பத்திலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டச் செயற்பாடுகளை இலைமறை காயாகத் தொடங்கியிருந்தார்கள். இதனால் அங்கொன்றும் இங்கொன்றுமாக துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்களும் வன்முறைகளும் இடம் பெறத் தொடங்கியிருந்தன. தேர்தலில் வெற்றிபெற்று பிரதமராகப் பதவியேற்றிருந்த ஜே.ஆர்.ஜயவர்தன தனக்கு எதிரான அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் மீதான தாக்குதலைத் தொடங்கியிருந்ததையடுத்து, வன்முறைகள் வெடித்திருந்தன.



தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தேர்தலில் வெற்றிபெற்று எதிர்க்கட்சித் தலைவராகியிருந்த அமிர்தலிங்கத்திற்கும், தனிநாட்டு போராட்டத்தைக் கையில் எடுத்து வன்முறைகளில் ஈடுபட்டிருந்த தமிழ் ஆயுதக் குழுக்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்ததாகக் கருதிய ஜயவர்தன, தமிழ் இளைஞர்கள் வன்முறைகளில் ஈடுபட்டால், சிங்களவர்களும் பதிலடியாக வன்முறைகளில் ஈடுபடுவார்கள். எனவே, போர் என்றால் போர் என்று சிங்களவர்கள் செயற்படுவார்கள். இதனை நான் கூறவில்லை. சிங்கள மக்கள் கூறுகின்றார்கள் என ஜயவர்தன தெரிவித்திருந்தார்.

இத்தகைய ஒரு பின்னணியில்தான் 1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தின்போது, தமிழர்கள் தமிழகத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். கடல் கடந்து தமிழர்கள் அகதிகளாகத் தமிழகத்துக்குச் சென்றபோதிலும், தமிழ் மக்கள் விடயத்தில் ஜயவர்தன மென்போக்கிற்குப் பதிலாகப் பிடிவாதமாக வன்போக்கிலேயே நாட்டம் கொண்டிருந்தார். வரைமுறையற்ற வகையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெற்ற போதிலும், தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை அரசியல் ரீதியாகத் தீர்ப்பதற்கு ஜயவர்தன அப்போது தயாராக இருக்கவில்லை. போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று வன்முறைகளால் பாதிக்கப்பட்டு நொந்து நூலாகிப் போயிருந்த தமிழ் மக்களை நோக்கி அவர் கர்ச்சனை செய்திருந்தார்.

தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை அடக்குவதற்காக முழு அளவிலான இராணுவ நடவடிக் கையை மேற்கொண்ட ஜயவர்தன அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் இராணுவ உதவியை நம்பியிருந்தார். அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அந்த நாடுகள் குறிப்பாக அமெரிக்கா இலங்கையில் கால் பதிக்கும் என்பது இந்தியாவின் கணிப்பாக இருந்தது. அத்தகைய ஒரு நிலைமை உருவாகுமானால், இந்தியாவின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் என்று இந்தியா அச்சமடைந்திருந்தது.

இத்தகைய பிராந்திய ரீதியிலான பாதுகாப்பு அச்சத்தின் காரணமாகவே, இலங்கைத் தமிழர் விவகாரத்தில் நேரடியாகத் தலையிட்டு இலங் கையுடன் இந்தியா ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தமே இலங்கை – இந்திய ஒப்பந்தமாக, முப்பது வருடங்களுக்கு முன்னர், 1987 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவும் கைச்சாத்திட்டனர்.

## முக்கிய முன் நிபந்தனைகள்

இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்த இந்தியா, ஆயுதமேந்திப் போராடிய தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அவர்களை ஜனநாயக வழியில் திருப்புவதாக இலங்கை அரசுக்கு உறுதியளித்தது. அதேவேளை, இலங்கைக்கு முக்கியமான பல நிபந்தனைகளையும் இந்தியா விதித்திருந்தது.

பாகிஸ்தான் மற்றும் மேற்கத்தைய நாடுகளின் இராணுவ மற்றும் இராணுவ புலனாய்வாளர்களை இலங்கையில் இருந்து அகற்ற வேண்டும்.

இலங்கை தனது அயலுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளை மறுபரிசீலனை செய்து, அமெரிக்கா, பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல், தென்னமெரிக்கா போன்ற நாடுகளுடனான ஈடுபாடுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்

இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிரானதும், அந்தப் பாதுகாப்பு தொடர்பிலான விடயங்களைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி இந்தியாவுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய அந்நியசக்திகள் இலங்கையின் துறைமுகங்களையும், விமானத் தளங்களையும் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது என்று இலங்கை உத்தரவாதமளிக்க வேண்டும்.

அத்துடன், 1985 ஆம் ஆண்டு இலங்கை உத்தரவாதமளித்தவாறு, திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் கிணறு பண்ணைகளை இந்தியா பராமரிப்பதற்கு அனுமதிக்க வேண்டும். அதேவேளை, ‘வொய்ஸ் ஒவ் அமெரிக்கா’ போன்ற வானொலி ஒலிபரப்பு நிலையங்களை மேற்கத்தைய நாடுகள் தமது இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற முன் நிபந்தனைகளை இந்தியா விதித்திருந்தது.

இந்த நிபந்தனைகள் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்குப் பின்புலத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடாக இருந்தது. இந்த நிபந்தனைகள் இலங்கையைப் பொறுத்தமட்டில் அதிக பட்சமாக இருந்த போதிலும், இராஜ தந்திர ரீதியில் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண்பதில் இந்தியா கொண் டிருந்த நாட்டத்தை இலங்கை நன்கு புரிந்து கொண்டிருந்தது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

> தனிநாட்டுக்கான கோரிக்கையை முன்வைத்து தேர்தலில் வெற்றி பெற் றிருந்த போதிலும், அது குறித்து செயற்பட முடியாத வகையில், இலங்கை அரசமைப்பில் 6 ஆவது திருத்தச் சட்டம் அப்போதைய அரசால் கொண்டு வரப்பட்டிருந்தது.



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய ‘போரும் சமாதானமும்’ என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

‘சுதந்திர வேட்கை’ என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் ‘Will To Freedom’ என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் ‘தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு’ என்ற பீடிகையுடன் வெளியானது.



56




## அத்தியாயம் - IV

## மூத்த தளபதிகளுக்கு ஏற்பட்ட அவலம்

கைது செய்யப்பட்ட போராளிகளை கொழும்புக்கு கொண்டுவர வேண்டும் என்று ஜெயவர்த்தன அரசும், குறிப்பாகப் போர் வெறி பிடித்த தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் பிடிவாதமாக இருந்தார்கள். ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னதாக புரிந்த குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்யப்போவதாகக் கூறினார்கள். குமரப்பாவும், புலேந்திரனும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் மூத்த தளபதிகளாகத் திகழ்ந்தவர்கள். பல சமர்களில் வெற்றி வாகை சூடியவர்கள். கிழக்கு மாகாணத் தமிழ் மக்களால், போர்க்கள நாயகர்களாக உயர்ந்து ஏற்றப்படுபவர்கள். புகழ் பெற்ற இந்தக் கெரில்லாத் தலைவர்களைத் தேடி வேட்டையாடப் பல ஆண்டுகளாக முயற்சித்துத் தோல்வி கண்ட லலித் அத்துலத் முதலி, இந்தத் தளபதிகள் தமது படையினரால் கைதாகிக் காவலில் இடப்பட்டமை, தமது அதிஷ்டம் என்றே கருதினார். கொடுமைக்குப் பெயர் பெற்றவர்களும் லலித் அத்துலத் முதலியின் கீழ் இயங்குபவர்களுமான புலனாய்வுப் பிரிவினரிடம் விசாரணைக்காக எமது போராளிகள் கொழும்புக்கு அனுப்பப்படுவார்களானால், அவர்களுடைய உயிருக்குப் பேராபத்து நேரும் என்பதை நாம் முழுமையாக உணர்ந்தோம். அவர்களைப் பழிவாங்க வேண்டும் என்று லலித் அத்துலத் முதலி எவ்வளவு வெறியாக இருந்தார் என்பதும் எமக்குத் தெரியும். ‘விசாரணை’ என்பது சிறிலங்கா காவல் துறை அதிகாரத்தில் வேறு அர்த்தம் கொண்டது. அது சித்திரவதையைக் குறிக்கும். மேலும் விடுதலைப் புலிகள் என்றால், எழுந்தமானக் கொலைத் தீர்ப்பு! சிங்களக் காவல்துறையினரிடமும் இராணுவ அதிகாரிகளிடமும் அகப்படும் தடுப்புக் காவல் கைதிகளின் மனித உரிமை மீறல்களின் கறைபடிந்த வரலாறுகள் எமக்குத் தெரியுமாதலால் இப்போது காவலில் இடப்பட்டிருந்த எமது போராளிகளும், சித்திரவதைக்கும் எழுந்தமானப் படுகொலைக்கும் உள்ளாவார்கள் என்பதில் எமக்குச் சந்தேகம் இருக்கவில்லை.

அமைதிப்படை அனுமதியோடு, குமரப்பாவையும், புலேந்திரனையும் ஏனையோரையும் பாலா சந்தித்தார். இவர்களில் பெரும்பாலானவர்கள் எமக்கு அறிமுகமானவர்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய கதி பற்றி பாலா எடுத்துரைத்தார். அவர்கள் அதிர்ச்சியும் சீற்றமும் அடைந்தார்கள். விசாரணைக்கு என்று தாம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படுவார்களானால் சித்திரவதை, அடுத்து மரணத்தை அவர்கள் சந்திக்க நேரும் என்பதை உணர்ந்தார்கள். தங்கள் முடிவை அவர்கள் தம்மிடையே விவாதித்து, ஏகமனதான தீர்மானத்துக்கு வந்தார்கள். தங்கள் தலைவர் பிரபாகரனுக்கு அவர்கள் எழுதிய கடிதங்களில் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். துயரமும் கொடுமையும் நிறைந்த இந்த நிகழ்ச்சித் திருப்பங்களை பிரபாகரனிடம் விவரித்த பாலா, கடிதங்களையும் ஒப்படைத்தார். ஏகமனதாகவும், இரகசியமாகவும் அந்தப் போராளிகள் மேற்கொண்ட முடிவை, அவர்களுடைய கடிதங்கள், விடுதலைப் புலித் தலைவருக்குக் கூறின. விசாரணை என்ற போர்வையில் காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைக்கும், அநேகமாக மரணத்துக்கும் சிங்கள அரசால் தாம் உள்ளாக்கப்படுகின்றமையைக் காட்டிலும், விடுதலைப் புலி மரபுப்படி, தம் உயிரைத் தாமே மாய்க்கத் தாம் விரும்புகின்றனர் எனத் தங்கள் தலைவருக்குத் தெரிவித்திருந்தார்கள். சிங்கள இனவாத அரசின் நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து கொடுப்போமேயானால், அது தங்கள் எதிரிக்கு எதிராக நடத்தும் தற்காப்புப் போரின் நீண்ட, உறுதியான வரலாற்றைக் கறைபடுத்திவிடும் என்றும், அதற்கு நேரெதிராக, கௌரவமான மரணத்தைத் தழுவத் தாம் விரும்புகின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். சயனைட் குப்பிகளை அனுப்பி வைக்குமாறும் அவர்கள் கேட்டிருந்தார்கள்.

இந்தச் சம்பவங்களின் படுகேடான திருப்பம், பிரபாகரனுக்குக் கடுஞ்சீற்றத்தையும், ஆழமான ஏமாற்றத்தையும் கொடுத்திருந்தன. தமிழ்ப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டும் பொறுப்பு அமைதிப்படையினது என்று அவர் கருதினார்; பொது மன்னிப்புக்கு அமைவாக மன்னிப்புப் பெற்ற போராளிகளை மீட்டெடுக்க வேண்டியதும் இந்திய இராணுவ அமைப்பின் பொறுப்பு என்றும் அவர் நம்பினார். ஆகவே, அவர்களை மீட்டெடுக்குமாறு டிக்சிட்டை வெகுவாக நிர்ப்பந்திக்குமாறு அவர் பாலாவை கேட்டுக் கொண்டார். மறுநாள் காலை, பலாலி விமானத் தளத்துக்கு விரைந்த பாலா, கொழும்பில் இருந்த டிக்சிட்டுடன் தொடர்பு கொண்டார். திலீபன் விவகாரத்தை விட மிகவும் பாரதூரமான கெடுதி ஒன்று உருவெடுத்திருப்பதை பாலா அவருக்கு விளக்கினார். இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையே நிலவும் உறவில் பெரியதொரு நெருக்கடி ஏற்படக் கூடாது என்றால், விடுதலைப் புலிப் போராளிகளை விடுவித்தாக வேண்டும் என்றும் கெஞ்சினார்; நியாயம் உரைத்தார்; எச்சரித்தார். இதனால் ஏற்படப்போகும் பிரதிகூலங்கள் தமிழர் தாயகத்தில் பூகம்பத்தை ஏற்படுத்தி அமைதியைச் சிதறடிக்கலாம் என்று டிக்சிட்டுக்கு உணர்த்தினார். இதனால் டிக்சிட், கலவரம் அடைந்தார் என்றும், போராளிகளைக் கொழும்புக்குக் கொண்டு செல்லும் முயற்சியைக் கைவிடுமாறு ஜெயவர்த்தனவை நிர்ப்பந்தித்தார் என்றும், எப்படியாயினும் அவருடைய முயற்சி வெற்றியளிக்கவில்லை என்றும் பாலா என்னிடம் கூறினார். நிலைமையை மேலும் மோசமாக்கியது என்னவென்றால், டிக்சிட்டுக்கும் அமைதிப்படைத் தளபதிக்கும் இடையே நிலவிய சுமுக மற்றதும் நலிவடைந்ததுமான உறவாகும். இந்திய இராஜதந்திரியின் ஆணைகளை ஏற்க அந்தத் தளபதி எடுத்த எடுப்பிலேயே மறுத்தார். நேரம் ஓடிக் கொண்டிருந்தது. புதுடில்லியின் அதிகாரபீடத்துக்கு உண்மையான கொந்தளிப்பு நிலையை எடுத்துரைக்க டிக்சிட் தவறிவிட்டார். மாறாக, சிறிலங்கா போர் அமைச்சருக்கு முழு ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கும் ‘கிழட்டு நரி’ தமது செல்வாக்கைப் பிரயோகிக்கலாம் என்று எண்ணி டிக்சிட் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டார். இரண்டு ஆண்டுகளின் பின் அரசுத் தலைவர் பிரேமதாச காலத்தில், கொழும்பு அரசுடன் நாம் பேச்சு நடத்திக் கொண்டிருந்த வேளையில், ஜெயவர்த்தனவின் கடும் போக்குக்கு லலித் அத்துலத் முதலியே பிரதான காரணர் என்று ஜனாதிபதி பிரேமதாசவிடம் இருந்தே அறிந்தோம். பிடிவாத தீர்மானத்துடன் இயங்கிய தேசியப் பாதுகாப்பு அமைச்சரே அரசுத் தலைவரை ஆட்டிப் படைத்தார் என்றும், விடுதலைப் புலிப் போராளிகளைக் கொழும்புக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்ற தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால், தாம் பதவி விலகிவிடுவார் என்றும் அவர் மிரட்டியிருந்தார் என்று பிரேமதாச விவரமாகக் கூறியிருந்தார். இறுதியில் லலித்தின் மிரட்டலுக்கு வளைந்து கொடுத்த ஜெயவர்த்தன, இந்தியத் தூதுவரின் வேண்டுகோளுக்கு இசைய மறுத்திருக்கிறார். போராளிகளின் விடுதலையை வென்றெடுக்கத் தாம் கொழும்பு அரசிடம் மேற்கொண்ட முயற்சி தோற்றுவிட்டதாகவும், ஒக்ரோபர் மாதம் 5 ஆம் நாள் மாலையில், அவர்களைக் கொழும்புக்கு விமானம் மூலம் கொண்டு செல்ல முடிவாகி இருப்பதாகவும் பாலாவிடம் டிக்சிட் தெரிவித்திருக்கிறார்.

இந்த இறுதி முடிவு பற்றிக் கேள்விப்பட்டதும் பிரபாகரன் அடக்க முடியாச் சினம் கொண்டார். தடுப்புக் காவலில் உள்ள தம் போராளிகளின் இறுதி விருப்பத்தை நிறைவேற்றுவது தமது கடமை என்று அவர் உணர்ந்தார். பிரபாகரனும் அவருடைய தளபதிகளும் தங்கள் கழுத்தில் இருந்த சயனைட் குப்பிகளைக் கழற்றி, பாலாவின் கழுத்திலும், மாத்தையாவின் கழுத்திலும் சூட்டினார்கள். காவலில் இருக்கும் போராளிகளிடம் அவற்றை ஒப்படைக்குமாறு ஆணையிடப்பட்டது. போராளிகள் கொண்டு செல்லப்படும் நாளன்று, தயக்கத்தோடும், மனமின்றியும், சயனைட் குப்பிகளைக் கழுத்திலே மாலையாக அணிந்த வண்ணம், பாலாவும், மாத்தையாவும் அவர்களைப் போய்ச் சந்தித்தார்கள். குமரப்பா தமது மனைவிக்கென்று சில பணிப்புரைகளைத் தெரிவித்தார். புலேந்திரனும் தனது மனைவிக்குச் செய்தி வழங்கினார். திருமணமாகி இரண்டு சின்னஞ்சிறு குழந்தைகளுக்குத் தந்தையாக இருந்த கரன், தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய ஆவலை வெளியிட்டார். விடுதலைப் புலிப் போராளிகளின் முடிவு இதுவே என்றாயிற்று. கொழும்புக்கு விமானம் புறப்படச் சில நிமிடங்களே இருந்தபோது, குமரப்பாவும் புலேந்திரனும் அவர்களுடைய கூட்டாளிகள் பதினைந்து பேரும் ஒரே வேளையில் குப்பி கடித்தார்கள். அவர்களைச் சூழ நின்ற அரசபடையினர் தம் கண்முன்னே நிகழும் விபரீதத்தைக் கண்டதும் அவர்கள் மீது ஆத்திரத்துடன் பாய்ந்து கூட்டுத் தற்கொலையைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கோடு துப்பாக்கி முனைகளால் அவர்களை அடித்துத் தாக்கியிருக்கிறார்கள். ஆனால், கணப்பொழுதினுள் எல்லாமே முடிந்து விட்டது. குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு போராளிகள் அதே இடத்தில் உயிர்ப் பலியானார்கள். ஐந்து பேர் இதிலிருந்து மீட்கப்பட்டு மருத்துவமனையில் உயிர் பிழைத்தார்கள்.

(தொடரும்...)




தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

அமெரிக்க வெளியுறவுத்துறை மற்றும் அதற்கு வக்காலத்துவாங்கும் போலி-இடதுகள் முன்வைத்த பிரசாரத்திற்கு நேரெதிர் விதமாக, இந்த கிளர்ச்சியாளர்கள் ஜனநாயகத்திற்கான அல்லது ''புரட்சிக்கான'' ஏதோவொரு வகைபோராட்டத்தின்பாதுகாவலர்களாக இருக்கவில்லை, மாறாக இவர்கள் வலதுசாரிவகுப்புவாதக்கைக்கூலிகளாக இருந்து, அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளைத் திட்டமிட்டு கொள்ளையடித்ததுடன், இவர்களின் தெளிவற்ற சித்தாந்தத்தை எதிர்த்த எவரொருவரையும் தலையைத் துண்டித்துப் படுகொலை செய்தனர்.

பெரிதும் அல் குவைதா இணைப்பு கொண்ட ''கிளர்ச்சியாளர்களுக்கு'' செலவிடப்பட்ட சி.ஐ.ஏ.இன்நிதியுதவிகள் மற்றும் ஆயுத உதவிகளை நிறுத்துவதென்பது, சிரியாவில் மோதல் முடிவுக்கு வருகிறது என்பதையோ அல்லது மாஸ்கோவுடன் குறிப்பிடத்தக்க எந்த சமரசத்தையோஅர்த்தப்படுத்தவில்லை, மாறாக இது ஒரு பரந்த போருக்கான தயாரிப்புகளின் பாகமாக உள்ளது.

பென்டகன், வடக்கில் பிரதானமாக சிரிய குர்திஷ் YPG போராளிகள் குழுவை உள்ளடக்கிய சிரிய ஜனநாயக படைகள் என்றழைக்கப்படுவதையும், தென்கிழக்கில் ஈராக் மற்றும் ஜோர்டான் எல்லைகள் சந்திக்கும் சிரியாவினது ஒரு மூலோபாய முக்கியத்துவம் மிக்க எல்லையான al-Tanf இல் நிறுவப்பட்டுள்ள அமெரிக்க சிறப்புப்படைத் தளத்திற்கு அருகில் சுன்னி போராளிகள் குழுக்களையும், இரண்டையும், அதன் சொந்த பினாமி படைகளாகத் தொடர்ந்து பயிற்சியளித்து, ஆயுதமளித்து வருகிறது.

**10 இரகசிய அமெரிக்கத் தளங்களின் இடங்களைக் குறிப்பிட்டும், அத்துடன் துருப்புகளின் எண்ணிக்கை மற்றும் அவை ஒவ்வொன்றும்வைத்துள்ள ஆயுதங்கள் மற்றும் தளவாடங்களின் ரகங்கள் குறித்த விரிவான தகவல்களுடன் துருக்கிய அரசு செய்தி நிறுவனம் கட்டுரை ஒன்றை பிரசுரித்தது.**




அமெரிக்க இராணுவத்தால் அமைக்கப்பட்ட பல தளங்களில் ஒன்றான இது, சிரியா மீதான இரகசியப் படையெடுப்பு மற்றும் ஆக்கிரமிப்புக்கு ஒப்பானதாகும். சிரிய குர்திஷ்களுடனான அமெரிக்கக் கூட்டணிக்கு அங்காரா ஆட்சியின் எதிர்ப்பை பிரதிபலித்து, வடக்கு சிரியாவில் உள்ள 10 இரகசிய அமெரிக்கத் தளங்களின் இடங்களைக் குறிப்பிட்டும், அத்துடன் துருப்புகளின் எண்ணிக்கை மற்றும் அவை ஒவ்வொன்றும் வைத்துள்ள ஆயுதங்கள் மற்றும் தளவாடங்களின் ரகங்கள் குறித்த விரிவான தகவல்களுடன் துருக்கிய அரசு செய்தி நிறுவனம் கட்டுரை ஒன்றை பிரசுரித்தது. ட்ரம்ப் நிர்வாகம் ஈராக் மற்றும் சிரியா இரண்டு இடங்களிலும் புதிய ''தற்காலிக''




தளங்களைக் கட்டமைப்பதற்கான ஒப்புதலுக்கு வாக்களிக்குமாறு காங்கிரஸிடம் கோரியிருந்தது.

இதற்கிடையே, சிரிய இலக்குகள் மீது பென்டகன் உயிர் ஆபத்தான விமானத் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி உள்ளது. சுதந்திரமான கண்காணிப்புகுழு Airwars குறிப்பிடுகையில் கடந்த மாதம் மட்டும் அமெரிக்க குண்டுவீச்சு மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களில் குறைந்தபட்சம் 415 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாகக் குறிப்பிடுகிறது. இந்த எண்ணிக்கை ஐயத்திற்கிடமின்றி கொல்லப்பட்ட பலரைக்கணக்கில்கொண்டிருக்கவில்லை என்பதோடு, ரக்கா மீதான அதன் முற்றுகையை அமெரிக்கா தீவிரப்படுத்தும் போது இந்த எண்ணிக்கை இன்னும் வேகமாக அதிகரிக்கக்கூடும்.

சி.ஐ.ஏ இன் திட்டத்தை கைவிடுவதானது, ரஷ்யாவுடன், வொஷிங்டன் உறவுகளை மேம்படுத்த விரும்புகிறது என்று ரஷ்யாவிற்கு வழங்கும் ஒரு ''சமிக்ஞை'' என்று ஓர் அமெரிக்க அதிகாரி கூறியதை ராய்டர்ஸ் செய்தி நிறுவனம் மேற்கோளிட்டிருந்தாலும், ஈரானுக்கு எதிராக சிறந்த போர் தயாரிப்பு செய்வதற்காக, மாஸ்கோ மற்றும் ஈரானுக்கு இடையே ஒரு பிளவை உருவாக்குவதே இதன் நிஜமான நோக்கமாகும். இதுதான், சீராக ஈரானிய செல்வாக்கு அதிகரித்து வரும் ஈராக்கிலும் மற்றும் சிரியாவிலும் அமெரிக்க இராணுவ ஆயுதத்தப்படுத்தலின் மத்திய நோக்கமாக உள்ளது.

ட்ரம்ப் நிர்வாகத்தில் கொள்கை வகுத்து வருபவர்கள், அதாவது பெரிதும் பாதுகாப்புத்துறையில் அனைத்து முக்கிய பதவிகளிலும் அமர்ந்துள்ள தளபதிகள் மற்றும் ஓய்வுபெற்ற தளபதிகளின் கூட்டம், மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியா மீதான அதன் மேலாதிக்கத்தை ஸ்தாபிப்பதற்கான இரத்தந்தோய்ந்த மற்றும் நீடித்த அமெரிக்க நடவடிக்கைக்கு ஈரானை ஒரு பிரதான தடையாக பார்க்கின்றது. அமெரிக்க இராணுவ உயரதிகாரிகளின் இந்தகூட்டம், ஈராக்கில்வொஷிங்டனின் ஆக்கிரமிப்பு போர், அப்பிராந்தியத்தில் பெரிதும் ஈரானிய செல்வாக்கைப் பலப்படுத்த உதவியது என்ற உண்மையால் குறிப்பாக கடுப்பாகி உள்ளது.

''கிளர்ச்சியாளர்களுக்கு'' உதவியை நிறுத்துவது குறித்து வொஷிங்டன் போஸ்டில்செய்தி வருவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் தான், அமெரிக்கா மற்றும் ஏனைய ஐந்து ஆட்சிகளுடன் பேரம்பேசப்பட்ட அணுசக்தி உடன்படிக்கையை ஈரான் முறையாக பின்பற்றி வருவதாக உத்தியோகபூர்வ




சான்றிதழை ட்ரம்ப் நிர்வாகம் வழங்கியது. இந்த நகர்வு வெள்ளை மாளிகையில் ஒருசில மணிநேர உட்பூசல்களுக்குப் பின்னர் வந்தது, தெஹ்ரானுக்கு எதிராக ஒருதலைபட்சமான அமெரிக்காவின் புதிய தடையாணைகளைத் திணிக்கும் ஒரு முடிவின் அடிப்படையில் மட்டுமே சான்றிதழ் வழங்க ட்ரம்ப் அரைகுறை மனதோடு ஒப்புக் கொண்டார், இதுவே கூட அந்த உடன்படிக்கையை மீறுகிறது என்பதோடு, ஒரு மோதலை தூண்டு வதற்கு வடிவமைக்கப்பட்டிருந்தது.

தெஹ்ரானை நோக்கி தண்டிக்கும் வகையிலான ஒரு கொள்கையை ஏற்பதன் மூலம் அமெரிக்க போக்கை அடியொற்றி நடக்க ஐரோப்பிய சக்திகளுக்கு அழுத்தமளிக்கும் ஒரு பிரசாரத்தையும் வொஷிங்டன் மேற்கொண்டு வருவதாகச் செய்திகள் குறிப்பிட்டன. ஆனால் அந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ள ஏனைய நாடுகள் -பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சீனா மற்றும் ரஷ்யா-அனைத்தும் ஈரானில் பெரும் வர்த்தக மற்றும் முதலீட்டு உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்ள எதிர்நோக்கி வருவதுடன், பிரெஞ்சு எரிசக்தி கூட்டுக்குழுமம் Total எரிவாயு உற்பத்தி செய்வதற்காக 1 பில்லியன் டொலர் உடன்படிக்கையை முன்நகர்த்தி வருகிறது.

ஐரோப்பா உடனான இதுபோன்ற பதற்றங்கள், ஒரு பரந்த போரை நோக்கிய வொஷிங்டனின் உந்துதலை மட்டுமே எரியூட்டும். அதன் உலகளாவிய பொருளாதார மற்றும் அரசியல் மேலாதிக்க வீழ்ச்சியை முகங்கொடுத்துள்ளதும், ட்ரம்பின் ஆளுருவில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளதுமான, ஒட்டுண்ணித்தனமான மற்றும் குற்றகரமான அமெரிக்க ஆளும் வர்க்கம், அதனால் எந்த முற்போக்கு தீர்வும் வழங்க முடியாத பொருளாதார மற்றும் சமூக நெருக் கடிகளில் இருந்து வெளிவருவதற்கு போர் ஒன்றை மட்டுமே ஒரே வழியாக காண்கிறது.

7 கோடியே 70 லட்சத்தக்கும் அதிகமான சனத்தொகை கொண்ட ஒரு



நாடான ஈரான் மீதான ஓர் அமெரிக்க போர், ஓர் அணுஆயுத மூன்றாம் உலக போருக்கான நிஜமான அச்சுறுத்தலை முன்னிறுத்துகின்ற அதேவேளையில், ஈராக் மற்றும் சிரியாவில் சிஐஏ மற்றும் பென்டகன் ஏற்படுத்திய இரத்த ஆற்றைக் கடந்து செல்லக்கூடியதாகும்.

(கேள்வி தொடரும்)



# இலங்கையில் பாரதி 37

● முருகபூபதி – ஆஸ்திரேலியா

''சந்திதெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம், சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்'' என்று பாடியிருப்பவர் பாரதியார்.

சந்தி தெருப் பெருக்குவதற்கும், சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவதற்கும் என்ன தொடர்பிருக்கிறது...? என்றுதான் நாம் கேட்போம். ஆனால், இரண்டுக்குமிடையே தொடர்பிருக்கிறது என்பதைத் தீர்க்க தரிசனமாகச் சொன்னவர் பாரதியார். இரண்டுமே தொழில்கள்தான்.

சந்திதெருப்பெருக்கும் தொழிலைச் செய்பவர்களைத் தோட்டிகள் என்றும் தீண்டத்தகாதவர்கள் என்றும் புறம் ஒதுக்கியது கீழைத்தேய சமூகம். ஆனால், அந்தத் தொழிலுக்கும் பயிற்சி இருக்கிறது என்று சொன்னது மேலை நாட்டுக் கல்வி முறை.



சந்திரனுக்குச் சென்று கால் பதிப்பதற்கும் விஞ்ஞானக்கல்வி தேவைப்பட்டது. எத்தனையோ வருடங்களுக்கு முன்னர், தீர்க்கதரிசனமாகச் செய்யும் தொழிலே தெய்வம் என்ற வாக்கிற்கு அமைய, அறிவதற்காகக் கற்றல், செயலாற்றுவதற்காகக் கற்றல், பிறரோடு சேர்ந்து வாழக்கற்றல், சுயஆளுமையுடன் வாழக்கற்றல் என்ற பிற்கால யுனெஸ்கோவின் சிந்தனையை அன்றே மக்களிடம் விதைத்தவர் மகாகவி பாரதி.

இந்த உண்மைகளைத் தொகுத்து வழங்கியிருப்பவர் இலங்கையின் மூத்த இலக்கிய விமர்சகர் கலாநிதி ந. இரவீந்திரன்.

இலங்கையில் பாரதி இயல் ஆய்வுத்துறையில் கலாநிதி ந. இரவீந்திரனின் பங்களிப்பும் முக்கியமானது. இவர் எழுதிய பாரதியின் மெய்ஞ்ஞானம் என்ற நூல் பற்றி முன்னர் ஓர் அங்கத்தில் குறிப்பிட்டுள்ளோம்.

இந்திய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று, பாரதியின் கல்விச்சிந்தனைகளைத் தொகுத்து வழங்கியிருப்பவர்தான் கலாநிதி ந. இரவீந்திரன். இதுவரையில் நான்கு பதிப்புகளைக் கண்டுவிட்ட இந்நூலில் பாரதியார், சக்கரவர்த்தினி, இந்தியா, விஜயா, சூரியோதயம், சுதேசமித்திரன் முதலான


இ.முருகையன்

பத்திரிகைகளில் எழுதிய கல்வி சார்ந்த கட்டுரைகளைத் தொகுத்து வழங்கியிருக்கிறார் இரவீந்திரன்.

கல்வியில் மறுமலர்ச்சி தோன்ற வேண்டுமென்பதற்காக யுனெஸ்கோ முன்வைத்த கோட்பாடுகளைப் பாரதியின் கல்விச்சிந்தனைகளிலிருந்தே காணமுடிகிறது என்பதை நிரூபிக்கின்றது இந்தத்தொகுப்பு நூல்.

''ஒருவர் வாழும் சமூகச்சூழல், வரலாற்று இருப்பு நிலை, சாதிய வர்க்க அமைவு, பண்பாட்டுக் கோலங்கள் ஆகியன அவரது கருத்தியலை வடிவமமைப்பதில் பங்கு வகிக்கின்றன. வரலாற்று நிர்ப்பந்தங்களால் முன்னதாக முதலாளித்துவ மாற்றியமைத் தலைக்கண்டு ஏகாதிபத்தியமாகப் பரிணமித்த ஐரோப்பிய நாடுகளால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் தமிழகமும், இந்தியாவும் இருந்த காலத்தில் பாரதி பிறந்தார். அவர் தன்னுணர்வோடு சமூகப்பங்களிப்பை ஆற்றத் தொடங்கும்போது சுதந்திர போராட்ட அலை எழுச்சிகொள்ளத்தொடங்கியது. அவரது இறுதிக்காலங்களில் ஒக்ரோபர் புரட்சியினூடாகப் புதிய ரூஷ்யா சோஷலிஸத்தின் சாத்தியத்தை முரசறைந்தது. இந்திய சுதந்திரப்போராட்டத்திலும் தொழிலாளர் விவசாயிகள்


கலாநிதி ந.ரவீந்திரன்

பங்கேற்பு வீறுகொள்ளத்தொடங்கியிருந்தது.'' என்று பாரதியின் கல்விச்சிந்தனையின் தோற்றத்திற்கான பின்புலத்தையும் இரவீந்திரன் பதிவுசெய்கின்றார்.

அத்துடன், '' தேசிய விடுதலையுடன் இணைந்து, ஒவ்வொருவரும் சுதந்திரர்களாய்ப் பரிபூரணத்துவம் எய்தி ஆளுமையுடன் திகழ ஏற்ற கல்வி முறையொன்றை பாரதியின் கல்விச்சிந்தனை வெளிப்படுத்தி நிற்கின்றது. கல்வியில் சரீரப் பயிற்சிக்கு மிகுந்த முக்கியத்துவத்தை பாரதி வழங்குகின்றார். சரீரப்பயிற்சியால் வலுப்பெறும் திடமான உடலே ஆன்மபலத்துடன் விடுதலை உணர்வை மேலெழச்செய்யும் என பாரதி கருதுகிறார்'' என்றும் இரவீந்திரன் குறிப்பிடுகிறார்.

இதிலிருந்து பாரதியின் தீர்க்கதரிசனம் மிக்க கல்விச் சிந்தனைகளையும் நாம் இனம் காண்கின்றோம். கல்வியிலுக்கும் பாரதியியலுக்கும் புதுவரவாக அமையும் இந்நூலைத் தமிழ்கூறு நல்லுலகு வரவேற்று ஆதரவு வழங்கி உற்சாகமூட்டும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவிக்கின்றார்.

பாரதி இந்தியாவில் தமிழகத்தில் பிறந்து கல்வி மறுமலர்ச்சி குறித்து சிந்தித்து எழுதியிருந்தாலும், அவை உலகமனைத்துக்கும் பொதுவானவையாகத் திகழ்ந்திருப்பதையும் இரவீந்திரன் அவதானித்திருக்கின்றமையால், குறிப்பிட்ட கட்டுரைகளைத் தேடி எடுத்துத் தொகுப்பதில் கடுமையாக உழைத்திருக்கிறார். அந்த வகையில் பாரதியியலுக்கு இலங்கையர்கள் காண்பித்திருக்கும் அக்கறையை நாம் இந்நூலின் வாயிலாகவும் தெரிந்து கொள்கின்றோம்.

பாரதியின் சர்வதேசப்பார்வையை இந்நூலில் இடம்பெற்றிருக்கும் கட்டுரைகளினூடாகப் பார்க்க முடிகிறது. மொத்தம் 47 கட்டுரைகள் அடங்கியிருக்கும் இந்நூலின் இறுதியில் பாரதியின் பாரத தேசம் மற்றும் பாப்பாப்பாட்டும் இடம்பெற்றுள்ளன.

பாரத தேசம் என்னும் பாடலில் தேசியப் பொருளாதாரம் முதற்கொண்டு, அயலுறவுக்கொள்கை வரையில் பாரதியின் சமுதாயச்சிந்தனை விரிவிக்கிடக்கிறது. உதாரணத்திற்கு சில வரிகள்:

''காசி நகர்ப் புலவர் பேசுமுரைதான் காஞ்சியிற்
கேட்பதற்கோர் கருவி செய்வோம்.
பட்டினி லாடையும் பஞ்சிலுடையும் பண்ணி
மலைகளென வீதி குவிப்போம்.
குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்.
வானையளப்போம் கடல் மீனையளப்போம்
சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்.
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரங்கற்போம்.
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத்தொழிலனைத்து முவந்து செய்வோம்''

இவ்வாறு இந்நூலானது இரவீந்தரனின் முயற்சியால் தமிழ் கூறும் நல்லுலகிற்கு பல அரிய சிந்தனைகளை பாரதியின் வாயிலாகத் தந்திருக்கிறது.

இது இவ்விதமிருக்க, இலங்கையில் பேராசிரியர் சி.மௌனகுருவும் பாரதியின் கல்விச்சிந்தனைகள் தொடர்பாக


மௌனகுரு

ஆய்வுமேற்கொண்டிருக்கின்றமையையும் அறிகின்றோம்.

அவரது பின்பட்டப்படிப்புக் கல்வியியல் ஆய்வுப்பெருங்கட்டுரையும் பாரதியின் கல்விச்சிந்தனைதான். 1974 இல் இந்த ஆய்வை மேற்கொண்டிருக்கிறார். பின்னர் தினகரன் வாரமஞ்சரியில் வாசகரின் தேவைகருதி ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் அதனைத் தொடராகப் பிரசுரித்தார்.

தேசிய கலை, இலக்கியப்பேரவை நடத்திய தொடர் கருத்தரங்கிலும், 'மௌனகுரு' பாரதியும் கலைகளும் என்ற கட்டுரையை சமர்ப்பித்தவர். 1997 இல் வெளியான இவரது கலை இலக்கியக் கட்டுரைகள் நூலிலும் 'பாரதியும் மரபும்' என்ற ஆக்கமும் இடம்பெற்றுள்ளது. யாழ். பல்கலைக் கழகத்தில் நடந்த கருத்தரங்கிலும் இவரது பாரதியின் உரைநடை என்னும் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கூத்தை, கூத்து என்றே அழையுங்கள் எனச்சொல்லி வரும் மௌனகுரு அவர்கள், தமது நாடகங்களிலும் பாரதியின் பல கவிதை வரிகளை இடம்பெறச்செய்துள்ளார். இவரது மழை என்னும் நாட்டிய நாடகத்தில், ''திக்குகள் எட்டும் சிதறி தக்கத்தீம் தரிகிடதீம்''எனத் தொடங்கும் மழைப்பாடலை முழுமையாகப் பயன்படுத்தியுள்ளார்.

மழையைக் காணாத மக்கள் வரட்சியால் வாடித் துன்பப்படுகிறார்கள்.



இறுதியில் நம்பிக்கையின் அடிப்படையில் யாகம் முதலான நிகழ்த்துகையின் மூலம் மழையை வரவழைக்க முயற்சிக்கிறார்கள். பின்னர் சுயமுயற்சியால் மழையைக் கொணர்கிறார்கள். அந்தக்காட்சிக்குப்பாரதியின் பின்வரும் கவிதை வரிகளைப் பயன்படுத்தியிருக்கிறார்.

*''வெட்டியடிக்குது மின்னல் - கடல்வீரத் திரை கொண்டு விண்ணையிடிக்குது - கொட்டியிடிக்குது மேகம் -கூகூவென்று விண்ணைக் குடையுது காற்று சட்டச் சட சட சட்டா '' என்று தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம் என்ற வரிகள் மிகப் பிரமாண்டமாக ஆடல் பாடல் அசைவுகள் மூலம் காட்சிப்படுத்தப்பட்டன''* எனத் தெரிவித்துள்ளார்.

மௌனகுரு தகவல்களின் பிரகாரம் இந்நாடகம் இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் மாத்திரமின்றி நோர்வேயிலும் மேடையேறியிருக்கிறது.

மௌனகுரு தயாரித்து இயக்கிய நம்மைப் பிடித்த பிசாசுகள் என்னும் நாடகத்திலும் பாரதி ஒரு கதாபாத்திரம். இதில் பாரதி சிலை உயிர் பெறுகிறது. இலங்கைத் தமிழர் சமூகத்தில் நடக்கும் பிரதேச வாதம், பெண் அடக்குமுறை, சீதனப் பிரச்சினை, அந்நிய மோகம் என்ற பிசாசுகளைப் பாரதி காண்கிறார். நம்மைப் பிடித்த இப்பிசாசுகளை அடித்துக் கலைக்குமாறு பாரதி மக்களுக்கு ஆணையிடுகிறார் .

ஒரு கட்டத்தில், '' இவற்றைச் செய்ய உன்னால் முடியாவிட்டால் செத்துப்போ... அதுவே நன்று''என உறுக்குகின்றார். விழிப்புணர்வு பெற்ற மக்கள் பாரதியின் ஜெயபேரிகை கொட்டடா... கொட்டடா... என்ற அந்த விடுதலைக் கீதத்தை இசைத்தபடி பிசாசுகளை விரட்டி விடுதலைக் கூத்தாடுகிறார்கள்.

( 24ஆம் பக்கம் பார்க்க)

# இயற்கையோடு இயைந்தவர்

## ஐங்கரநேசன் பற்றிய யுகபாரதியின் பதிவு

சூழலியலாளர், அரசியல்வாதி, வடக்கு மாகாண சபையில் முதலாவது விவசாய அமைச்சர்... இப்படி பல பரிமாணங்களில் பார்க்கப்படும் பொன்னுத்துரை ஐங்கரநேசன் குறித்து தமிழகத்தின் 'குங்குமம்' இதழில் யுகபாரதி மூன்று வாரங்களாகத் தொடராக வரைந்த கட்டுரை இது. முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன் பற்றிய இன்னொரு பார்வையை அக்கட்டுரை பிரதிபலிக்கின்றது.





இந்தியத் தமிழர்களைவிட, மண்பற்று, மிக்கவர்கள் ஈழத்தமிழர்களே என்பதை அவர்கள் முன்னெடுத்த விடுதலைப் போராட்டத்தின் வாயிலாக உணர்ந்து கொண்டிருக்கிறோம். உண்மையில், மண் பற்று என்பது இனத்தையும் மொழியையும் கடந்த ஒன்று எனக் கருதுபவர் அண்ணன் பொ. ஐங்கரநேசன். தம்முடைய சூழலியல் கட்டுரைகள் மூலம் அவர் எத்தனையோ விஷயங்களைச் சுட்டிக்காட்டி இருக்கிறார். இன உரிமையை மீட்பது போலவே, இயற்கையை மீட்பதும் அவசியம் என்பதுதான் அவர் தொடர்ந்து முன்வைத்து வருவது.

பிரபஞ்சத்தின் ஏக எஜமானர்களாகத் தங்களைக் கருதிக்கொள்ளும் மனிதர்கள், ஏனைய உயிரினங்கள் வாழ அனுமதிக்காத அவலத்தை அவர் போல் இன்னொருவர் தமிழில் எழுதினார் எனத் தகவல் இல்லை. இன்று சூழலியல் குறித்து வெளிவரும் பல நூல்களுக்கு ஆதாரமாக விளங்குபவை அவருடைய ஏழாவது ஊழி கட்டுரைகளே. இயற்கையோடு இயைந்த வாழ்வைக் கொண்டிருந்த தொல்குடி சமூகம், விஞ்ஞான சாதனங்களின் உற்பத்தி பெருக்கத்துக்கு எந்தெந்த விதத்தில் பலியாகிறது என்பதை அவர் ஒருவரே புள்ளி விவரங்களுடன் புரிய வைப்பவர். அந்நூலில் அவர் ஆகாயத்திற்கு மேலும் கீழும் உள்ள அத்தனை விஷயங்களையும் அலசியிருக்கிறார். கொதிக்கும் பூகோளத்திலிருந்து விடுதலைச் சூழலியல் வரை அவரால் எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் அடர்த்தியும் ஆழமும் நிறைந்தவை. நுனிப்புல் மேய்தலோ பதிவிறக்கப்பட்ட தகவல்களோ அந்நூலில் எதுவுமே இல்லை. முற்றுமுழுக்க நிரூபிக்கப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் எழுதப்பட்ட நூல் அது. இன்னும் சொல்லப்போனால், சூழலியல் குறித்து உலகமெங்கும் எழுதிவரும் அறிஞர்களின் பட்டியலில் இடம்பெறத்தக்க பெயரே அவருடையதும்.

### பாரதியின் கூற்று அறிவியல் பார்வை

''காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்'' என்று பாரதி எழுதியமையை அன்பின் வெளிப்பாடாக எண்ணிக்கொண்டிருந்த என் போன்றோர்க்கு, அது அன்பு சார்ந்த பதிவு அல்ல, அறிவியல் சார்ந்த கூற்று என விளக்கப்படுத்தியவர் அவர்தான். பல பத்தாண்டுகளாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த இருமாத சஞ்சிகையான நங்கூரம் பத்திரிகையில் அவர் எழுதிய அறிவியல் கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. மக்கள், தங்கள் நிலத்துக்கான போராட்டத்தைக் கையிலெடுக்கும் அதேவேளையில், பூச்சிக்கொல்லிகளால் பாழ்பட்ட நிலத்தின் மீதான கரிசனமே அவருடைய சூழலியல் குறிப்புகள். இடதுசாரி பார்வையிலிருந்து ஈழப் போராட்டத்தை அணுகக்கூடிய ஒருவர், பன்னாட்டு நிறுவனங்களின் சூழ்ச்சிகளையும் சர்வதேச அரசியல் அழுத்தங்களையும் ஒருசேர கணக்கிலெடுத்துக்கொள்ளும் தன்மையை அவர் எழுத்துக்களில் காணலாம். 'நுகர்வென்னும் பெரும்பசி' என்ற நூலில் ராமசந்திர குஹா சொல்லியிருக்கின்றமையைப் போல மனிதர்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் பசிக்கு இயற்கையை இரையாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அண்ணன் ஐங்கரநேசன், வேறு ஓர் அரசியலிலிருந்து சொல்லியிருக்கிறார். 'மென்பானங்களின் வன்முறைகள்' என்னும் கட்டுரையும் 'நீர்ப் போர் மூளுமா' என்னும் கட்டுரையும் குறிப்பிடும்படியானவை.

இரண்டாயிரமாவது ஆண்டின் முற்பகுதியில் அவர் எனக்கு அறிமுகம். அவ்வப்போது அவருடைய கட்டுரைகளை இணையத்திலும் இதழ்களிலும் வாசித்திருந்த எனக்கு, அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தவர் அண்ணன் அறிவுமதிதான். 73, அபிபுல்லா சாலை அலுவலகத்தில்தான் முதல் முதலாக அவரைச் சந்தித்தேன். அந்த நாளை அவருமே மறக்க வாய்ப்பில்லை. எப்படியெனில், அன்றுதான் அண்ணன் ஐங்கரநேசனுக்கு அவர் பார்த்துவந்த பத்திரிகைப் பணி பறிபோயிருந்தது. அடுத்து என்ன செய்வதென்ற யோசனையில் அண்ணன் அறிவுமதியைச் சந்தித்து ஆலோசிக்க அவர் வந்திருந்தார். அவருடைய சூழலைப் புரிந்துகொள்ளாமல் அவர் எழுதிய சூழலியல் கட்டுரைகள் குறித்து அப்போது நான் சிலாகிக்கத் தொடங்கியமையை நினைத்தால் இப்போது சிரிப்பு வருகிறது. ஒருவர் என்ன சூழலில் இருக்கிறார் என்பதை புரிந்துகொள்ளாமல் பேசிவிடக் கூடிய விடலைத்தனம் அப்போதும் என்னிடமிருந்தது ஆச்சரியமில்லை. என்றாலும், என் கேள்விகள் எதையுமே அவர் தவிர்க்க வில்லை. மாறாத புன்னகையும் மறுக்காத அன்பையுமே அவர் என்னிடம் பகிர்ந்துகொண்டார். அந்தச் சந்திப்பிலிருந்து அவர் எனக்கு உணர்த்திவரும் நட்பின் கனம் மிகுதியானது.

### சிக்கல் இல்லாத எழுத்து

சுற்றுச் சூழல் குறித்து தமிழில் வெளிவந்துள்ள மிக முக்கியமான நூலான ஏழாவது ஊழி அப்போது வெளிவந்திருக்கவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த நங்கூரம் இதழிலும் இன்னபிற இதழ்களிலும் அவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே ஏழாவது ஊழி. நாற்பத்தியொரு கட்டுரைகள் அடங்கிய அந்நூலில் அவர் எழுதாத சூழலியல் கருத்துக்களே இல்லை. பொதுவாக அறிவியல் கட்டுரைகளோ சூழலியல் கட்டுரைகளோ எழுதுபவர்களின் மொழி, ஈர்ப்புடைய மொழிநடையைக் கொண்டிருக்காது. புள்ளிவிவரங்களை விட்டுவிடக் கூடாதே என்னும் கவலையில் இயல்பிலிருந்து வேறுபட்டு எழுதுவார்கள். கனதியான செய்திகளைச் சொல்லவேண்டியிருப்பதால் அவர்களின் மொழிநடை பொருத்தமற்ற வேதிப் பொருள்களின் சேர்க்கை போலிருக்கும். உச்சரிக்க சிரமமான அறிவியல் பெயர்களை வலுக்கட்டாயமாகத் திணித்திருப்பார்கள். ஆனால், அண்ணன் ஐங்கரநேசனின் எழுத்திலோ எந்த சிக்கலும் இருப்பதில்லை. வாசிப்பனுபவத்தை முதன்மையாகக் கொண்டே அவர் எழுதுவார். தன்னுடைய அறிவை வெளிப்படுத்துவதைவிட வாசிப்பவரின் மனநிலையை உள்வாங்கியே பதங்களைப் பிரயோகிப்பார்.

### கதையின் ஊடாக கருத்துரைத்தார்

சிலந்திகளைப் பற்றி அவர் எழுதினால்கூட அதை ஒரு கதையிலிருந்துதான் ஆரம்பிப்பார். அரக்னி என்ற நெசவுப் பெண்மணி, தையற் கலையில் தனக்கிருந்த தேர்ச்சியாலும் இறுமாப்பினாலும் கிரேக்க கடவுளான ஏதினாவுக்கு சவால் விடுகிறாள். உன்னைப் படைத்த என்னிடமே சவாலா என்று கடவுளுக்குக் கோபம் வந்துவிடுகிறது. என்ன திறமையிலிருந்தாலும் கடவுளிடம் மனிதன் தோற்றுவிடுவதுதானே பொதுவிதி. அந்த விதியால் அரக்னியும் ஒரு கட்டத்தில் கடவுளிடம் தோற்றுவிடுகிறாள். இதுவரை யாரிடமும் தோற்காத தாம் கடவுளிடம் தோற்றுவிட்டோமே என்னும் அவமானம் தாங்கமுடியாமல் அரக்னி தற்கொலை செய்துகொள்கிறாள். கட வுளுக்கோ இப்போது கோபம் இரண்டு மடங்காகிவிடுகிறது. தோல்வியை ஏற்கக்கூட மனமில்லாத அளவுக்கு கர்வமா? உனக்கென்று கண்டிக்கிறார். கண்டித்த தோடு மட்டுமல்லாமல் மீண்டும் அரக்னியை உயிர்ப்பித்து, கர்வமுடைய அனை வருக்கும் உன் வாழ்க்கை பாடமாக அமை யட்டுமென்று அரக்னியின் சந்ததிகளை சிலந்திகளாகச் சபித்துவிடுகிறார். அந்த சாபத்தின் காரணமாகவே சிலந்திகள் வாழ்நாள் பூராவும் தொங்கிக் கொண்டிருக்கின்றன. இது, கிரேக்கத்தில் இன்றள வும் சொல்லப்பட்டுவரும் ஐதீகக் கதை. இந்தக் கதையின் சரடுபிடித்து சிலந்திகளை அவர் விளக்கத் தொடங்குவார்.

சிலந்தி இழைகளின் பிரத்தியேகமான இயல்புகளை விவரிக்கையில், அதிலிருந்து மனிதகுலம் பராசூட்டையும் குண்டு துளைக்காத உடைகளையும் எப்படித் தயாரித்தது என்பதை அவரால் சொல்ல முடியும். அத்தோடு நில்லாமல், பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜெயந்தி எதிரிசிங்க என்பவர் 98ஆம் வருடம் செய்த சிலந்திகள் பற்றிய ஆய்வைக் குறிப்பிடுவார். இயற்கை வழங்கிய அற்புதமான பூச்சிக்கொல்லிகளான சிலந்திகளால் நெற்பயிரைத் தாக்குகின்ற பூச்சிகள் கட்டுக்கள் இருந்ததை ஆதாரத்தோடு நிரூபிக்க முயல்வார். ஓட்டைகளென்றோ நூலாம் படைகளென்றோ துடைத்தெறியும் சிலந்திகளின் நன்மைகளை பட்டியலிடும் அவர், சிலந்திகளின் நச்சுத்தன்மை எத்தகையன என்பதையும் விவரிப்பார்.பயத்தின் காரணமாக சிலந்திகளை விட்டுஎட்டி நிற்கும் நம்மை அதன் சாதக அம்சங்களைத் தொட்டுக்காட்டிப் பராமரிக்கச் சொல்லுவார். பிற உயிர்களிடத்தில் அன்பு செய்யாவிட்டால் மனித உயிர்கள் மதிப்பிழந்து போகும் என்பதை சூழலியல் சார்ந்து அவர் எழுதும் எல்லாக் கட்டுரையிலும் பதிவு செய்திருக்கிறார்.



### மரபைத் தொலைத்தோம் நோயைச் சுவீகரித்தோம்

நம்முடைய மரபை நாம் எப்போது கைவிடத் தொடங்கினோமே அப்போது இருந்துதான் நோயை சுவீகரிக்கும் நிலை ஏற்பட்டதென்று சொல்லும் அவர், பழைமைக்குத் திரும்புவோம் என்று எங்கேயும் எழுதியதில்லை. மரபுக்குத் திரும்புவோம் என்றுதான் எழுதுவார். பழைமைக்குத் திரும்புவதிலும் மரபுக்குத் திரும்புவதிலும் உள்ள வேறுபாட்டை அவருடைய எழுத்துக்கள் உணர்த்துபவை. புழக்கத்திலுள்ள தமிழ் மரபுசார்ந்த சொற்றொடர்களின் அதிகமாகக் கையாளும் அவர், 'நுணலும் தன் வாயால் கெடும்' என்னும் பழமொழியை வைத்துகொண்டு செல்லிடை பேசியின் ஆபத்துகளை சொல்லிவிடுவார். விஞ்ஞான சாதனங்கள் இயற்கைக்கு ஊறு விளைவிக்கின்றன என்பதற்காக முற்றாக விஞ்ஞானமே வேண்டாம் என்னும் குரலில் அவர் பேசுவதில்லை. தேவைதான் ஒன்றைத் தீர்மானிக்கின்றன என்பதால் அந்த தேவையின் நீள,அகலங்கள் குறித்த தெளிவுகளை ஏற்படுத்துவதில் அவருடைய எழுத்துக்கள் முக்கிய பங்காற்றும்.

ஈழத் தமிழர்கள் தங்களுடைய தேசிய மலராகக் கார்த்திகைப் பூவை கொள்ள வேண்டுமென விடுதலைப் புலிகள் அறிவித்தபோது, அதை வழிமொழிந்து அண்ணன் ஐங்கரநேசன் எழுதிய கட்டுரை கவனிக்கத்தக்கது. அவர் அக்கட்டுரையை எழுதும்வரை கார்த்திகை மலர்தான் காந்தள் மலர் என்று பலருக்குத் தெரியாமலிருந்தது. தமிழரின் வாழ்வியலோடு நெருக்கமான காந்தள் மலர், தனித்த இயல்புகளையும் தன்மைகளையும் கொண்டது. சிவப்பும் மஞ்சளும் கலந்த அம்மலர், கார்த்திகை மாதத்தில் பூக்கத் தொடங்குவதால் 'கார்த்திகைப் பூ' என்று ஈழத் தமிழர்கள் அழைக்கிறார்கள். வெளிர்ப் பச்சையிலிருந்து பாதி சிவப்பும் பாதி மஞ்சளுமாக மலரும் அம்மலர், இறுதியில் குருதிச் சிவப்பில் வசீகரிக்கும். கார்த்திகை மலரின் அழகையும் வாசத்தையும் குறிப்பிட்டு எழுதிய அக்கட்டுரையில், 'ஒரு தேசம் தன்னுடைய அடையாளமாக பறவையையும் விலங்கையும் மலரையும் ஏன் கொள்கிறது' என்பதை அரசியலோடு முன்வைத்திருப்பார். காந்தள் மலருக்கு வாசமில்லை என்றாலும், தேசிய மலராக அறிவிக்கப்பட்டிருப்பதால் தேசிய வாசம் வீசுகிறது என்றிருப்பார்.

இந்தியா தாமரையையும் இலங்கை நீலோற்பலத்தையும் ஐக்கிய அமெரிக்கா ரோஜாவையும் தங்களுடைய தேசிய மலராக அறிவித்துக்கொண்டமை போல, ஈழத் தமிழ்த்தேசம் கார்த்திகைப் பூவை தேசிய மலராக அறிவித்ததிலுள்ள பண்பாட்டுச் சான்றுகளை சங்க இலக்கியத்திலிருந்து கொடுத்திருப்பார். 'காந்தளங் கண்ணிச் செழுங்குடிச் செல்வர்' என்ற பதிற்றுப்பத்து பாடலையும் 'மரகதமணி தாள்செறிந்த மணிக் காந்தண் மென்விரல்கள்' என்ற சிலப்பதிகாரச் செய்யுளையும் எடுத்தாளும் திறம் அவருடையது. 'சோலை அடுக்கத்துச் சுரும்பு உண விரிந்த கடவுட் காந்தளுள்ளும்' என அகநானூறை ஆய்ந்தெழுதும் அவர்,'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன், வெறியாட்டு அயர்ந்தகாந்தளும்' என்ற தொல்காப்பியத்தையும் அக்கட்டுரையில் துணைக்கு அழைத்திருப்பார்.

### இலக்கியம் ஊடாக விஞ்ஞானப் பார்வை

விஞ்ஞான அறிவு இலக்கியத்திற்கு விரோதமானதென்னும் மாயையைப் போலவே இலக்கிய அறிவும் விஞ்ஞானத்திற்கு விரோதமானதென்னும் மாயை நிலவுகின்றது. ஆனால், அண்ணன் ஐங்கரநேசன் போன்றவர்கள் விஞ்ஞானத்தைக் கூட இலக்கிய அறிவிலிருந்து பார்க்கப் பயின்றிருக்கின்றமை வியப்பளிக்கிறது. இனம், மொழி, பண்பாடு, கலாசாரம், உரிமை இவற்றின் ஊடாகவே அறிவியலை அணுகவேண்டும் என்பதுதான் அவருடைய எண்ணங்களும் பார்வைகளும். அறிவியல் என்பது அறத்தின்பாற்பட்டு செயல்படும்வரை சிக்கலில்லை. அதே அறிவியல் அறத்திற்கு எதிராகப் போகும்போதுதான் சங்கடம் ஏற்படுகிறது. அந்த சங்கடத்தின் விலை, ஜப்பானின் கியூஷூ தீவிலுள்ள மினமாட்டாவாகவும் இந்தியாவின் மத்திய பிரதேசத்திலுள்ள போபாலாகவும் ஆகிவிடுகிறது. விலை உயிரென்றால் விஞ்ஞானம் ஏன் என்ற கேள்வியைத்தான் உலகெங்கிலுமுள்ள சூழலியவாதிகள் எழுப்புகிறார்கள்.



வளர்ச்சி என்னும் பெயரில் பெருமுதலாளிகளின் பேராசைகளுக்கு வளைந்து கொடுக்கும் அரசுகளை அவர்களால் ஒருபோதும் ஆதரிக்க முடிவதில்லை. இழப்பீடுகளாலும் இன்னபிற நிவாரணங்களாலும் ஒரு மனித உயிரைக் கூட மரணத்திலிருந்து காப்பாற்ற முடியாதபோது, விஷப் பரீட்சையான விஞ்ஞானத்தை வைத்துக்கொண்டு விளையாடாதீர்கள் என்றே அவர்கள் கெஞ்சுகிறார்கள். அரச பயங்கரவாதமென்பது ஆயுதங்களால் மட்டுமல்ல, அடிப்படை ஜீவாதாரப் பிரச்சினைகளில் ஏற்படுத்தும் அச்சுறுத்தலே என்றுதான் அவர்கள் சொல்கிறார்கள். ஒரு நாடு தன்னுடைய மக்களுக்கு விசுவாசமில்லாமல் வியாபாரிகளுக்கும் பெருமுதலாளிகளுக்கும் விசுவாசமாயிருந்தால் என்ன நேரும் என்பதைத்தான் இப்போது பார்த்து வருகிறோம். பசுவைக் காப்பதற்காக மனிதர்களைக் கொல்கிறார்கள். மனிதர்களைக் காப்பதாகச் சொல்லிக் கொண்டு பூசாரிகளையும் சாமியார்களையும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்துகிறார்கள். அண்ணன் ஐங்கரநேசனின் கட்டுரைகளின் வாயிலாக அறிவியலை எந்த அளவுக்குப் புரிந்துகொள்கிறோமே அதே அளவுக்கு அரசியலை புரிந்துகொள்ளலாம். சிங்கள பேரினவாதத்தை எதிர்த்து அவர் எழுதிய எழுத்துக்கள் புத்த மதத்தின் மீது வைத்த கேள்விகளாகவும் பார்க்கப்படுகின்றன.

### புலிகளும் சிங்கங்களும்

'புலிகள் அழியலாமா' என்னும் கட்டுரையில், காட்டு ராஜாவாகக் கர்ஜித்துக் கொண்டிருந்த சிங்கத்தை அழிவின் குகைக்குள் அடைத்துவிட்டு, புலியை




தேசிய விலங்காக முடிசூடி அழகு பார்த்துக்கொண்டிருக்கும் இந்தியா, விரைவிலேயே புலியையும் அழிவின் குகைக்குள் தள்ளிவிடும் போன்றே தெரிகிறது என எழுதியிருப்பார். உண்மையில், இக்கட்டுரையை வாசிக்கத் தொடங்கியபோது சிங்கத்தை தேசிய விலங்காகக் கொண்ட ஒரு நாட்டுக்கும் புலியை தேசிய விலங்காகக் கொண்ட இன்னொரு நாட்டுக்கும் இடையே நிகழ்ந்துவரும் வல்லாதிக்க போட்டியைக் குறிப்பதாகப்படும். இரண்டு குறியீடுகள் வழியே அரசியலை முன் வைக்கிறாரோ என நினைத்து அக்கட்டுரையை வாசிக்கத் தொடங்கினால் அது முழுக்க முழுக்க காட்டுயிர்கள் பற்றிய கவலையாயிருக்கும்.

இந்தியக் கானகங்களில் வாழுகின்ற புலிகள் பற்றிய அண்மைக்காலக் கணக்கெடுப்புகளைப் பார்த்தால், புலிகளுக்கு ராஜயோகம் இருக்கின்றது எனத் தெரியவில்லை. உலகிலுள்ள ஆறாயிரம் புலிகளில் மூவாயிரத்து எழுநூறு புலிகள் இந்தியக் கானகங்களில் இருக்கின்றன என இந்தியா பெருமைப்பட்டு கொண்டிருந்தது. ஆனால், இந்திய காட்டுயிர் நிறுவனம் தனது ஆய்வறிக்கையில் ஆயிரத்து ஐந்நூறுக்கும் குறைவான புலிகளே இருக்கின்றன என அறிவித்திருக்கிறது என்று கட்டுரையை வளர்த்துக்கொண்டு போவார். ஆரம்பப் புள்ளியிலிருந்து இறுதி வரை அந்த கட்டுரை எதைக் குறித்து எழுதப்பட்டது என்பதைப் பூடகமாக சொல்லிக்கொண்டு போய், புலிகளின் ராஜாங்கம் என்று நம்பப்படும் இந்தியாவிலேயே அதன் இருப்பு கேள்விக்குறியாகி வருவதை ஆய்வறிக்கை வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ளது என முடிந்திருப்பார். அக்கட்டுரை வெளிவந்த காலத்தில் விடுதலைப் புலிகளையும் விடுதலைப் புலிகள் ஆதரவாளர்களையும் இந்திய அரசும் தமிழக அரசும் சேர்ந்து ஒடுக்கிக் கொண்டிருந்தன. எனவே, யதார்த்த அரசியலுக்கு நெருக்கமான அக்கட்டுரை சூழலியல் கட்டுரை என்பதை இன்றுவரை கூட என்னால் நம்ப முடியவில்லை.

### புலிகளை ஆதரித்த இந்திரா அம்மையார்

'Project tiger' என்னும் புலிகள் பாதுகாப்புத் திட்டத்தை எழுபதுகளிலிருந்து இந்திரா காந்தி தொடங்கியதிலிருந்து சமீப காலம்வரை புலிகளின் நிலை என்னவாக இருக்கிறது என்பதை அக்கட்டுரை பேசும். அழிந்துவரும் புலிகள் குறித்து தீவிர அக்கறை காட்டிய உலகத் தலைவர்களில் முதன்மையானவர் இந்திராகாந்தியே என்றிருப்பார். 1978இல் ஆயிரத்து எண்ணூறாக இருந்த புலிகளின் எண்ணிகை, இந்திராகாந்தியின் விசேஷ கவனத்தாலும் செயற்கரிய திட்டத்தாலும் 1988இல் நான்காயிரத்து ஐந்நூறாக பெருகிய புள்ளி விவரத்தை சொல்லியிருப்பார். அதே சமயம், 1984இல் இந்திராகாந்தியின் படுகொலை புலிகளுக்குப் பெரும் பின்னடைவாக அமைந்ததென்றும் கூறியிருப்பார்.

ஆரம்ப காலங்களில் இந்திராகாந்தி நிபந்தனையற்று விடுதலைப் புலிகளை ஆதரித்து வந்தார். அவர் ஆதரவுக்குப் பின்னிருந்த அரசியல் என்றாலும் அது, தமிழர்களின் நலன் சார்ந்த அரசியலாகப் பார்க்கப்பட்டது. இந்திராகாந்தியின் கூட்டணியிலிருந்த எம். ஜி.ஆருக்கும் கருணாநிதி எதிர்ப்பு அரசியலைத் தூக்கிப்பிடிக்க விடுதலைப் புலிகள் உதவினார்கள். மலையாளியாயிருந்த போதும் தமிழினத்தைக் காக்க எம். ஜி.ஆர். துணை நின்றார். ஆயுதம் வாங்க பணம் கொடுத்தார். எம். ஜி. ஆர். அளவுக்கு கருணாநிதி ஈழத் தமிழர்களுக்கு எதுவும் செய்யவில்லை என இன்றளவும் பரப்பப்படும் கருத்துக்களுக்குக் காரணமாயிருப்பது இந்திரா காந்தியின் புலி ஆதரவுக் கொள்கைதான். ஆனால், இந்திராகாந்தியின் மறைவுக்குப் பின் இந்தியா தன் புலி ஆதரவுக் கொள்கையை முற்றிலுமாக கைவிட்டது.

ராஜீவ்காந்தியின் வருகைக்குப் பிறகு விடுதலைப் புலிகள் ஆதரவுக் கொள்கை என்பது புலிகள் எதிர்ப்பாக உருவெடுத்தது. 'அமைதிப்படை' என்னும் பேரில் இந்திய இராணுவம் இலங்கைக்குச் சென்று செய்த அட்டூழியங்களை நாமறிவோம். இந்த பின்னணியிலிருந்து புலிகள் அழியலாமா கட்டுரையை வாசித்தால் அக்கட்டுரை காட்டுப் புலிகளைப் பற்றியதா, நாட்டுப் புலிகளைப் பற்றியதா என்று எளிதாக விளங்கிக் கொள்வதில் சிரமமேற்படும். நானறிந்தவரை சூழலியல் குறித்து எழுதியவர்களில் அரசியலை உட்செறித்து எழுதியவர் அண்ணன் ஐங்கரநேசன் மட்டுமே. இலங்கையின் கள அரசியல் நிலைவரத்தையும் இந்தியாவின் அரசியல் கள அணுகுமுறையையும் நன்கு அறிந்திருந்த அவர், அவற்றின் ஊடாக எழுதிய அத்தனை சூழலியல் கட்டுரைகளும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கனவே. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும் கல்வி பயின்றவர் என்பதால், தமிழர்கள் வாழும் இரண்டு முக்கிய பிரதேசங்கள் குறித்தும் அவரால் சிந்திக்க முடிந்திருக்கிறது.

### இயற்கையின் களையெடுப்பு

உயிர்வாழ்தலில் உண்ணுவதும், உணவாவதும், வலிந்தவை பிழைப்பதும், நலிந்தவை அழிவதும் இயற்கையின் நியதி என்பதால் பரிணாமப் பாதையெங்கும் இனங்களின் மறைவும் தவிர்க்கமுடியாதது என ஏழாவது ஊழியில் எழுதியிருப்பார். காலம் நெடுகிலும் புவியியல் சரித்திரம், ஒரு மில்லியன் ஆண்டுவரைதான் ஓர் இனம் வாழ்ந்துள்ளது எனக் குறித்திருக்கிறது. அல்லது ஓர் ஆண்டில் மில்லியனில் ஓர் இனத்தைக் காலம் களையெடுக்கிறது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# வாக்கியமா திருக்கணிதமா?

## சந்திர கிரகணம் எதில் சரி?

கனடாவிலிருந்து
கௌசிகர்

தமிழ்பஞ்சாங்கக் கலண்டர்களில் கிரகண விவரங்கள் இருப்பது வழமை. நாளை 07-08-2017 சந்திர கிரகணம் என்று ஊடகங்கள் வாயிலாக அறிந் திருப்பீர்கள். 07-08-2017 மெய்கண் டான் இங்கு உள்ளது. அதில் சந்திர கிரகணம் என்று குறிக்கப்படவில்லை. மெய்கண்டானில் மட்டுமல்ல, இரகு நாதையர் வாக்கியப் பஞ்சாங்கப்படி வெளிவந்த எந்தவொரு கலண்டரிலும் கிரகண விவரங்கள் இல்லை. இந்த நிலை கடந்த பல வருடங்களாகத் தொடர்கின்றது. கிரகண விவரங்களைச் சரியாகக் கணிக்கத் தெரிந்த எவராவது அதனைக் கலண்டர்களில் குறிப்பி டாது இருப்பார்களா? நிச்சயமாக இல்லை! இது வாக்கியப் பஞ்சாங்கப் படி கிரகணத்தைச் சரியாகக் கணிக்க முடியாது என்றும் வாக்கியம் பிழை என்றும் உறுதிப்படுத்துகின்றது. இர குநாதையரே! இதனை மறுப்பதற்குத் தகுந்த காரணம் எதாவது சொல்ல முடியுமா?

இரகுநாதையரது கணிப்பில் வெளிவரும் கலண்டர்களில் கிரகண விவரங்கள் இல்லாவிடினும், அவரது பஞ்சாங்கத்தில் அவ்விவரங்கள் உள்ளன. 2017 கலண்டர்களுக்குரிய கணிப்புக்களை 2016 ஆவணியில் இரகுநாதையர் கொடுத்து விட்டார். அப்போது கிரகண விவரங்களைக் கணிக்கத் தெரியாத அவருக்கு 2017 இன் ஆரம்பத்தில் வெளிவந்த 2017 பஞ்சாங்கத்தில் குறிப்பிடுவதற்கு இந்த விவரங்கள் எவ்வாறு கிடைத் தன?

வாக்கியத்தை முதலில் மண்கௌவ வைத்தது 25-02-1952 சூரிய கிர கணம். இது யாழ்ப்பாணத்தில் தோற்றும் என்று வாக்கியம் குறித்தது. இது தோற்றாது என்றது திருக்கணிதம். அன்று இலங்கையிலே கிரகணத்தைக் காணவே இல்லை. வாக்கியம் பிழை, திருக்கணிதமே சரி என்பது வெளிச் சத்திற்கு வந்தது. இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவிலும் வாக்கியம் மண்கௌவியது. இதன் விளைவாகச், சமயத்தைக் காப்பாற்றுவதற்காக நவெம்பர் 1952இல் இந்தியப் பிரத மராக இருந்த ஜவஹர்லால் நேரு அவர்கள் எப்பஞ்சாங்கம் சரி என்று ஆராய்வதற்கு ஒரு குழுவை நியமித் தார். அவர்கள் 3 வருடங்களாகப் பல ஆய்வுகள் செய்து 10-12-1955இல் திருக்கணிதமே சரி என்று பரிந்துரைத் தது. அந்த அறிக்கையின் இணையத் தள முகவரி http://www.rarebooksocietyofindia.org/book_archive/196174216674_10152140961606675.pdf

1955 இன் பின்னர் இந்தியாவின் பல மாநிலங்களில் வாக்கியம் கைவி டப்பட்டது. இரகுநாதையரே! இந்த அறிக்கையில் வாக்கியம் பிழை, திருக் கணிதமே சரி என்று இருப்பது தவறு என்று தகுந்த ஆதாரத்துடன் நிரூபித் துத் தாங் கள் வாக்கியம் கணிப்பது சரி என்று நியாயப்படுத்த முடியுமா? இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத் தினர் கிரகணத்தை ஏதோவொரு விதமாக 2004வரை குறித்தனர். இவர் களுக்கு இந்த விவரங்களைக் கலாநிதி யாகக் கணித்து உதவிய கலாநிதி 2005இல் காலமானார்.

கிரகணம் கண்ணிற்குப் புலப்படும். இது பற்றிய செய்திகள் ஊடகங்கள் வாயிலாகத் தெரிய வரும். இதனைப் பிழையாகக் கணித்தால், அது பிடிபட்டு வாக்கியத்தின் கதை முடிந்து விடும். திருக்கணிதமே சரி என்று உறுதி யாகிவிடும். இதனால், கொலைஞன் பிடிபடாது இருப்பதற்காகத் தடயங் களை அழிப்பது போன்று, கிரகண விவரங்களைச் சரியாகக் குறிப்பதற்கு வாக்கியப் பஞ்சாங்கத்தினர் திண்டா டுகின்றனர். தற்போது இவர்கள் இந்த விவரங்களுக்கு வேறொரு நிறுவனத் தில் தங்கியுள்ளனர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அந்த நிறுவனம் எது? எவ்வாறு விவரங்களைப் பெறு கின்றது?

வாக்கியத்தினர் நாஸா இணையத் தளத்தைப் பின்பற்றி கிரகணத்தைக் குறிப்பிடுகின்றனர் என்று கட்டுரை ஒன்று 2016இல் வெளிவந்தது. இதில் ஓரளவு உண்மை உள்ளது. இவர்கள் நாஸாவைப் பின்பற்ற முயற்சி செய் துள்ளனர். நாஸாவைப் பின்பற்றுவது களவுமல்ல, சட்ட விரோதமானது மல்ல. நாஸா இணையத் தளத்தை ஏனையோர் பின்பற்றலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியப் பஞ்சாங்கக் கணிதர்கள் பலர் நாஸா இணையத் தளத்தைப் பின்பற்றுகின் றனர். 2005 இலிருந்து 2012 வரை இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் கிரகணம் சம்பந்தப்பட்ட கணிப்புக ளில் பல பிழைகள் வந்தன. நாஸா விவரங்களைப் பஞ்சாங்கத்தில் எவ்வாறு குறிப்பிடுவது என்று தெரியாது இர குநாதையர் திண்டாடினார். இதனால் அவர் 2013 இலிருந்து புதியதொரு யுக்தியைக் கையாளுகின்றார். அது என்ன என்று தெரிந்தால் நீங்களே அசந்து போவீர்கள். 2013 இலிருந்து இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத் தில் பின்வரும் பிழைகள் இருந்தன.

1. யாழ்ப்பாணத்தில் 09-03-2016 அன்று கிரகணத்துடன் சூரியன் உதித்துக் காலை 06:48இற்கு கிரகணம் முடிவ டையும் என்று நாஸா இணையத் தளத்தில் உள்ளது. இக்கிரகணம் இலங்கையில் தோற்றாது என்று பிழை யாக இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங் கத்தில் உள்ளது.

2. யாழ்ப்பாணத்தில் 25-04-2013 பின்னிரவு 01:22இல் சந்திர கிரகணம் ஆரம்பித்தது. பூரணைச் சிராத்தத்தை 25-04-2013 அன்று செய்வதே சரியானது. இதனை மறுநாள் 26-04-2013இல் செய்க என்று பிழையாக வாக்கிய பஞ்சாங்கத்தினர் குறிப்பிட் டிருந்தனர்.

3. இரகுநாதையர் வாக்கிய பஞ் சாங்கத்தினர் இலங்கையுடன் நின்று விடவில்லை. பிழைகளை வெளிநா டுகள் பலவற்றிக்குக் கப்பல் ஏற்றுகின் றனர். ரொறண்ரோ, கனடாவில் 14-04-2014 பின்னிரவு 01:59இல் சந்திர கிரகணம் ஆரம்பித்தது. பூரணைச் சிராத்தம் அன்று செய்வதே சரியானது. இதனை மறுநாள் செய்க என்று இரகு நாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் பிழையாகக் குறித்தனர்.

மேலும் பல கிரகணம் சம்பந்தப் பட்ட பிழைகள் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் உள்ளன. இப்பிழைகள் அனைத்தும் இன்னொரு வெளி யீட்டிலும் உள்ளன. அது எது என்று அறிந்தால் திகைத்துப் போவீர்கள். கொக்குவிலில் இருந்து வெளிவரும் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் வெளிவருவதற்கு ஒருசில மாதங்கள் முன்னர் மட்டுவிலில் இருந்து வெளிவரும் திருக்கணித பஞ்சாங் கத்திலேயே இப்பிழைகள் அனைத்தும் உள்ளன. எனினும், திதி, நட்சத்திரம், நவக்கிரக சஞ்சாரம், போன்ற அடிப் படைக் கணிப்புகளில் வருடம் முழுவதும் வாக்கியத்தில் இருப்பது போன்ற பிழைகள் எதுவும் திருக்க ணிதத்தில் இல்லை. திருத்தப்படக் கூடிய சிறிய பிழைகளே உள்ளன. அவ்விவரங்கள் பிறிதொரு கட்டுரை யில் வெளிவரும். அவற்றைத் திருக் கணித பஞ்சாங்க கணிதர் திருத்துவார் என்று எதிர்பார்க்கிறேன்.

ஒரே மாதிரியாக இருக்கும் கணிப் புகள் சரியானவையாகவும் இருந்தால் அவற்றில் எவ்வித சந்தேகமும் வராது. ஆனால், அவை பிழையாக இருந்தால் அதன் அர்த்தம் வேறு. அவை கொப் பியடித்தமையைத் தெட்டத் தெளிவாக நிரூபிக்கும் ஆதாரமாக அது அமையும். இரகுநாதையரே! திருக்கணித பஞ் சாங்கத்தில் உள்ள மேற்கூறிய பிழை கள் தங்களது பஞ்சாங்கத்திலும் எவ்வாறு வந்தன என்று தகுந்த கார ணத்தைக் கூறித் திருக்கணிதத்தைக் கொப்பியடிக்கவில்லை என்று நிரூ பிக்க முடியுமா? வாசக நீதியரசர்களே! இரகுநாதையர் திருக்கணிதத்தைக் கொப்பியடித்தாரா? என்று தீர்ப்பு வழங்குங்கள்.

தனது கணிப்புச் சரி என்று தெரிந்த எவரும் கொப்பியடிக்க மாட்டார். அது பிழை என்று நன்கு தெரிந்தவரே கொப்பியடிப்பர். அவர் பிழை என்று நம்பும் கணிப்பைக் கொப்பியடிக்க மாட்டார். சரி என்று உறுதியாக நம்பும் கணிப்பையே கொப்பியடிப்பர். வாசக நீதியரசர்களே! உங்களில் பலரது நம்பிக்கைக்குப் பாத்திரமான பெருந் தகை இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க கணிதர் திருக்கணிதத்தைக் கொப்பியடித்ததாக நீங்கள் தீர்ப்பு வழங்கினால், வாக்கியம் பிழை, திருக் கணிதமே சரி என்று நிரூபிப்பதற்கு இதனைவிடச் சிறந்த ஆதாரம் வேறு எதுவும் இருக்க முடியுமா?

கொப்பியடியில் 2 ரகங்கள் உள்ளன. மற்றையவரை கேட்டுக் கொப்பிய டிப்பது ஒன்று. களவாகக் கொப்பிய டிப்பது மற்றையது. மேற்கூறிய கிரகண விவரங்களை இரகுநாதையர் கேட்டுப் பெற்றுக் கொண்டாரா? என்று திருக் கணித பஞ்சாங்கக் கணிதரிடம் கேட் டேன். இல்லை என்று பதிலளித்தார். பதிப்புரிமை உள்ள ஒரு பஞ்சாங்கத் தைத் திருட்டுத் தனமாகக் கொப்பி யடிப்பது சட்டப்படி குற்றம். இதற்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்காதிருப்பது திருக்கணிதப் பஞ் சாங்கத்தினரது பெருந்தன்மை. இர குநாதையர் கிரகண விபரங்களைக் கேட்டால் கொடுப்பீர்களா? என்று திருக்கணிதப் பஞ்சாங்க கணிதரிடம் கேட்டேன். ஆம் என்று எவ்வித தயக்கமும் இன்றிப் பதிலளித்தார்.

கலண்டர்களில் இருப்பதே இரகு நாதையரது ஒறிஜினல் கணிப்பு. அதில் பூணூல் மாற்றும் தினம் இருக் கு-யஜுர் வேத உபாகருமம் 07-08-2017இல் கிரகணத்தன்று பிழையா கக் குறித்துள்ளார். இதற்குரிய சரியான நாள் திருக்கணித பஞ்சாங்கத்தில் உள்ளது. அன்றே இரகுநாதையர் பூணூல் மாற்றவுள்ளார். அதனைக் கொப்பியடித்துத்தனது பஞ்சாங்கத்திலும் குறித்துள்ளார். இரகுநாதையரே! நீங்கள் பூணூல் மாற்றுவதற்குத் திருக் கணித பஞ்சாங்கம். ஏனைய மக்க ளுக்கு தாங்கள் கணிக்கும் சுத்தப் பிழையான வாக்கியப் பஞ்சாங்கமா? இனி மேலும் எவராவது வாக்கியமே வேண்டும் என்று அடம்பிடித்தால், அவர்களைக் கடவுளால்கூடக் காப் பாற்ற முடியாது. ●






காலைக்கதிர் Kalaikkathir





வெள்ளைத் தோலுக்கு ஆசைப்படும் பெண்களுக்கு எச்சரிக்கை

# கிறீம்கள் நிரந்தர நிறத்தை தருமா?

> அனைத்துக் கிறீம்களிலும் 2 முதல் 4 சதவீதம் ஹைட்ரொகுவினோன் இருக்கும் இதை தினமும் உபயோகித்தால் தோல் மிகவும் உணர்ச்சி மிக்கதாக மாறிவிடும். இந்தக் கிறீம்கள் மெலனின் உற்பத்தியைத் தடுக்கின்றன.



வெள்ளைத் தோல்தான் அழகு என்ற எண்ணம் பெரும்பாலான பெண்களுக்கு உள்ளது. ஒரு குழந்தை இந்த பூமியில் பிறக்கும்போதே வெள்ளைத் தோல் மீதான புலம்பல்கள் ஆரம்பமாகி விடும். குழந்தை ஒன்று பிறந்த செய்தி அறிந்தவுடனேயே ‘குழந்தை வெள்ளையா, கறுப்பா’ என விசாரிக்க ஆரம்பித்து விடுவார்கள். அதே போலத்தான் பெண் பார்க்கும் படலத்திலும். வெள்ளை நிறப் பெண் கிடைக்க வேண்டும் என்பது தான் பல ஆண்களின் கனவாக உள்ளது. சினிமா, விளம்பரம் என அனைத்தும் அதனையே வலியுறுத்துகின்றன. இவ்வாறான சமூகத்தில் வளரும் பெண்களும் அறியாமை இருளிலேயே தம்மை தொலைத்து விடுகிறார்கள். இதனை அழகு நிலை யங்களும், கிறீம் உற்பத்தி நிலையங்களும் பயன்படுத்திக் கொள்கின்றன.

பெரும்பாலான விளம்பரங்கள் பெண்களின் ஆசையைத் தூண்டும் விதமாகவே அமைந்துள்ளன. அதனால்தான் கிறீம்கள் பற்றிய அறிவு இருந்தாலும், அழகை அதிகப்படுத்த நினைக்கும் ஆசையில் தங்களை மறந்து இந்தக் கிறீம்களை உபயோகப்படுத்துகின்றனர்.

பெண்கள் நிறத்துக்காக உபயோகிக்கும் கிறீம்கள் நிஜத்தில் அழகையோ, நிறத்தையோ தருவதில்லை. தோலின் நிறம் மெலனின் வகை , அளவு, தோல் நிறம் என்பனவற்றை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது. தோலின் நிறம் சுற்றுப்புறச் சூழலை விட மரபணு சார்ந்தே மாறுகின்றது. இந்த அழகு சம்பந்தப்பட்ட அனைத்துக் கிறீம்களும் சில பக்க விளைவுகளை ஏற்படுத்தி தோலை சேதப்படுத்துகின்றன. அத்துடன் இயற்கையாக தோலின் நிறம் அதிகரிப்பதைத் தடுக்கும்.

அழகுக்காக உபயோகப்படுத்தும் கிறீம்களில் தோலை வெளுப்பாக்கக் கூடிய ஹைட்ரொகுவினோன் (Haitrokuvinon) என்கின்ற இரசாயனம் உள்ளது. இது தீங்கு விளைவிக்கக்கூடியது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

**கிறீம்களில் கலந்துள்ள பொருள்கள்:**

ஹைட்ரொகுவினோன்-இது தோலை வெண்மையாக்கப் பயன்படுத்தப் படுகிறது. இது தோலுக்கு அதிக எரிச்சலை ஏற்படுத்தும்.

கோஜிக் அமிலம்-இது ஒரு சதவிகிதத்துக்கும் குறைவாகச் சேர்க்கப்படுகிறது. தோலில் மெலனின் உற்பத்தியைத் தடுக்கும் விற்றமின் சி வகையை சார்ந்த குணம் கொண்டது.ரெட்டினோயிக் அமிலம்-விற்றமின் ஏ வகையை சார்ந்த தோலின் மேற்பரப்பு படலங்களை அகற்ற உதவும். இதன்மூலம் தோலின் அடர் நிற செல்கள் நீக்கப்படும்.

இவை அனைத்தும் கிறீம்களில் இருக்கும். அனைத்துக் கிறீம்களிலும் 2 முதல் 4 சதவீதம் ஹைட்ரொகுவினோன் இருக்கும் இதை தினமும் உபயோகித்தால் தோல் மிகவும் உணர்ச்சி மிக்கதாக மாறிவிடும். இந்தக் கிறீம்கள் மெலனின் உற்பத்தியைத் தடுக்கின்றன. இந்த கிறீம்களை உபயோகிக்காமல் நிறுத்தினால் தோல் பழைய நிறத்துக்கோ அல்லது இன்னும் அடர்ந்த நிறத்துக்கோ மாறி விடும்.

மேலும், இந்தக் கிறீம்கள் முகத்தில் சமமாகப் பயன்படுத்தப்படுவதில்லை. இதனால் சீரற்ற நிறத்துடனும் புள்ளிகளுடனும் காணப்படும். சில கிறீம்களில் பயன்படுத்தப்படும் சில பொருள்கள் தீவிரமான உடல் உபாதைகளை ஏற்படுத்தும்.

அதிக தாகம்,வயிற்று வலி, ரத்தம் தோய்ந்த வயிற்றுப்போக்கு, பெருங்குடல் ஒவ்வாமை, மலச்சிக்கல், நடுக்கம், ரத்தச் சோகை, தோல் பிரச்சினைகள் ஆகியவற்றை ஏற்படுத்தும். கிறீம் உபயோகிக்கும் 40 வீதமானவர்கள் முகத்தில் முடி, வலி, முகப்பரு, தோல் சுருக்கம், வெடிப்பு, ஒவ்வாமை போன்றவைகளால் பாதிக்கப்படுகின்றனர். இவை பெரும்பாலும் தோல் புற்றுநோய், சிறுநீரகப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

# பெண்களின் கால் விரல் அமைப்புகளை வைத்தே குணநலன்களை அறியலாம்?



பெண்களின் கால் விரல் அமைப்புகளை வைத்தே அவர்களின் குணநலன்களை அறிய முடியுமாம். இதனால்தான் திருமணத்துக்குப் பெண்பார்க்கும் போது, பெரியவர்கள் இவ்வாறான விடயங்களை வைத்து பெண்களை மதிப்பிடுவார்கள்.

**பெருவிரல்**

காலில் உள்ள பெருவிரல் மற்ற நான்கு விரல்களை விட பெரியதாக இருந்தால் அவர்கள் அதிக படைப்புத்திறன் கொண்டவர்களாகவும், அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எளிதில் தீர்வைக் கண்டுபிடிக்கும் புத்திசாலியாகவும் இருப்பார்கள்.

அதேவேளை, மற்ற விரல்களை விட பெருவிரல் சிறியதாக இருந்தால், அவர்கள் ஒரே நேரத்தில் பல விடயங்களை செய்யும் திறமை கொண்டவராக இருப்பார்கள்.

**இரண்டாம் விரல்**

காலில் உள்ள இரண்டாம் விரல் பெரியதாக இருந்தால், அவர்கள் சமுதாயத்தில் ஒரு நல்ல தலைவராக விளங்குவார்கள்.

அதுவே இரண்டாம் விரல் சிறியதாக இருந்தால், அவர்கள் தனக்கு உள்ள வேலையை சுமையாக கருதாமல், எளிமையாக எடுத்துக் கொள்வார்கள். மேலும், அந்த வேலைகளைச் சரியாக செய்து முடிக்கும் குணத்தைக் கொண்டவர்கள்.

**மூன்றாம் விரல்**

காலில் உள்ள மூன்றாம் விரல் மற்ற விரல்களை விடவும் பெரியதாக இருந்தால், அவர்கள் தனது பணியில் தனித்துவம் மற்றும் ஆர்வம் மிக்கவர்களாக இருப்பார்கள்.

அதுவே மற்ற விரல்களை விட மூன்றாம் விரல் சிறியதாக இருந்தால், அவர்கள் தங்களின் வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ்வார்கள்.

**நான்காவது விரல்**

காலில் நான்காவது விரல் மற்றவிரல்களைவிடப்பெரியதாக இருந்தால், அவர்கள் தனது குடும்பத்திற்கு மிகவும் முக்கியத்துவம் அளிப்பவர்களாக இருப்பார்கள். அதுவே மற்ற விரல்களை விட நான்காவது விரல் சிறிதாக இருந்தால், அவர்கள் தங்கள் குடும்பத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க மாட்டார்கள்.

**சிறிய விரல்**

இந்த விரல் மிகவும் சிறியதாக இருந்தால், அவர்கள் குழந்தை மனம் கொண்டவர்களாக இருப்பார்கள். ஆனால் இவர்கள் எந்த ஒரு பதவியையும் விரும்பமாட்டார்கள்.

# இலங்கை – இந்திய...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதேவேளை, பாகிஸ்தானிடம் இருந்து பங்களா தேஸைப் பிரித்து சுதந்திர நாடாக்குவதற்கு இராணுவ உத்தியைப் பயன்படுத்தியிருந்த இந்தியாவின் போக்கையும் ஜனவர்த்தன மிகவும் அவதானத்தில் கொண்டிருந்தார்.

இத்தகையதோர் அணுகுமுறையின் பின்னணியிலேயே இலங்கை- இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் இலங்கை அரசமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டமும் இலங் கையால் கொண்டு வரப்பட்டது.

### அரசியல் தீர்வின் அடிப்படையிலான ஒப்பந்த நிபந்தனைகள்

இலங்கையின் ஒருமைத் தன்மை, இறைமை, ஐக்கியம் என்பவற்றைப் பேணுவதை முக்கிய நோக்கமாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் கொண்டிருந்தது.

அதேவேளை, இலங்கை பல்லின, பல மொழி பேசுகின்றவர்களாகிய சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் பறங்கியர் ஆகிய பல இனங்கள் வசிக்கின்ற நாடு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வோர் இனத்தவரும் தமது மொழி கலாசார அடையாளங்களைப் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ற வகையில் பிராந்தியங்களைக் கவனமாக உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

இலங்கையின் வடக்கும் கிழக்கும் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமாகவும், அங்கு அவர்கள் வரலாற்றுக் காலம் தொட்டு ஏனைய இனங்களுடன் வாழ்ந்து வந்தார்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இலங்கை பல மொழிகள், பல மதங்களைக் கொண்ட பல்லின சமூகங்கள் வாழ்கின்ற நாடு என்பதை ஏற்றுக்கொண்டு, அதன் அடிப்படையில் அந்த மக்கள் அனைவரும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் சம உரிமைகளுடனும், பாதுகாப்புடனும், ஐக்கியமாகத் தமது அபிலாஷைகள் நிறைவேற்றப்பட்ட வகையில் வாழ வழி செய்யப்படவேண்டும்.

இதன் அடிப்படையில் மாகாண சபை நிர்வாக முறை அமைய வேண்டும் என்பது இந்த ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு மாகாண சபையும் ஏனைய மாகாணங்களுக்குத் தனித்தனியே மாகாண சபைகளும் உருவாக்கப்பட வேண்டும். தற்காலி கமாக இணைக்கப்படுகின்ற வடக்கும் கிழக்கும் தொடர்ந்து இணைக்கப்பட்டிருக்க வேண்டுமா என்பது சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதும் ஒப்பந்தத்தின் நிபந்தனையாகும்.

அதேவேளை, ஆயுதக் குழுக்கள் தமது ஆயுதங்களைக் கையளித்து, ஜனநாயக நீரோட்டத்தில் இணைய வேண்டும். இராணுவம் தமது முகாம்களில் முடக்கப்பட வேண்டும். பாதுகாப்பு விடயங்களைக் கவனிப்பதற்காக வடக்கிலும் கிழக்கிலும் இந்திய அமைதிப்படை நிலைகொண்டு கடமையில் ஈடுபட்டிருக்கும் என்ற விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்த வகையிலேயே, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் மாகாண நிர்வாக முறைமை இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வாகக் கொண்டு வரப்பட்டது. ஆனாலும், ஜயவர்த்தன அரசும் சரி, அதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்களும் சரி அந்த ஒப்பந்தத்தின்படி, காரியங்களை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டவில்லை. மாறாக, ஒப்பந்தத்தின்படி இணைக்கப்பட்டிருந்த வடக்கும் கிழக்கும் இரண்டு வெவ்வேறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு இரண்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இலங்கை ஒப்பந்தத்தை முதற்படியாகக் கொண்டு, அதிலும் பார்க்க அதிக உரிமைகளும் அதிகாரங்களும் உள்ளடக்கப்பட்ட ஓர் அரசியல் தீர்வை நோக்கி முன்னேறுவது குறித்து சிந்திக்கவும் செயற்படவும் வேண்டியதே இன்றைய தேவையாகும்.

பிராந்திய பாதுகாப்பு, அரசியல் இராணுவ பொருளாதார ரீதியாக இந்தியா தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கு இலங்கையின் அரசியல் நிலைமை ஸ்திரமாக இருக்க வேண்டியது அவசியமாகும். அதேவேளை. மேற்கத்தைய நாடுகளும், இந்தியாவுக்கு எதிரான சக்திகளும் கால் பதிக்கத்தக்க நிலைமைகளை உருவாக்க வல்ல இனப்பிரச்சினைக்கு நியாயமான ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதும் அவசியமாகும். இத்தகைய நிலைமையில், இந்தியா இலங்கையின் இனப்பிரச்சினையில் ஆக்கபூர்வமான முறையில் பங்களிப்பு செய்து ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்கு முன் வர வேண்டும்.

ஏற்கனவே இதுவிடயத்தில் அக்கறை கொண்டு பங்களிப்பு செய்த இந்தியா விட்டகுறை தொட்ட குறையாகத் தொடர்கின்ற இனப்பிரச்சினை விவகாரத்தில் குறிப்பாக புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் தீர்வு காணும் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.★



# கடலுக்குள் புதைந்து கிடந்த புதிய உலகம் கண்டுபிடிப்பு

காணாமல் போன MH370 மலேசியா விமானத்தை கண்டு பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில், கடலுக்குள் புதைந்து கிடைந்த புதிய உலகத்தை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இந்த தேடுதல் நடவடிக்கையின் போது கடலுக்கு அடியில் புதைந்து கிடக்கும் புதிய உலகம் தொடர்பிலான வரைபடத்தை விஞ்ஞானிகள் வெளியிட் டுள்ளனர்.

எரிமலைகள், பள்ளத் தாக்குகள், முகடுகள் உள்ளிட்டவைகள் இருப்பது போன்ற வரைபடத்தை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமற்போன MH370 மலேசியா விமானத்தை தெற்கு இந்திய பெருங்கடல் பகுதியில் ஆஸ்திரேலியா, மலேசியா, சீனா ஆகிய நாடுகள் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தன.

இதன் போது கடலின் ஆழ்ந்த பகுதிகளில் நவீன தொழில்நுட்ப உதவியுடன் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. 1.20 லட்சம் சதுர கிலோமீற்றர் தூரம் வரையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

எனினும், ஆய்வில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இதன் காரணமாக தேடுதல் நடவடிக்கை கடந்த ஜனவரி மாதம் கைவிடப்பட்டது.

எவ்வாறாயினும், தேடுதல் நடவடிக்கையின் போது கடலுக்குள் புதிய உலகம் புதைந்து இருப்பதை கண்டறிந்த விஞ்ஞானிகள் இதுதொடர்பான வரைபடத்தை தயாரித்து வெளியிட்டுள்ளனர்.

இதன்மூலம் கடலுக்கு



அடியில் 6 கிலோ மீற்றர் அகலம், 15 கிலோ மீற்றர் நீளத்தில் முகடுகளும், 5 கிலோ மீற்றர் அகலம், 1200 மீற்றர் ஆழத்தில் பள்ளத்தாக்குகள் மற்றும் எரி மலைகள் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள ஆஸ்திரேலியா நாட்டு சுற்றுச்சூழல் மற்றும் புவியியல் ஆய்வுத் தலைவர் ஸ்டூவர்ட் மின்ஷின்-

‘கடலுக்கு அடியில் புதைந்து கிடக்கும் பகுதிகளைப் பற்றிய தகவல்கள் எதிர்காலத்தில் கடல் ஆராய்ச்சிக்குப் பெரிய உதவியாக அமையும்’ என்று கூறியுள்ளார்.



# மிக ஆழமான பகுதிகளில் தாமாக ஒளி பிறப்பிக்கும் பவளப் பாறைகள்

சில வகையான பவளப் பாறைகள் சூரிய ஒளிக்கு பதிலாக தாமே ஒளியைப் பிறப்பித்து தம்மைத் தாமே உயிர்ப்பிழைக்கச் செய்கின்றன என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சமுத்திரங்களின் மிகவும் ஆழமான பகுதிகளில் சூரிய ஒளி கிடைப்பது மிக மிக அரிதாகவே இருக்கும். இதனால் அந்தப் பகுதிகளில் உயிரினங்கள் வாழ்வதும் அரிதாகவே இருக்கும்.

ஆனால் சில வகையான பவளப் பாறைகள் சூரிய ஒளிக்குப் பதிலாக தாமே ஒளியைப் பிறப்பித்து தம்மைத் தாமே உயிர் பிழைக்கச் செய்கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை ஆழமான பகுதிகளில் அல்காக்கள் உணவு தயாரிப்பில் ஈடுபட உதவியாகவும் இருக்கின்றன.

சவுத்தாம்ரன் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் குழு ஒன்று மேற்கொண்ட ஆய்விலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. சூரிய ஒளி சமுத்திரங்களில் அதிகபட்சமாக 200 மீற்றர்கள் ஆழத்துக்கே ஊடுருவும்.

எனவே, இதனை விடவும் ஆழமான பகுதிகளில் காணப்படும் பவளப் பாறைகள் சுய ஒளியைப் பிறப்பித்து உயிர் வாழ்கின்றன.

# வினாடிகளில் செல்போன் பற்றரியை சார்ஜ் செய்யும் தொழில்நுட்பம்!

வினாடிகளில் செல்போன் பற்றியை சார்ஜ் செய்யும் புதிய தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

விரைவிலேயே சார்ஜ் ஏறும் பற்றரிகளை உருவாக்கும் வகையிலான எலக்ட்ரோட்களை விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர். இந்த புதிய எலக்ட்ரோட் செல்போன்களை சார்ஜ் செய்யும் நேரத்தில் உள்ள சிக்கலை தீர்க்கும் என்று கூறியுள்ள விஞ்ஞானிகள், எலக்ட்ரோனிக் வாகனங்களின் பற்றரிகளின் சார்ஜ் பிரச்சினைகளையும் தீர்க்கும் என்பதால் எலக்ட்ரோனிக் வாகன சந்தை ஏற்றம் பெறும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

எளிதில் எடுத்துச் செல்லும் எலக்ட்ரோனிக் சாதனங்களில் சூப்பர் கெபாசிட்டர்களை ஆற்றல் சேமிப்பான்களாக பயன்படுத்துவது குறித்து ஏற்கனவே சில முக்கியமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதிலுள்ள குறைகளைப் போக்கும் வகையில் புதிய கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது.

சூப்பர் கெபாசிட்டர்கள் விரைவில் ஆற்றலை ஏற்கவோ/இழக்கவோ கூடியதாக இருப்பது சிக்கலாகக் கருதப்பட்டு வந்தது. அதனைப் போக்கும் வகையிலான எலக்ட்ரோடாக MXene உருவாக்கப்பட்டுள்ளது.

இது செல்போன் பற்றரிகள், 'லெப்ரொப்'கள் மற்றும் வாகனங்களின் பற்றரிகளில் பயன்படுத்தப்பட்டால் சார்ஜ் செய்வதற்கான நேரம் பெரும்பான்மையாக குறையும்.

மணிக்கணக்கிலோ, நிமிடக்கணக்கிலோ அல்லாமல் சில வினாடிகளிலேயே பேட்டரிகளை சார்ஜ் செய்யும் இந்த தொழில்நுட்பத்திலான பற்றரிகளை கொண்ட செல்போன்கள் விரைவில் சந்தைக்கு வரும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. இதுவொரு பெரும் புரட்சியாகவே அமையும்.



# விரைவில் அறிமுகமாகிறது



# Ultra Mobile Pocket PC



மிகவும் சிறிய கணினிகளை உருவாக்கும் Raspberry கடி தொழில்நுட்பத்தில் மற்றுமொரு சிறிய தனி நபர் கணினி உருவாக்கப்பட்டுள்ளது.

Ultra Mobile Pocket PC எனப்படும் குறித்த கணினியை இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனமான Thingiverse வடிவமைத்துள்ளது.

சார்ஜ் செய்யக்கூடிய Lithium Ion மின்கலத்தைக் கொண்ட இக் கணினியை இலகுவாக இடத்துக்கு இடம் எடுத்துச் செல்ல முடியும்.

எனினும் இக் கணினியின் மேலதிக சிறப்பம்சங்கள் மற்றும் விலை தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

தவிர அறிமுகம் செய்யப்படும் திகதியும் குறிப்பிடப்படவில்லை.

இவை தொடர்பான தகவல்கள் விரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சம்சுங்கின் புதிய அறிமுகம் நோட்-8



சம்சுங் நிறுவனமானது தனது புதிய கலக்ஸி நோட்-8 இணை அறிமுகம் செய்யவுள்ளது. இது தொடர்பான ரீசர்களை ஏற்கனவே ருவிட்டரில் வெளியிட்டுள்ளது சம்சுங் நிறுவனம்.

எதிர்வரும் ஒகஸ்ட் 23ஆம் திகதி குறித்த நோட்-8 தொலைபேசியை அறிமுகம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலக்ஸி -8 இல் உள்ள சில சிறப்பம்சங்களும் இதில் உள்ளடக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் இந்த தொலைபேசியின் சிறப்பம்சங்களாக 6.3என்.ஜி-டிஸ்பிலே, 6ஜி.பி-ரம்ப், 12எம்.பி-கமரா, கைரேகை ஸ்கானர், 3300எம்.ஏச்-மின்கலம், ஆகியவை உள்ளடக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நில நடுக்கத்தை முற்கூட்டியே அறியும் சாதனம் உருவாக்கம்!



Raspberry Pi என்பது மலிவு விலையில் கிடைக்கக்கூடிய மிகச் சிறிய கணினி ஆகும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு OSOP எனும் நிறுவனம் நிலநடுக்கத்தை முற்கூட்டியே அறியக்கூடிய சாதனம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

இது Raspberry Shake 4D என அழைக்கப்படுகின்றது.

நிலநடுக்கத்தின்போது உருவாகும் கண்ணுக்குத் தெரியாத அசைவுகளைப் பார்ப்பதற்கும் இது உதவுகின்றது.

இச்சாதனம் தற்போது நிதி திரட்டும் நோக்கில் ஒடி ckstarter தளத்தில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

சுமார் 7,000 அமெரிக்க டொலர்கள் நிதி திரட்டப்பட்டதன் பின்னர் விற்பனைக்கு வரவுள்ளது.

# தானாகவே தொடர்ச்சியாக சார்ஜ் ஆகக் கூடிய ஸ்மார்ட் கைக்கடிகாரம்!




ஸ்மார்ட் தொழில்நுட்பத்தில் உள்ள மிக முக்கியமான குறைபாடாக மின்கலங்களின் குறைந்த நேர பாவனை காணப்படுகின்றது.

இதனை தவிர்ப்பதற்காக தொழில் நுட்பவியலாளர்கள் பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் தானியங்கி முறையில் தொடர்ச்சியாக சார்ஜ் ஆகக்கூடிய ஸ்மார்ட் கைக்கடிகாரம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த கைக்கடிகார வடிவமைப்பு நிறுவனம் ஒன்றே இந்த அற்புதமான தொழில் நுட்பத்தை உருவாக்கியுள்ளது.

இந்த தொழில்நுட்பத்தை எதிர்காலத்தில் iOS மற்றும் Android சாதனங்களிலும் பயன்படுத்த முடியும் என்பது விசேட அம்சமாகும்.

தற்போது நிதி திரட்டும் நோக்கில் இக் கடிகாரம் Kickstarter தளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# இயற்கையோடு இயைந்தவர்

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் களையெடுப்பிலிருந்து தப்பிக்கவே ஒவ்வோர் இனமும் போராடி வருகின்றன. அறிவியலாலும் அரசியலாலும் தங்களைத் தற்காத்துக்கொள்ள நிகழ்த்தி வரும் போராட்டமே வாழ்க்கை. இந்த வாழ்க்கையில் பழையன கழிதலும் புதியன புகுதலும் பூமியின் சம நிலையைப் பேணி வருகின்றன. தற்போது தரையில் வாழும் எந்தப் பெரிய விலங்கை விடவும் மனிதர்கள் நூறு மடங்கு பெருகியிருக்கிறார்கள். புதிய உயிரினங்கள் வாழவும் பெருகவும் வழி விடாத மனிதர்கள், காலத்தின் களையெடுப்பைத் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதன் விளைவே இயற்கையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள். இந்த இயற்கையை ஒரு காலம் வரை தான் தடுத்தாட்கொள்ள முடியும், ஒரேயடியாக தடுத்தால் உலகத்திலுள்ள அத்தனை இனங்களும் தரைமட்டமாகிவிடும் என்பதுதான் சூழலியலாளர்கள் சொல்லி வருவது.

கூடங்குளம், கதிராமங்கலம், நெடுவாசல் என்று தமிழகத்தில் தற்போது எழுந்துள்ள சூழலியல் பிரச்சினைகள் அனைத்தையுமே இந்த விதத்தில்தான் அணுக வேண்டியுள்ளது. பன்னாட்டு நிறுவனங்களுக்கான எதிர்ப்பாகவோ அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்கான முட்டுக்கட்டையாகவோ ஆட்சியாளர்களும் ஆளும் அரசின் ஆதரவாளர்களும் கொடிபிடித்தாலும்கூட இந்தப் போராட்டங்கள் ஓய்ந்துவிடக் கூடாது என்பதே என் விருப்பம். இனமும் மொழியும் ஒரு மனிதனின் அடையாளமென்றால், இயற்கையே அதன் ஆதாரம். ஆதாரத்தை அழிக்கக்கூடிய அரசையும் நிறுவனங்களையும் அனுமதிக்க ஆரம்பித்தால் வாழ முடியாது என்பதல்ல பிரச்சினை. பூமியே இல்லாமல் போகும் என்பதுதான் நிதர்சனம். அண்ணன் ஐங்கரநேசன் போன்றவர்கள் அதை வலியுறுத்தவே தங்களை வருத்திக்கொள்கிறார்கள். கேட்குமா தவளைச் சத்தம், வாழைகள் வாழுமா, நீல நஞ்சு, முற்றுகையில் மழைக்காடுகள், காணாமல் போகும் கடற்குதிரைகள், தந்திர விதைகளும் தற்கொலை விவசாயிகளும் என அவர் எழுதிய அத்தனை கட்டுரைகளுமே உயிர் நேசத்தையும் மானுட விடுதலையையும் கோருகின்றன.

## மிகுந்த ஆளுமையோடு நேர்முகம் காண்பவர்

பத்திரிகையாளராகப் பணிபுரிந்த காலத்தில் அண்ணன் ஐங்கரநேசன் எடுத்த நேர்காணல்களை ‘வேர் முகங்கள்’ என்னும் தலைப்பில் சாளரம் வெளியிட்டிருக்கிறது. ஈழத்திலும் தமிழகத்திலும் உள்ள கலை, இலக்கிய ஆளுமைகளோடு அவர் நடத்திய உரையாடல்கள் ஏழாவது ஊழி நூலுக்கு சற்றும் சளைத்ததல்ல. ஓர் ஆளுமையிடம் உரையாடுவதற்கு அந்த ஆளுமை குறித்த தகவல்களை அனைத்து மட்டத்திலிருந் தும் சேகரித்திருக்கிறார். நாளதுவரை அந்த ஆளுமையின் நடவடிக்கைகளையும்ஏற் கனவே அந்த ஆளுமை அளித்த நேர்காணல்களையும் தேடித்தேடிக் கண்கடைந்து வாசித்த பிறகே கேள்விகளைத் தயாரித்திருக்கிறார். இல்லையென்றால், எப்போதோ ஒருமுறை சத்யஜித்ரேயின் படங்கள் கட்டுரையைப் போல இலக்கணமாக இருக்கின்றன என்ற பாரதிராஜாவிடம், கலைப் படங்களுக்கான உங்கள் வரையறை என்னவென்று கேட்டிருக்க முடியாது. பாரதிராஜாவும் கலைப்படங்களுக்கான வரையறையாக சாந்தாரா மின் படங்களை உதாரணமாகச் சொல்லியிருக்க வாய்ப்பில்லை.

பாலச்சந்தரைவிட சினிமா மொழியை நன்கு புரிந்துகொண்ட நீங்கள், ஏன் பாலச்சந்தர் அளவுக்கு பல்வேறுபட்ட கதைகளைக் கையாளவில்லை எனக் கேட்கவும் அதற்குப் பாரதிராஜா, அடிமட்ட வாழ்விலிருந்து வந்த நான், ஒரே பாய்ச்சலில் மேலே வந்துவிட்டேன். எனவே, இடைப்பட்ட நடுத்தர வர்க்கத்து வாழ்வை என்னால் தொட முடியவில்லை என பகிர்ந்துகொள்ளும் சூழல் ஏற்பட்டிருக்காது.

## யார் தமிழன்? எது கவிதை?

ஓர் ஆளுமை குறித்து வாசகங்கள் அறிந்துகொள்வதைவிட, அந்த ஆளுமையே அறிந்துகொள்ளத்தக்க கருத்துக்களை உள்ளடக்கியுள்ள அவருடைய நேர்காணல்கள் பத்திரப்படுத்தத்தக்கவை. குறிப்பாக, ஈழப் போராட்டக் களத்தில் ஒரு கையில் எழுதுகோலும் மறுகையில் துப்பாக்கியுமாயிருந்த புதுவை இரத்தினதுரையிடம் அவர் நடத்திய நேர்காணல் நெகிழ்வானது. பொதுவாக போராட்டக் களத்திலிருந்து வெளிப்படும் கவிதைகள் கவிதைகளே அல்ல என்று தமிழ்நாட்டு சிறுபத்திரிகைகள் கூறுகின்றமை குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்ற கேள்விக்கு, இரத்தினதுரை அளித்திருந்த பதில் கண்ணீர் விட வைத்தது.

புலிகள் அமைப்பில் புது அங்கத்தினருக்குத் தரப்படும் படிவத்தில் போராட உங்களைத் தூண்டியது எது என்னும் கேள்வி இருக்கும். அந்தக் கேள்விக்குப் பல இளைஞர்கள் இரத்தினதுரை அண்ணனின் கவிதைகள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்க, நாட்டை மீட்கவும் உரிமைக்குப் போராடவும் தூண்டுபவை கவிதைகள் இல்லையென்றால் வேறு எது கவிதைகள் என்று கேட்டிருப்பார்.

கவிதைக்கான அளவுகோல் ஆளாளுக்கு சூழலுக்குச் சூழல் மாறுபாடுடையது. எனக்கு எது கவிதை என்று படுகிறதோ அது இன்னொருவருக்கு கவிதையாகாமல் போகலாம். ஆனாலும், கவிதைகளின் உச்சமான பணியாக நான் கருதுவது இதைத்தான் என்றிருக்கிறார். அதைவிட இன்னொரு சம்பவம், புதுக்குடியிருப்பில் ஒன்பது வயது பெண் பிள்ளை ஒன்று கிணற்றில் விழுந்து விடுகிறாள். மயக்க நிலையில் அந்தப் பெண் பிள்ளையை மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்கையில், ‘எதிரிகளின் பாசறையைத் தேடிப்போகிறோம், தமிழீழ மண்ணை மீட்டெடுக்க ஓடிப்போகிறோம்’ என்று பாடியதாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே, அதுதான் ஒரு கவிஞனின் முழு திருப்தி எனவும் சொல்லியிருப்பார். மண்ணையும் மக்களையும் நேசிக்கக்கூடிய படைப்பாளிக்கு இலக்கிய அங்கீகாரம் இரண்டாம் பட்சம்தான். மக்கள் அதிகாரமே முதன்மையானது; முக்கியமானது.

## பல்துறைப் பத்திரிகையாளர்

அண்ணன் ஐங்கரநேசன் அளந்து அளந்து காலடியை எடுத்து வைப்பவர். எதைச் செய்தாலும் நேர்த்தியும் உண்மையும் அவரை நிழலாகத் தொடர்ந்து வரும். வேர் முகங்கள் தொகுப்பில் அவர் நேர்காண தேர்ந்தெடுத்த நபர்கள் பல தரப்பட்டவர்கள். சி.மௌனகுரு, மணவை முஸ்தபா, இ.பத்நாப ஐயர், த. ஜெயகாந்தன், நா. சுப்ரமணியன், பரமு. புஷ்ப ரட்ணம், ஞானரதன், சுஜாதா, டிராட்ஸி மருது என சகல துறையினரையும் நேர்கண்டு எழுதியிருக்கிறார். யார் எந்த விதத்தில் சிறப்பு என்பதும் யாரிடம் என்ன கேள்வியை முன்வைக்க வேண்டும் எனவும் அவருக்குத் தெரிந்திருக்கிறது. சூழலியலில் ஆர்வமுடையவர் என்பதால் அதுபற்றி மட்டுமே எழுதுபவராக அவர் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளவில்லை. அடிப்படையில் பத்திரிகையாளராக இருந்ததால் யாரை எதிர்கொள்வதிலும் அவருக்குச் சிக்கல் ஏற்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் வெகுகாலம் தனியார் பயிற்சி வகுப்புகள் நடத்தியதன் மூலம் ஆசிரியராகவும் அறியப்பட்ட அவரைப் பின் தொடர்ந்து வர ஓர் இளைஞர் பட்டாளமே காத்திருக்கிறது. அதன் காரணமாகவே போருக்குப் பிந்தைய தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக அவர் நிறுத்தப்பட்டார். மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று வெற்றியும் கண்டார். சூழலியல் சார்ந்து பேசியும் எழுதியும் வந்த அவரை, வட மாகாண முதல்வர் க. வி. விக்னேஸ்வரன் வேளாண்மை, கால்நடை, நீர்பாசனம்,சூழல் ஆகிய துறைகளுக்கான அமைச்சராக்கினார். அமைச்சர் என்றால் தமிழ்நாட்டு அமைச்சரைப் போல தண்ணீர் ஆவியாகாமல் இருக்க தெர்மாக்கோலை போர்வையாக்கி மூடுபவராக அவர் அல்லர். துறைசார்ந்த தேர்ச்சியும் தெளிவும் மிக்கவராக அவர் செயற்பட்டார். அரசு சார்பில் நடத்தப்பட்ட மரம் நடும் விழாவையும் மாவீரர் மரம் நடு விழாவாகவே அறிவித்தார். காணொலி மூலம் அவர் ஆற்றியிருக்கும் பணிகள் பற்றிய தகவல்கள் இணையத்தில் கிடைக்கின்றன.

## இயற்கை வேளாண்மையை எப்போதும் ஊக்குவித்தவர்

அவர் பொறுப்பேற்றமையிலிருந்து உரங்களைத் தெளித்து வயலையும் வயிறையும் புண்ணாக்காத இயற்கை வேளாண்மைக்கு மக்களைப் பழக்கினார். அவர் விரும்பி அழைத்ததால் ஒரே ஒரு முறை யாழ்ப்பாணம் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. வேளாண்மைத் திருவிழாவாகக் கொண்டாடப்பட்ட அவ்விழாவில் என் தலைமையில் கவியரங்கத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். அவர் நோக்கம் கவியரங்கை நடத்தி என்னை சிறப்பிப்பது மட்டுமல்ல, போரின் சாட்சிகளாகச் சிதிலமடைந்து கிடக்கும் தன்னுடைய ஊரையும் உறவையும் எனக்குக் காட்டுவதே. தமிழகத்தில் இருந்துகொண்டு தங்களையும் தங்கள் அரசியல் முன்னெடுப்புகளையும் விமர்சித்துக் கொண்டிருப்பவர்கள் அங்குள்ள நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே அவர் பெரு விருப்பமாக இருந்தது. ஒருவார காலம் அங்கிருந்தேன். அந்த ஒருவார காலத்தில் அவர் என்னை இரண்டுமுறைதான் சந்தித்தார். கிளிநொச்சியில் கவியரங்கம். கவியரங்கில் கலந்துகொண்ட அத்தனைபேருமே வெகு சிறப்பாக கவிதை வாசித்தார்கள். இரண்டாவது நாளிலிருந்து என்னோடு சில இளைஞர்கள் சேர்ந்துகொண்டார்கள்.

## வழிகாட்டி இளைஞரணி

அரசியல் மாச்சர்யங்கள் கொண்ட இந்த இளைஞர்கள், உனக்கு யாழ்ப்பாணத்தின் அத்தனை திக்குகளையும் காட்டுவார்கள். நீ எந்த அரசியலோடு ஈழத்தை பார்க்கிறாயோ அதே அரசியலோடு பார்த்துவிட்டுப் போ. உண்மை ஒன்றாகவும் உலகம் ஒன்றாகவும் சொல்வதை உணர்வுபூர்வமாக நீயும் விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு என்று சொல்லி விட்டு அந்த இளைஞர்களின் கையில் என்னை ஒப்படைத்தார்.

அந்த இளைஞர்களில் ஒருவர் ஏற்கனவே எனக்குத் தமிழகத்தில் அறிமுகமாகியிருந்த கவிஞர் செல்வம். அறிவுமதி



அண்ணன் அலுவலகத்தில் சில ஆண்டுகள் தங்கியிருந்த அவரைத் தவிர ஏனைய இளைஞர்கள் எல்லோருமே எனக்குப் புதியவர்கள். விடுதலைப் புலிகள் குறித்த மாற்று அபிப்பிராயம் கொண்டிருந்தவர்களும் அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தார்கள். அத்தனை இளைஞர்களுமே போராட்டத்தின் வலிகளையும் தோல்வியின் கசப்புகளையும் என்னோடு பகிர்ந்துகொண்டார்கள். போர்க்காலத்தில் புலிகள் ஊடகப் பிரிவில் புகைப்பட கலைஞராகப் பணி யாற்றிய ரமணனால் அரைமணி நேரத்திற்கு ஒருமுறை அழாமல் என்னிடம் பேச முடியவில்லை. கொலையுண்டு கிடக்கும் குழந்தைகளின் சடலத்தின் மீது நடந்துபோய் பெரியவர்களைப் படம்பிடித்த காட்சியை அவர் விவரிக்கையில் நெஞ்சே அடைத்துவிடும் போலிருந்தது. பக்கத்து வீட்டு குடும்பமே பலியுண்டு கிடக்கையில், உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த ஒருவர் அவர்கள் வீட்டில் வைத்திருந்த அரிசிப் பானையைத் துழாவிய கொடூர சூழலை அவர் அழாமல் சொல்ல வேண்டுமென்று நான் எதிர்பார்த்தமை எத்தனை பெரிய வன்முறை என என்னை நானே நொந்து கொள்கிறேன்.

ஈழத்து வீதிகளிலும் முல்லைத்தீவின் ஓரங்களிலும் போரின் சுவடுகள் நான் போயிருந்த வருடத்தில் கழுவப்படாமல் இருந்தன. ஒல்லாந்தர் கோட்டை சுவர் முழுக்க பட்டுத் தெறித்திருந்த குண்டுகளின் வார்ப்படங்கள் துயர ஓவி யத்தின் வண்ணங்களைக் பூசிக்கொண்டிருந்தன. அம்மைத் தழும்புகளைப் போல மதில் சுவர்கள் நெடுக தோட்டாக்கள் துளைத்த வடுக்கள் துருத்திக்கொண்டிருந்தன. முள்ளிவாய்க்கால் பிரதேசங்களில் என்னுடைய கால்கள் நடந்தபோது, காலையிழந்தும் கையையிழந்தும் ஒரு பெரியவர் போய்க் கொண்டிருந்தார். வன்னிக் காடுகளிலும் வடமராட்சியிலும் பாதி கருகிய நிலையில் பனைமரங்கள் நின்றுகொண்டிருந்தன. நல்லூர் கந்தசாமி கோயிலில் வழக்கம்போல தீபாராதனைகள் நடந்தன. திலீபனின் நினைவுத்தூணை இலங்கை இராணுவம் சிதைத்திருந்தது. புனரமைக்கப்பட்ட யாழ் நூலகத்தில் என்னுடைய கைகளில் தட்டுப்பட்ட கவிதை நூலை எழுதியவர் நீலாவாணன் என்னும் பெயரைத் தாங்கியிருந்தார். கடல்வழியே கடந்தால் சில கிலோ மீற்றர் தொலைவே உள்ள ஒரு நாட்டில் அத்தனை அழிவுகள் நடந்தபோது, எந்தக் கவலையுமில்லாமல் போராட்டம் குறித்து பொறுப்பற்று பேசிய தமிழகத்தில் பிறந்த தற்காக அப்போது வெட்கமாயிருந்தது.

அந்த நெருக்கடியான சூழலிலும் என்னை அடையாளம் கண்டுகொண்ட ஒரு பெண்மணி, என்னுடைய சினிமா பாடலை மெச்சினார்.

காற்று வழியாக உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இராணுவ முகாம்களை அச்சத்தோடு கடக்கிற பொழுதெல்லாம் தூரத்திலிருந்து கேட்கும் ஏதோ ஒரு பாடல் எங்களுக்குத் தைரியமூட்டுகிறது. அந்தப் பாடல்கள் எங்கள் தனிமையை விரக்தியை அனைத்தையும் இழந்த அவல நிலையை ஓரளவு மறக்கடிக்கிறது. என்றோ ஒருநாள் உங்கள் கைகள் எங்களை ஏந்திக்கொள்ளும் என்றார். அந்தப் பெண்மணியைப் பொறுத்தவரை அதிகம் படித்தவராகவோ அரசியல் மதிநுட்பம் நிறைந்தவராகவோ தென்படவில்லை. என்னைப் பார்த்ததும் அவருக்குச் சொல்லத் தோன்றியதை சொல்லிவிட்டு நகர்ந்துவிட்டார். என்னால்தான் அதன்பின் ஓர் அடிகூட எடுத்துவைக்க முடியாமல் போனது. உடனிருந்த இளைஞர்கள் என்னை சகஜமாக்குவதற்காக ஏதோதோ பகிடி செய்தார்கள். இப்படித்தான் ஒருமுறை என்று அவர்கள் சொல்லத்தொடங்கிய எந்த கதைகளும் அதன்பிறகு என் செவிகளுக்கு எட்டவில்லை. பக்கத்திலிருந்தும் பார்க்காமல் விட்டுவிட்டலாமே என்னும் துக்கம் தொண்டையை நெரித்தது.

## வழியனுப்ப வந்தார்

ஒருவாரம் அங்குமிங்கும் அழைத்து சென்ற இளைஞர்கள், வாரக்கடைசியில் என்னை வழியனுப்ப வந்திருந்த அண்ணன் ஐங்கரநேசனிடம் ஒப்படைத்தார்கள். பயணம் எப்படியிருந்தது என்றார். வலி நிறைந்த இந்த பயணத்தில் நீங்கள் எப்படி வாழ்வை நடத்துகிறீர்கள் என்றேன். வாழ்வே வலி நிறைந்ததுதான் என்று புரிந்துகொண்டால் எந்த பயணமும் சிரமமில்லை எனச் சொல்லி வழக்கம்போல் சிரித்தார். இப்போது அவர் வகித்துவந்த அமைச்சர் பதவியை அரசியல் காழ்ப்பு காரணமாக அவரே ராஜினாமாச் செய்யும் நிலை ஏற்பட்டிருக்கிறது. நீதிமன்றத்தை நாடுகிறார் அமைச்சர் ஐங்கரநேசன் என்னும் தலைப்பில் பிரபல இணைய பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. செய்தி அதுவாயிருந்தாலும் அவர் மக்கள் மன்றத்தையே நாடுவார். மக்களுக்கு அவர் மீதுள்ள நம்பிக்கை எத்தகைய உண்மையுடையதோ அதே உண்மையுடன் அவரும் மக்களை மட்டுமே தன் நெஞ்சத்தில் இருத்திக்கொண்டுள்ளார். மக்களால் நேசிக்கப்படும் ஒருவர், எத்தகைய இக்கட்டிலும் மக்களிடமிருந்து விலகி அதிகாரத்தின் கைகளுக்குள் அகப்படுவதில்லை. வாழ்வே வலி நிறைந்ததுதான் எனப் புரிந்து கொண்ட அண்ணன் ஐங்கரநேசன், புதிய வலியைத் தாங்கிக்கொள்ளும் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

எளிய வாழ்விலிருந்து அரசாங்கத்தின் அமைச்சர் பதவிவரை எட்டமுடிந்த அவருக்கு சூழலியலின் சகல சூட்சுமங்களையும் காலம் கற்பித்திருக்கும். எந்த இக்கட்டான நிலையிலும் அறத்தை வழுவி நிற்பவர்களை ஊழியால் ஒன்றும் செய்ய முடியாது. அதே நம்பிக்கையோடும் அதே உண்மையோடும் அவர் தன்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களை தார்மீக நெறியோடு எதிர்கொண்டு சாதிப்பார் என்றே தோன்றுகிறது. பாதீனியத்தை ஒடுக்குவதற்கு எம்முன்னால் உள்ள ஒரே தீர்வு, அவை பெரும் எடுப்பில் சூழ்ந்துகொள்வதற்கு முன்னால் கைகளால் பிடுங்கி அழிப்பதுதான் என படையெடுக்கும் பாதீனியம் என்னும் கட்டுரையில் எழுதியிருப்பார். தற்போதும் அவர் தன்னைச் சுற்றி மண்டிக்கிடக்கும் அரசியல் பாதீனியத்தைப் பிடுங்கி எறியும் பணியில்தான் இறங்கியிருக்கிறார். ★



# கௌரவத்தை விடப் பணமும் கற்பை விடச் சுகமும் பெரிதல்ல!

சந்தியடியில் ஊர் வம்பளக்க வழக்கம் போன்று வாத்தியார், ஏரம்பர், ஜீவன், ரூபன், பேப்பர்தம்பி மற்றும் கச்சான் விற்கும் செல்லாச்சி ஆகியோர் கூடியிருந்தனர்.

''நாங்களும் எங்கடை ஊடகங்களும் அரசியலுக்குக் கொடுக்கிற முக்கியத்துவத்தை,நம்மைச்சுற்றி நடக்கிற சமூகப் பிரச்சினைகளுக்குக் கொடுக்கிறதில்லை''என்று ஊர்வம்பைத் தொடங்கினான் ரூபன்.

''தங்களுக்குள்ளை புடுங்குப்படுகிற அரசியல்வாதிகளைப் பற்றிக் கதைச்சும் என்ன பயன்''என்று சலித்துக் கொண்டாள் செல்லாச்சி.

''எங்கடை சமூகமே ஒரு பிரச்சினையாக இருக்கும்போது, அந்தச் சமூகத்துக்கு வாற பிரச்சினையை எப்படி சமாளிக்கிறது''என்று சொன்னான் ஜீவன்.

''நீ கொஞ்சம் சும்மா இரு.ரூபன் முக்கியமான விசயம் சொல்லவாறான் போல இருக்கிறது''என்று ஜீவனை அடக்கினாள் செல்லாச்சி.

இதனைக் கவனிக்காமல் ரூபன் ''வீதிகள்,பேருந்து நிலையங்கள் போன்ற பொது இடங்களில் பெண்கள் மீதான சீண்டல்களும் கேவலப்படுத்தல்களும் இப்போது அதிகரித்து வருகின்றன. இதனை அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கதைத்து விட்டு மீண்டும் அரசியல் அலங்கோலங்களைப் பற்றிக் கவலைப்படச் செல்லுகின்றோமே தவிர, நிரந்தரத் தீர்வுக்கு எவரும் நடவடிக்கை எடுப்பதாகக் காணவில்லை''என்று பிரச்சனையைச் சொன்னான்.

''இப்ப அதிகரித்து விட்டதற்கு பெண்பிள்ளைகள் எதையும் வெளியிலை சொல்லத் தயங்கி வந்ததும் ஒரு காரணம்'' என்றார் ஏரம்பர்.

அவர் சொல்லி முடிக்க முன்னரே பட்டென்று வெடித்தாள் செல்லாச்சி.

''நல்ல சனமடாப்பா.யாருக்குப் பிரச்சினையோ அவையின்றை தலையிலையே குற்றத்தையும் சுமத்துங்கோ.முந்தி ஒரு பொம்பிளைப்பிள்ளை படிக்க ஆசைப்பட்டால், சாகும்வரை உண்ணாவிரதம் இருந்துதானே எங்கடை ஊரிலை படிக்க வீட்டிலை அனுமதி வாங்க வேண்டியிருந்தது.இதிலை வெளியிலை நிக்கிறவங்கள் சொறிச்சேட்டை விடுறாங்கள் என்றால், அவங்களை தட்டிக் கேக்கிறதில்லை.பிள்ளையின்றை படிப்பைத்தானே நிப்பாட்டினனீங்கள்'' என்று கோபமாகச் சொன்னாள் செல்லாச்சி.

''உண்மைதான்''என்று செல்லாச்சியின் வாதத்தை ஏற்றுக் கொண்ட வாத்தியார், ''பெண்கள் தங்களின் மீது நடத்தப்பட்ட வன்கொடுமைகளை இத்தனை நாளாகச் சகித்துக் கொண்டிருந்தவை. ஏனென்றால் வெளியில் சொன்னால் இந்தச் சமுதாயத்தின் அவமதிப்புக்கு ஆளாக நேருமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது.அதைவிட சமூகம் அவர்களுக்கு அப்படித்தான் சொல்லிக் கொடுத்து வளர்த்திருந்தது''என்று யதார்த்தத்தைச் சொன்னார்.

''ஆனால் இப்போது அந்த வெருட்டல் எல்லாம் பெண்களின் மத்தியில் குறைந்து வருகிறது.அவர்கள் துணிந்து குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த முன்வருகிறார்கள்.இது வரவேற்கப்பட வேண்டிய மாற்றம்''என்றான் பேப்பர்தம்பி.

''அதுக்கு எங்கட பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியிலை வந்து போராட்டத்திலை ஆணுக்குச் சமமாக நின்று காட்டியதும் காரணம்.அதுக்குக் காரணமானவையை மறக்கக் கூடாது''என்று பெருமிதத்துடன் சொன்னாள்.

''இப்பவெல்லாம் கிழடுகட்டைகளைத்தானே நம்ப முடியாமல் இருக்கு'' என்று ஏரம்பரைப் பார்த்தபடியே நக்கலாகச் சொன்னான் ஜீவன்.

ஏரம்பரோ அதனைக் கவனியாமல் ''படுமோசமான வக்கிரம் பிடித்தவர்களாக ஆண்கள் மாறி வருவது ஆபத்தான விசயம்.அப்பாவிப் பெண்கள் மீது பாலியல் வக்கிரத் தாக்குதல்களை நடத்தும் அசிங்கமான சமுதாயமாக மாறிப் போச்சு.''என்றார்.

''ஊடகங்களிலை வாறதுகளைப் பார்த்தால், உவங்களுக்குப் பழைய காலத் தண்டனைதான் சரி என்று நினைக்க வைக்குது.விவரமறியாத சின்னஞ்சிறுசுகளைக்கூட. அதுகளின்றை தகப்பன், தாத்தன் வயசிலை இருக்கிறதுகள் வன் கொடுமை செய்யிறதை கேள்விப் படேக்கை உடம்பே நடுங்குது.அதுகளின்றை அயோக்கியத்தனங்களையே எங்களாலை சீரணிக்க முடியேல்லை.இதிலை நடுத்தர வயசுக்காரங்களின்றை ஆட்டங்கள் வேறை'' என்று சீறினாள் செல்லாச்சி.

செல்லாச்சியின் கோபத்தால் சந்தியடியில் அமைதி நிலவியது.அதனைக் கலைத்தார் வாத்தியார்.

''முன்னைய காலத்திலை,முறை தவறிய உறவு முறைகளும்,சல்லிக் காசும் பெறாத காரணத்தால் பெறப்படும் விவாகரத்துகளும்,படுகேவலமான உணர்வு வெளிப்பாடுகளும் வெளிநாடுகளிலை வெளிநாட்டவரின் நாகரிகத்திலை நடக்கிற விசயங்கள் என்று சொல்லிச் சிரிச்சனாங்கள்'' என்று சொன்னார் வாத்தியார்.

அப்போது இடைமறித்த ரூபன், ''இப்ப வெளிநாட்டார் 'வக்கிரத்திலை ஊறிப்போன தேசம்'என்று எங்கடை நாட்டைப் பார்த்து முகம் சுழிக்கிற அளவுக்கு , பெண்கள் மீதான வன்கொடுமைகள் இங்கு அதிகரித்து விட்டன'' என்றான்.

''உண்மையிலை எங்கடை நாகரிகத்தில் தாய்மைக்கும் பெண்மைக்கும் மிக உயர்வான மரியாதையும் அங்கீகாரமும் தரப்பட்டது.இதுதான் எங்களது நாகரிகத்தின் பலமாகவும் இருந்தது. இதனால்தான் மேலைநாட்டவரும் எங்கடை நாகரிகத்தை மதித்தனர். ஆனால் இப்ப நடக்கிறதைப் பார்த்தால் எங்கடை கலாசாரதிலை பெண்மைக்குத் தரப்பட்ட உயர்வு வெறும் ஏட்டுச் சுரைக்காய் என்றல்லவா ஆகிப்போயிருக்கு''என்று கவலையுடன் சொன்னார் ஏரம்பர்.

அதுவரை கைபேசிக்குள் மூழ்கியிருந்த ஜீவன் ''கடந்த பல வருடங்களாகவே உலக மயமாக்குதல் என்ற பெயரில் நாடுகளைச் சந்தைகளாகக் கருதி, தங்களது பொருள்களை மேலை நாடுகள் கூறுகட்டிக் கடை பரப்புவது வழமையாகிவிட்டது.நாங்களும் தேவையா தேவையில்லையா என்று பார்க்காமல் விளம்பரங்களில் மயங்கி, பொருள்களை வாங்கும் நுகர்வுக் கலாசாரத்துக்குள் மாட்டுப் பட்டுவிட்டோம். இதனால் ஏற்படும் சமுதாய மாற்றம் தான் பெருகிவரும் இந்தப் போக்குக்குக் காரணம் என்று ஆய்வாளர்கள் சொல்லுகினம்''என்றான்.

இதனைத் தலையசைப்பால் ஆமோதித்த பேப்பர்தம்பி, ''காலம்காலமாக எங்களிடையே இருந்து வந்த குடும்பக் கட்டுக்கோப்புக் குலைந்து,நாகரிகம் என்ற பெயரில், ஒழுக்கக்கேடுகள் சமுதாய அங்கீகாரம் பெறத் தொடங்கி விட்டன. சமூகத்தில் உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள் மீதும், மதிப்பான பணிகளில் இருப்பவர்கள் மீதும் சுமத்தப்படும் பாலியல் குற்றச்சாட்டுகளில் அவர்களுக்கு உரிய தண்டனை கிடைப்பது உறுதிசெய்யப்படவில்லை.கல்வி என்பது ஒழுக்கத்தையும் நேர்மையையும், ,வாழ்க்கை நெறிமுறைகளையும் உணர்த்தாமல் வெறும் வேலைவாய்ப்பையும் பணம் சம்பாதிப்பதையும் மட்டுமே நோக்கங்களாக முன்னிறுத்திச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.இவையெல்லாம் சேர்ந்துதான் நம்மிடையே பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள் அதிகரிக்கக் காரணங்களாக அமைந்து விட்டன'' என்று சொன்னான்.

''இவை மட்டுமில்லை''என்று சொன்ன வாத்தியார் ''கடவுள் நம்பிக்கை எங்களிடம் குறைந்தது கூட இந்த வக்கிரங்கள் அதிகரிக்கக் காரணமாக இருக்கலாம்.வழிபாட்டுத்தலங்களில் இப்பவெல்லாம் ஆடம்பரமும் தன்முனைப்பும் முன்னிறுத்தப்படுகின்றனவே தவிர, பக்தியும் நம்பிக்கையும் நற்சிந்தனைகளும் காணாமல் போய்விட்டன.மத குருமார் சிலரின் நடத்தைகளும் இறைபக்தியைக் குறைக்கக் காரணமாகி விட்டன.இறைபக்தி குறைந்ததால் 'தவறு செய்தால் தெய்வம் தண்டிக்கும்'என்ற அச்ச உணர்வும் இல்லாமல் போய் விட்டது.''என்று வருத்தப்பட்டார்.

அப்போது ரூபன், ''முன்னரெல்லாம் கடன் வாங்குவதுகூட அவமானமாகப் பார்க்கப்பட்ட காலம் இருந்தது.ஆனால்




இன்று கேவலமான குற்றம் செய்து போட்டும், கொஞ்சம் கூடக் குற்ற உணர்வு இல்லாமல் கலியாண வீடு முதல் செத்த வீடு வரை ஆக்களுக்கு முன்னால் சிரிச்சுக் கொண்டு நிக்கிறாங்கள்.கேவலமான தவறுகளைச் செய்தால் சமூக ஏளனத்துக்கு ஆளாக வேண்டி வருமே என்ற பயமே இப்ப இல்லாமல் போய் விட்டது.இந்தமாதிரியான நிலைமையும் தவறுகள் அதிகரிக்கக் காரணமாகிவிட்டன'' என்றான்.

இதைக் கேட்ட வாத்தியார், ''ஒரு சமூகத்தில் ஒழுக்கத்தை விடச் சுகம் தான் பெரியது என்று பெண்களும்,கௌரவத்தை விடப் பணம் சம்பாதிப்பதுதான் முக்கியம் என்று ஆண்களும் நினைத்து விட்டால் அந்தச் சமூகத்தை சமூகச் சீர்கேடுகளில் இருந்து ஆண்டவனால் கூடக் காப்பாற்ற முடியாது.'' என்று உறுதியாகச் சொன்னார்.

''ஆனால் இப்போது பாலியல்கொடுமைகள் மிக மோசமாக வளர்ந்து, வக்கிரத்தனத்தில் போய் நிற்கின்றன என்பதுதான் பேரதிர்ச்சியாக இருக்கின்றது'' என்றான் ரூபன்.

அதற்குப் பேப்பர்தம்பி, ''இயற்கையை மீறிய உறவுகள்,திருமணமாகாமல் சேர்ந்து வாழ்வது,சின்னஞ்சிறிய பிரச்சினைகளுக்குக் கூட நீதிமன்றப் படியேறி விவாகரத்துக் கோருவது என்பவையெல்லாம் சமூகத்தில் சர்வ சாதாரணமான விடயங்களாகிவிட்டால், அதிலும் இவையெல்லாம் நாகரிகமான விசயங்கள் என்று நாங்கள் நினைத்தால்,அதைவிடப் பேராபத்து எங்கடை சமூகத்துக்கு வேறெதுவுமே இருக்க முடியாது'' என்று அதிர்ந்து போய்ச் சொன்னான் பேப்பர்தம்பி.

''இந்த வக்கிரங்களுக்கு ஊடகங்களும் துணைபோகின்றன என்பதுதான் கவலையான விடயம்''. என்று கைபேசியைப் பார்த்துக் கொண்டே சொன்னான் ஜீவன்.

''உண்மைதான்'' என்ற பேப்பர்தம்பி, ''கலையும் இலக்கியமும் மக்கள் மனங்களைப் பண்படுத்தவும் நாகரிகத்தை மேம்படுத்தவும் முன்னோர்களால் பயன்படுத்தப்பட்டன.இன்று அவையும் வியாபாரமாகி விட்டன.திரைப்படங்கள்,தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்,நாளேடுகள்,வார இதழ்கள் என்று நம்மிடையே வந்து குவிந்து கிடப்பவற்றில் பெரும்பாலானவை வியாபாரம் என்ற பெயரில்,விரசத்தையும் வக்கிரத்தையும் நாகரிகத்தின் வெளிப்பாடுகளாக சித்திரிக்கும் போக்கு சமூகத்துக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது'' என்றான்.

''இதிலை இன்னொரு விசயமும் இருக்கு.தெருவுக்குத் தெரு திறந்து வைச்சிருக்கிற மதுபானக்கடைகளும், அங்கு எந்தவிதக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் எவருக்கும் எப்போதும் கிடைக்கும் குடிவகைகளும் சமூகச் சீர்கேடுகளுக்குக் காரணம்.அதோடை மிதமிஞ்சிய வாசனைத் திரவியங்கள் பயன்படுத்திச் சமைக்கப்பட்ட உணவு வகைகள்,குறிப்பாக அசைவ உணவுகளால் மனிதனுக்குள் இருக்கும் மிருக குணம் தூண்டப்படுதல் என்பது விஞ்ஞானம் ஏற்றுக்கொண்ட உண்மை.'' என்றார் ஏரம்பர்.

''ஆக மொத்தத்தில் விரசத்தை வெளிச்சம் போட்டு வியாபாரம் செய்யும் ஊடகங்கள்; ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுக்காமல் வேலைவாய்ப்புக்காகவும், பணம் சம்பாதிக்கவும் மட்டுமே உதவும் கல்விச்சாலைகள்; பாசம் என்கிற பெயரில், குடும்ப உறவுகளையும், நல்ல பண்புகளையும் ஒதுக்கி வைத்து விட்டுக் குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர்கள், மக்கள் நலனையும், வருங்கால சந்ததிகளையும் பற்றிக் கவலைப்படாமல், அடுத்த தேர்தலில் வென்று தமது வசதிகளைப் பெருக்கினால் போதும் என்று செயற்படும் தலைமைகள்- என்று இருக்கிற நிலையில் வக்கிரங்கள் விஷக்கிருமிகளாய் வளராமல் என்ன செய்யும்?'' என்று விரக்தியாகக் கேட்டார் வாத்தியார்

''இதற்கு உடனடித்தீர்வை வேண்டுமென்றால் பொலிஸும் நீதித்துறையும் தரலாம்.ஆனால், நிரந்தரமான நிலையான தீர்வு கிடைக்க ஒழுக்கத்தை வலியுறுத்தும் கல்வி முறையும்,மனிதநேயத்தையும் சத்தியத்தையும் வளர்க்கும் வழிபாட்டிடங்களும் , பண்பாட்டைக் காக்கும் ஊடகங்களும் ,உலகமே வியந்த எமது முன்னைய குடும்ப அமைப்பு முறையும் மீண்டும் எமது வாழ்க்கை முறையாக வேண்டும்.அப்போதுதான் சமூகத்தில் பெண்கள் பாலியல் வன்கொடுமையற்ற நிம்மதியான வாழ்வொன்றைப் பெற முடியும்'' என்றான் பேப்பர்தம்பி.

''மீண்டும் அப்படி ஒரு காலம் எப்ப வருமோ?'' என்று அங்கலாய்த்தபடியே கச்சான்கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

மற்றவர்கள் எழுந்து நடக்கத் தொடங்கினார்கள்.சந்தியடி வெறிச்சோடியது.

## இனங்களின் காயங்களை ஆற்றும் செயல்

தனது மெய்க்காப்பாளர் ஹேமச்சந்திராவின் இறப்பையடுத்து அவரது குழந்தைகளை நீதிபதி இளஞ்செழியன் தத்தெடுத்துள்ளார். தமிழினத்தைச் சேர்ந்த ஒருவர் சிங்கள இனத்தைச் சேர்ந்த தன் மெய்க் காப்பாளர் குடும்பத்தினர் மீது காட்டியுள்ள அன்பு இவ்விரு இனத்த வரிடையேயும் நிலவும் காயங்களை ஆற்றும் வலிமை கொண்டது என மனிதநேய அமைப்பினர் தெரிவித் துள்ளனர் என ஆசிய செய்திச் சேவை கூறியுள்ளது.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## கைம்மாறு கருதாமல் நன்மைகள் ஆற்ற அழைப்பு

ஒவ்வொரு நாள் வாழ்வின் சுழல்களில் கைம்மாறு கருதாமல் நன்மைகளை ஆற்றும்போது அவை பயன் தருவனவாக அமையும். ஒவ்வொரு நாளும் நாம் செய்யும் நற்செயல்களை கைம்மாறு கருதாமல் செய்ய வேண்டும் என புனித அல்போன்ஸ் மரிய லிகோரியாரின் விழாவை முன்னிட்டு டுவிட்டரில் செய்தி வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்ஸிஸ்.

# மனுக்குலத்தின் சாட்சிகளாகவும் தொடர்பாளராகவும் உலகின் கடைசி எல்லை வரை இருங்கள்

### 51ஆவது உலக சமூகத் தொடர்பு தின செய்தியில் திருத்தந்தை பிரான்ஸிஸ்

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான திருத்தந்தை பிரான்ஸிஸ் மே மாதம் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் உலக சமூகத் தொடர்பு தினச் செய்திக் கருப்பொருளாக - 'அஞ்சாதே. ஏனெனில் நான் உன்னோடு இருக்கின்றேன் (எசாயா 43:5)' - என்னும் பொருளில் தம் சிந்தனைகளைத் தெரிவித்துள்ளார். 2017 ஆண்டு செய்தியை 51 ஆவது உலக சமூகத் தொடர்பு தினச் செய்தியாக பிரான்ஸிஸ் டீ சேல்ஸ் புனிதருடைய தினத்தில் வெளியிட்டுள்ளார். பிரான்ஸிஸ் டீ சேல்ஸ் புனிதர் செய்தியாளர்களின் பாதுகாவலராவார்.



திருத்தந்தை பிரான்ஸிஸ் தமது உலக சமூகத் தொடர்பு தின செய்தியில் 'போர் - தீவிரவாதம்' - பிறழ்வுகள் மற்றும் மனித தோல்விகளை மட்டுமே முன்னிலைப்படுத்தி வரும் செய்திகளால் எழும் கலக்கம் மற்றும் பயத்தை நாம் உடைக்க வேண்டும். இதற்காக மனித வாழ்வியல் எதார்த்தங்களை மறைக்கவும் தீமையின் ஆதிக்கத்தை இருட்டடிப்புச் செய்யவும் வேண்டும் என நான் சொல்ல வில்லை. மாறாக இப்படிப்பட்ட செய்திகளைத் தொடர்ந்து கேட்பது நம் மனதின் நேர்முக எண்ணங்களையும் ஆற்றலையும் செயலிழக்கச் செய்து விடுகிறது என்று கூறுகிறேன். தகவல் தொடர்பு நிறுவனங்களைப் பொறுத்தவரையில் நல்ல செய்திகளை அவர்கள் சந்தைப் படுத்த இயலாததால் அவர்கள் மனித வாழ்வின் துன்பத்தைக் கூட பொழுதுபோக்காக மாற்றி ஒட்டுமொத்த மனிதர்களையும் எதிர்மறை சிந்தனை உள்ளவர்களாக மாற்றிவிடுகின்றனர்- என்றார்.

## மதமாற்றம் செய்வது நோக்கமல்ல?

"கட்டாய மதமாற்றம் என்பது கத்தோலிக்கத் திருச்சபையில் உறுதியாக இல்லை. அவரவர் தங்கள் மனசாட்சியையும் சிந்திக்கும் திறனையும் கொண்டு மதம் மாறும் சுதந்திரத்தை மதிக்கிறோம் என இந்தியா இராஞ்சி பேராயர் கர்தினால் டெலெஸ்போர் டோப்போ 1 ஆகஸ்ட் 2017 அன்று ஜார்க்கண்ட் மாநிலம் மதமாற்றத் தடைச் சட்டத்தை அமுல்படுத்தியதைத் தொடர்ந்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கத்தோலிக்கர்கள் நடத்திவரும் பள்ளிகள், மருத்துவமனைகள் ஆகிய பணிகளால் மிக அதிக அளவில் பயன்பெறுவோர் கத்தோலிக்கர் அல்லாத பிற மதத்தினரே. இப்பணிகளின் வழியே மதமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் கிடையா. வறுமையின் காரணமாக கல்வி வசதிகள் மறுக்கப்பட்ட மக்களுக்கு கல்வி வழங்குவது மட்டுமே கத்தோலிக்கர்களின் நோக்கமாக இருந்ததே தவிர, மாணவ, மாணவியரை மத மாற்றம் செய்வது நோக்கமல்ல என கர்தினால் டோப்போ வலியுறுத்திக் கூறினார்.

## உண்மையின் எண்ணங்கள்

### கத்தோலிக்கத் திருச்சபையில் கட்டாய மதமாற்றம் நிச்சயமாக இல்லை

கட்டாய மதமாற்றம் என்பது கத்தோலிக்கத் திருச்சபையில் உறுதியாக இல்லை. அவரவர் தங்கள் மனச் சாட்சியையும் சிந்திக்கும் திறனையும் கொண்டு மதம் மாறும் சுதந்திரத்தை மதிக்கிறோம் என இந்தியா இராஞ்சி பேராயர் கர்தினால் டெலெஸ்போர் டோப்போ 1 ஓகஸ்ட் 2017 அன்று ஜார்க்கண்ட் மாநிலம் மதமாற்றத் தடைச்சட்டத்தை அமுல்படுத்தியதைத் தொடர்ந்து தெரிவித்துள்ளார். இலங்கையிலும் இது பற்றிச் பிரச்சினை அடிக்கடி எழுப்பப்படுகிறது. கத்தோலிக்கத் திருச்சபையில் கட்டாய மதமாற்றம் நிச்சயமாக இல்லை என்ற இந்தியா இராஞ்சி பேராயர் கர்தினால் டெலெஸ்போர் டோப்போ அவர்களின் கருத்து கவனத்துடன் நோக்கப்பட வேண்டும். கத்தோலிக்க திருச் சபையே முதன்மை சபையாகும். மற்ற அனைத்து சபைகளும் அதில் இருந்து உடைந்த சபைகளாகும். அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட சபைகள் உள்ளன. கத்தோலிக்க திருச்சபை ஒருபோதும் கட்டாய மதமாற்றம் செய்வதில்லை. மதமாற்றம் என்ற விடயத்தைப் பேசுவோர் கத்தோலிக்க திருச்சபை என்பது எது - அங்கீகரிக்கப்பட்ட சபைகள் எவை - மற்றைய சபைகள் எவை என்பது பற்றிய தெளிவான விளக்கம் பெற வேண்டும் என உறுதியாகத் தெரிவிக்க விரும்புகிறது காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ்.

## கரித்தாஸ் நிறுவன ஏற்பாட்டில்

# புலம்பெயர்ந்தோர் வேலைவாய்ப்பு விழிப்பூட்டல் கருத்தரங்குகள்



வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காகச் செல்பவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் - வெளிநாடு செல்வோரின் குடும்பங்களில் ஏற்படும் விபரீதங்கள் என்பவற்றில் இருந்து விழிப்புணர்வு கொள்ள கரித்தாஸ் நிறுவனம் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இலங்கை முழுவதும் மேற்கொள்ளும் செயற்றிட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கரித்தாஸ் நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவது எமது முயற்சிகளுக்கு பலமாக அமைந்துள்ளது. என கியுடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் எஸ்.இயுஜின் பிரான்ஸிஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு கருத்தரங்கில் தேசிய கரித்தாஸ் செடேக் நிறுவனச் செயற்றிட்ட இணைப்பாளர் அருட்சகோதரி துசாரி தெரிவித்தார்.

ஐந்து பிரதேச செயலக அரச உத்தியோகத்தர்களுடன் வெளிநாடுகள் சென்று வந்தோர் சமூகப்பணியாளர்கள். கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட மேற்படி கருத்தமர்வில் வளவாளராக அரசவெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக நிர்வாக உத்தியோகத்தர் ஜெயனந்தன், கரித்தாஸ் நிர்வாகப்பணியாளர்செல்வி.லக்சா, கள உத்தியோகத்தர் திருமதி மேரிலலிதா ஆகியோரின் வழிகாட்டலுடன் பலரது அனுபவப் பகிர்வுகள், இப்பயிற்சியின் உண்மைத்தன்மைகளை உணர்த்தின.

இயக்குநர் தமது உரையில் கரித்தாஸ் நிறுவனத்தின் இப்பணி லெபனானில் ஏற்பட்ட புலம் பெயர்ந்த பணியாளர்களின்நெருக்கீடுகளைஉணர்ந்து இலங்கைக்கு அழைத்து வருவதில் வெற்றி கண்டமை குறித்து விவரித்தமையுடன் அவர்கள் அனுபவித்த இன்னல் அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டார்.

# சமுதாய அநீதிகளைக் களைய இளையோர் முன்வர வேண்டும்

ஆசிய நாடுகள் சந்திக்கும் வறுமைச் சமுதாய அநீதிகள் என்ற கொடுமைகளைக்களைய ஆசிய திருச்சபையுடன் இணைந்து இளையோர் இன்னும் ஆர்வமாக உழைப்பதற்கு முன்வர வேண்டும் என ஓகஸ்ட் 2ஆம் திகதி முதல் 6ம் திகதி (இன்று) வரை இந்தோனேஷியாவில் நடைபெறும் 7ஆவது ஆசிய இளையோர் நாள் நிகழ்வில் ஆசிய ஆயர் பேரவையின் இளையோர் பணிக்குழுவின் தலைவர் கர்தினால் டிரொசாரியோ கூறினார்.

ஆசிய இளையோர் நாள் இளையோரிடம் வளர்க்க




விரும்பும் இரு முக்கிய பண்புகள் பரிவு மற்றும் குழுவாகப் பணியாற்றுதல் என்று இந்தோனேஷிய ஆயர் பேரவையின் தலைவரும் ஜகார்த்தா பேராயருமான இக்னேசியஸ் கூறினார்.

# கல்விப்பணியில் திருச்சபை பல நூற்றாண்டுகளாக......

தகுதியான தரமான கல்வி வசதிகள் அனைவருக்கும் சமமான முறையில் கிடைப்பதை திருப்பீடம் வலியுறுத்துகிறது என திருப்பீட உயர் அதிகாரி பேராயர் ஐ.நா. சபைக் கூட்டத்தில் கூறினார்.

நீடித்திருக்கக்கூடிய முன்னேற்ற இலக்குகளும் கல்வியும் என்ற கருத்தில், ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்ற ஒரு பன்னாட்டு கருத்தரங்கில் திருப்பீடத்தின் சார்பில் பங்கேற்ற பேராயர் பல நூற்றாண்டுகளாக கல்விப்பணியில் ஈடுபட்டுள்ள கத்தோலிக்கத் திருச்சபை கத்தோலிக்கர் அல்லாத மற்றவர்களுக்கு குறிப்பாக கல்வி வசதிகளற்ற இடங்களில் வாழ்வோருக்கு கல்வியை எடுத்துச் செல்வதில் தீவிரமாக பணியாற்றியுள்ளது. கல்வி பெறும் உரிமை மனிதர்களின் அடிப்படை உரிமை என்பதை திருத்தந்தை பிரான்சிஸ் தன் உரைகளிலும் எழுத்து வடிவிலும் கூறி வருகின்றமையைத் தன் உரையில் குறிப்பிட்டார் பேராயர் நீடித்திருக்கக்கூடிய முன்னேற்ற இலக்குகளின் ஒரு முக்கிய பணி கல்விப்பணி என்றார்.

# வடகொரியா மீது மீண்டும் பொருளாதாரத் தடை!

## அமெரிக்கத் தீர்மானத்தை அடுத்து



ஐ.நா. பாதுகாப்பு சபையில் நேற்று வாக்கெடுப்பு

நியூயோர்க். ஓக.6

தொடர்ந்து ஏவுகணைச் சோதனையை நடத்தி வரும் வட கொரியா மீது புதிய பொருளாதாரத் தடைவிதிக்கக்கோரிய அமெரிக்கா வின் தீர்மானத்தின் மேல் ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் நேற்று வாக்கெடுப்பை நடத்தியது.

வடகொரியா அரசு தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகின்றது. வடகொரியா வின் ஏவுகணைச் சோதனை களுக்கு அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான் உட்பட பல்வேறு நாடு களும் எதிர்ப்புத் தெரிவித்து வரு கின்றன.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் இடம்பெற்றுள்ள 15 நாடுகள் இந்த வாக்கெடுப்பில் பங்கேற் றன. நிரந்தர உறுப்பு நாடுகளின் பட்டியலில் சீனா, பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகியவை இடம் பிடித்துள்ளன. இதில் ரஷ்யாவும் சீனாவும் வடகொரியாவுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின் றன.

ஆனால், கடந்த சில நாள்களாக, வடகொரியா அரசின் நடவடிக் கைகளுக்கு ரஷ்யாவும் சீனாவும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது

இந்தப் பொருளாதாரத் தடை மூலம் வடகொரியாவின் வருமா னத்தில் 100 கோடி அமெரிக்க டொலர் அளவுக்கு இழப்பு ஏற்ப டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூலை மாதம் மட்டும் வடகொரியா இரண்டு ஏவுகணை சோதனைகளை மேற்கொண் டுள்ள நிலையில், அமெரிக்கா இந் தத் தீர்மானத்தை கொண்டு வந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ப)



# மழையை வேண்டி ஓரினத் திருமணம்

மத்திய பிரதேச மாநிலத்தின் இந்தூரில் அமைந்துள்ள முசாகேதி கிராமத்தினர், மழை வேண்டி ஒரு விநோத நிகழ்ச்சியை நடத்தியுள்ளனர். இரு ஆண்களுக்குத் திரு மணம் செய்து வைத்தால், வருண பகவான் தனது ஆசியை அளிப்பார் என்ற நம்பிக்கை யில் வித்தியாசமான திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

முசாகேதி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சாகா ராம் மற்றும் ராகேஷ். இருவரையும் திருமண கோலத்தில் அலங்காரம் செய்திருந்தனர். திருமணச் சடங்குகள் முறையாகச் செய்யப் பட்டன. திருமணத்துக்கு வந்திருந்தவர்கள் ஆடிப்பாடி சந்தோஷமாகக் கலந்து கொண் டனர்.

அதன் பின்னர், வேத விற்பன்னர்கள் மந் திரங்கள் ஓதி, இருவருக்கும் திருமணம் நடத்தி வைத்தனர். இதைத் தொடர்ந்து, திருமணத்துக்கு வந்த அனைவருக்கும் விருந்து பரிமாறப்பட்டது. திருமணம் முடிந்த சில மணித்துளிகளில் அப்பகுதியில் மழை பெய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து கிராமத்தினர் கூறுகையில், கடந்த சில நாள்களாகக் கடும் வெயில் சுட் டெரித்து வந்தது. வருண பகவானை வேண்டி, நடத்தி வைக்கப்பட்ட திருமணத்தால் மழையும் பெய்துள்ளது. இனி வரும் நாள் களிலும் மழை தொடரும் என எதிர்பார்க் கிறோம் எனத் தெரிவித்துள்ளனர். (ப)

## ஒரு சிறுவன் மீது 15 சிறுவர்கள் ஓரினச் சேர்க்கை!

### கொடூர சம்பவம்

அந்தேரியில் உள்ள மாநகராட்சி பூங்கா ஒன் றில் சமீபத்தில் சிறுவன் ஒருவனை 15 சிறுவர் கள் கூட்டாக சேர்ந்து ஓரினச் சேர்க்கைக்கு பயன்படுத்தி கொண் டனர். இதற்கிடையில், இந்த உண்மையை வெளியே சொல்லாமல் இருக்க வேண்டும் என் றால் தனக்கு உடனடி யாக 11 ஆயிரம் ரூபா தர வேண்டும் என அந்த சிறுவர்களில் ஒரு வன் மிரட்டியுள்ளான். இதனால், கடும் உடல் உபாதைக்கும், மன உளைச்சலுக்கும் உள் ளாகி, பாதிக்கப்பட்ட சிறுவனின் சித்தப்பிரமை பிடித்தவன் போல் இருந்து வந்துள்ளான்.

இந்த விவகாரங்கள் எல்லாம் அவனது நெருங் கிய நண்பர்கள் மூலமாக பெற்றோரின் காதுகளை சென்றடைந்தன. அவர் கள் அளித்த முறைப் பாடு மற்றும் சிறுவன் வாக்கு மூலத்தின் அடிப் படையில் குற்றம்சாட் டப்பட்ட 15 சிறுவர் களில் 7 பேரை கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸார் கைது செய்து அரசு இளம் சிறார் காப் பகத்தில் அடைத்து வைத்துள்ளனர்.

மருத்துவப் பரிசோ தனைக்கு பின்னர் பாதிக்கப்பட்ட சிறுவ னுக்கு மனவள ஆலோ சனை அளிக்கப்பட்டு வருவதாக அந்தேரி பொலிஸார் தெரிவித் தனர்.

# டில்லியில் தமிழக விவசாயிகள் பேய் முகமூடி அணிந்து ஊர்வலம்



புதுடில்லி,ஓக.06

வேளாண் விளைபொருள்களுக்கு லாபகரமான விலை வழங்க வேண்டும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், விவசாய கடன் களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக் கைகளை வலியுறுத்தி தேசிய தென் னிந்திய நதிகள் இணைப்பு விவ சாயிகள் சங்கம் சார்பில் தமிழக விவ சாயிகள் டெல்லி ஜந்தர் மந்தரில் 2 ஆம் கட்டப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த போராட்டம் நேற்று 20ஆவது நாளை எட்டியது. இதையொட்டி சில விவசாயிகள் தங்களது முகங்களில் பேய் முகமூடி அணிந்து, கழுத்தில் மண்டை ஓடு மாலை அணிந்து உரக்கக் குரல் எழுப்பியவாறு ஊர்வல மாகச் சென்றனர்.

அவர்களைப் பின் தொடர்ந்து போராட் டக்குழுத் தலைவர் அய்யாக்கண்ணு உள்ளிட்டோர் கோரிக்கைகளை வலி யுறுத்தி கோஷமிட்டுச் சென்றனர்.

இந்தப் போராட்டம் குறித்து அய்யாக் கண்ணு செய்தியாளர்களிடம் தெரி வித்தவை வருமாறு-

மோடி அரசு விவசாயிகளின் கோரிக் கைகளை ஏற்க மறுக்கிறது. இதனால் தற்கொலை செய்துகொண்ட விவ சாயிகள் பேயாக வந்து கோரிக்கை களை வலியுறுத்திக் கூறும் வகையில் இன்றைய போராட்டம் அமைந்துள்ளது.

எங்களு டன் இணைந்து புதுச்சேரி விவசாயிகளின் கோரிக்கையையும் மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ப)

# சீனாவில் ரயிலை தூக்கிய மக்கள்!



பீஜிங்,ஓக.06

சீனாவின் பீஜிங்கின் டோங்சிமென் நேற்று இரவு சுமார் 8 மணியளவில் தெரியாத நபர் ஒருவர் ரயில் வருவது கூட தெரியாமல் தண்டவாளத்தில் நடந்து சென்றுள்ளார். அவர் செல்வதைக் கண்ட ரயில் ஓட்டுநர் உடனே ரயிலை நிறுத்தியுள்ளார்.

ஆனால், ரயில் மிக அருகில் வந்த பின்னரே நிறுத்தப்பட்டதால் அந்த நபரின் கால் தண்டவாளத்திற்கும் நடைமேடைக்கும் இடையில் சிக்கிக் கொண்டது. காலை எடுக்க அவர் செய்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

அதையடுத்து ரயில்வே அதிகாரிகள் பயணியை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இருப்பினும் அவர்களால் பயணியை மீட்க முடியவில்லை. ரயிலுக்கும் தண்டவாளத்திற்கும் இடையே சிக்கியிருந்த பயணியின் நிலையைக் கண்ட பொதுமக்கள் அவரைக் காப்பாற்ற முடிவு செய்தனர்.

அங்கிருந்த அனைவரும் இணைந்து ரயிலை சிறிது தூரத்திற்கு ஒரு பக்கமாகத் தூக்கிகள் ஏதுமின்றித் தண்ட வாளத்தில் சிக்கியிருந்த நபரை காயங்களின்றி உயிரோடு மீட்டுள்ளனர்.

## 2,271 லீற்றர் தாய்ப்பால் தானம்

அமெரிக்காவைச் சேர்ந்த எலிசபெத் ஆண்டர்சன் இதுவரை 2,271 லீற்றர் தாய்ப்பாலை தானமாக வழங்கியுள்ளார். வழக்கமாக ஒரு தாய்க்கு சுரக் கும் பாலைவிட 10 மடங்கு அதிகமான பால் இவருக்கு சுரக்கிறது. இவ ருக்கு ஒரு நாளைக்கு 6.4 லீற்றர் பால் சுரக்கிறது.

தினமும் 5 வேளை பாலைக் கறந்து, பதப்படுத்தி, பக்கெற்களில் அடைத்து, குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிடுகிறார். பின்னர், மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள், ஊட்டச்சத்துக் குறைபாடு உடைய குழந்தைகள் என்று தாய்ப்பால் தேவைப்படுபவர்களுக்கு இலவசமாகப் பாலை வழங்கி வருகிறார்.



# செப்புகிறார்... சின்னப்பு!

வணக்கமுங்கோ!

அண்டைக்கொருக்கா வன்னியிலிருந்து நம்மடை சகலன் முறையான ஒருத்தர் என்ரை வீட்டை வந்தவர் பாருங்கோ!

வந்தவரை என்ரை மனிசி உடன ஊருக்குப் போற துக்கு விடேல்லைக் கண்டியளே!

''கனநாளைக்குப் பிறகு வந்தனிங்கள் அத்தான்! இரண்டு நாளைக்கெண்டாலும், வீட்டில பிள்ளையளோடை ஒருக்கா நிண்டிட்டுப் போங்கோவன்...'' எண்டு என்ரை மனிசி கேட்டதால, அந்தாளும் சரியெண்டு நிண்டிட்டுது.

அந்ததாள் வீட்டில நிண்ட இரண்டு நாளிலையும் பலதரப்பட்ட விஷயங்களைக் குறிச்சு ஒருத்தருக்கொருத்தர் மனம் விட்டுக் கதைக்க முடிஞ்சுது. சகலன் கதையோடை கதையா இப்ப நாட்டில நிலவுகிற வறட்சி பற்றிக் கதைச்சார்.

வீட்டு வளவைச்சுற்றி வாழைமரங்கள் நட்டிருக்கிறன், குலைகள் தள்ளிய நிலையில பெரும்பாலான வாழை மரங்கள் நிற்குதுகள், கிணத்தில தண்ணீர் வற்றிவிட்டதால, இறைக்க முடியாமல் கையை விட்டிட்டு வானத்தைப் பாத்துக்கொண்டு இருக்கிறன் எண்டும் அவர் சொன்னபோது என்ர மனசு ரொம்ப வருத்தப்பட்டுது அந்தாளுக்காக.

அதோடை, அவர் இன்னொரு விஷயமும் சொன்னார் பாருங்கோ!

வாறவழியில் ஆனையிறவு உப்பள ஏரி காஞ்சு வறண்டு போய் கிடக்கிறதையும், கிளிநொச்சியில் மட்டும் அறுபது ஏக்கர் பயிர்ச்செய்கை தண்ணீர் இல்லாமல் பாழாய்ப் போகப் போகுது. எண்டு சொல்லி கவலைப் பட்டார்.

அந்த நாளேல கலியாணம் முடிக்காமல் இளந்தாரியாக அப்பு, ஆச்சியோடை இருக்கேக்கை, இப்பிடியெல்லாம் நடந்ததாக எனக்கு ஞாபகம் இல்லையெண்டும் சொன்னவர், மேற்கொண்டு சொல்லவும் தொடங்கினார்.

அப்பவெல்லாம் ஒழுங்கா மழை பெஞ்சுது.. வெய்யில் எறிச்சுது பனி கொட்டிச்சுது... காற்றும் தன்னுடைய காலத்தில ஒழுங்கா வீசிச்சுது! இப்ப என்னடா வெண்டால், எல்லாம் எதிர்மாறாயல்லோ நடக்குது.

இதுக்கெல்லாம் என்ன காரணம்?

அறம் சார்ந்த காரியங்கள் எல்லாம் வியாபாரமாகி, அவனவன் தெய்வம் சுவாமியளையும் அதனதன் இருப்பிடங்களையும் வைச்சு காசு பணம் சம்பாதிக்க எப்ப வெளிக்கிட்டானோ, அன்றையில இருந்து பிடிச்சுது சனங்களுக்கு பீடையும் வருத்தமும்.

முந்தியெல்லாம் மழை ஒழுங்காப் பெஞ்சதுதானே! குளங்களில எல்லாம் நீர் நிரம்பி வழிஞ்சதுதானே! மூன்று போக விளைச்சலும் தவறாமல் நடந்தது தானே!

இப்ப ஏன் அப்படியெண்டும் இல்லாமல்போனது?

மனிசரில பெரும்பாலான ஆள்கள் மனம் மாறிப் போயிட்டினம். தங்கடகுணத்தையும், கொண்ட கொள்கையளையும் அடைவு வைச்சுப் போட்டு, தன் நிலையில் தரம் தாழ்ந்து அடாவடித்தனமான செய்கை காரியங்களில கவனம் செலுத்தச் செலுத்த... காலமும் இந்த மனிசரைத் திருத்துறதுக்காகவோ என்னவோ தன்னுடைய நிலைகளிலை மாற்றங்களைச் செய்து கொண்டு வருகுது.

நாட்டின்ர அபிவிருத்திக்கு அரசாங்கம் குடுக்கிற காசு பணத்தை வாங்கிக் கொண்டு மழைத் தண்ணீரைத் தேக்கி வைக்கிறதுக்கு குளம் குட்டையளைத் திருத்துறதை விட்டிட்டு அந்தக் காசு பணத்துக்கு கள்ளக் கணக்குப் போட்டு எப்படிச் சுருட்டி எடுக்கலாம் எண்டு நினைக்கிற அரசியல்வாதிகள் இருக்கும் வரைக்கும் இந்த நாட்டில உரிய நேரத்தில மழையும் பெய்யாது. பனியும் கொட்டாது கண்டியோ!

இதைவிட நீதியா நியாயமா மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு நீதிபரிபாலனம் செய்யிற மனிசரைப் போட்டுத் தள்ளுற வேலையளைச் செய்ய வெளிக்கிட்டாலும் மழை வராது!

இதில முக்கியமான ஒரு அநியாயம் என்னவெண்டால் தெய்வம் சுவாமியளை வைச்சு பிழைப்பு நடத்துறது...

இப்ப கிட்டடியில நடந்த ஒரு சங்கதி. கேள்விப்பட்டிருப்பியோ தெரியாது. பேப்பர்காரர் போட்டிருந்தவங்கள்.

யாழ்ப்பாணம் தின்னவேலிப் பக்கம் ஏதோ ஒரு அம்மன் கோயில் பொருளாளர் ஒருவராம், கும்பிட வந்த சனங்கள் அம்மனுக்கு நேர்த்தியாக் குடுத்த நகை நட்டுகளை பாங்கில கொண்டுபோய் அடைவு வைச்சுப்போட்டு அதைக் கோயில் கணக்கில காட்டியிருக்கிறார். இது 2014 ஆம் ஆண்டிலயிருந்து தொடங்கியிருக்கு எண்டும் கிட்டத்தட்ட முப்பது இலட்சத்துக்கு இவர் கோயில் நகையளைக் கையாடியிருக்கிறார் எண்டுபேப்பர்க்காரன்போட்டிருக்கிறான்.

இப்ப சொல்லு! சின்னப்பண்ணை... இப்படிப் பட்ட மனிசர் எங்களுக்க நடுவில இருக்கேக்கை .. மழையைப் பெய்யெண்டால் பெய்யுமே... எண்டு என்னைத் திருப்பிக் கேட்டான் சகலன்.

எனக்கு என்னத்தைச் சொல்லுற தெண்டது தெரியாமல் கிடந்தது. அந்தாள் சொல்லுறதும் சரியாகத்தான் பட்டது எனக்கு.

# தமிழர்கள் அனுபவித்த..

*(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

நிர்வாக ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதும் புதிய சட்டங்கள் தேவைப்படாதது மான விவரங்கள் பின்வருமாறு:

★ அதிகாரிகளை நியமிப்பது தொடர்பில் நிறுவக முறைமை ஒன்று சீர்செய்யப்படுவதுடன் உயர் பதவிகளுக்குக் குற்றம் சாட்டப்பட்டவர்களை நியமிப்பதை நிறுத்த வேண்டும்.

★சித்திரவதைகளில் சிசிர மெண்டிஸ் ஈடுபட்ட குற்றச்சாட்டுத் தொடர்பாகச் சித்திரவதைக்கு எதிரான ஐ.நா ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு சிறிலங்கா பதிலளிக்க வேண்டும்.

குற்றம் சுமத்தப்பட்டவர்களைத் தவிர்த்துச் சாட்சியங்களைப் பாதுகாப் பதற்கான தேசிய அதிகார சபையை மீளவும் திருத்தியமைக்க வேண்டும்.

★ வெளிநாடுகளில் உள்ளவர்களிடம் சாட்சியங்களைப் பெறுவதற்கு அவர்களைச் சிறிலங்கா தூதரகங்களுக்கு வருமாறு அழைப்பதைத் தவிர்த்து கடிதங்கள் மூலம் வாக்குமூலங்களைப் பெற வேண்டும்.

★ அனைத்துலக சமூகத்தின் உதவியுடன் நம்பகமான சுயாதீன விசாரணைப் பிரிவொன்றை உருவாக்குதல், இதன் மூலம் குற்றவாளிகள் பொறுப்புக்கூறுவதிலிருந்து தப்பிக்க முடியாது.

★ ஜோசப் முகாம் அகற்றப்பட வேண்டும்.

★ சிறிலங்காவிற்கு வெளியே வாழும் பல ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டை வழங்குவதற்கான சுயாதீன ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்படுவதுடன்பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரும் பாதுகாக்கப்பட வேண்டும்.

**கேள்வி:** தாங்கள் தற்போது முன்வைத்த விடயங்களை அமுல்படுத்து வதற்கு சிறிலங்கா அரசாங்கம் ஏதாவது நகர்வை முன்னெடுக்கும் என எதிர்பார்க்கிறீர்களா?

**பதில்:** இல்லை

**கேள்வி:** சிறிலங்காவில் இடம்பெறும்திட்டமிட்ட சித்திரவதைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட குற்றங்களைஇல்லாதொழிப்பதற்கு அனைத்துலகச் சமூகமானது எந்த வகையில் சிறிலங்காவிற்கு உதவ முடியும்?

பதில்: மனித உரிமைகள் விவகாரத்தில் அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்கள் மிகத் துரிதமாக அதிகரிக்கப்பட வேண்டும். சிறிலங்காவில் தொடரப்படும் வன் முறைகள் மற்றும் மீறல்கள் போன்றன மஹிந்தராஜபக்ஷமீண்டும்ஆட்சிக்கு வருவதற்கான வாய்ப்பை வழங்கும் எனவும் அவ்வாறு நடந்தால் நாட்டில் மாற்றத்தைக் கொண்டு வரமுடியாது எனவும் ஐ.நாவில் பலர் வாதிட்டுள்ளதை நான் கேட்டுள்ளேன்.

ஆட்சி மாற்றம் மற்றும் அரசாங்கத்தை ஆதரித்தல் மற்றும் எதிர்த்தல் போன்ற எந்தவொன்றிலும் அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான நிகழ்ச்சித் திட்டம் ஆர்வம் காண்பிக்கவில்லை. சிறிலங்கா அரசாங்கத்தால் வாக்குறுதி வழங்கப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். 2009ல் சிறிலங்காவில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் தான் இழைத்த தவறுகளிலிருந்து ஐ.நாபாடத்தைக் கற்றுக்கொள்வதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தெளிவாக குரல் கொடுக்க வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன். தமக்காக எவரும் குரல் கொடுக்கவில்லை என்பதால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதை நாம் பார்க்கின்றோம்.

2009 இல் சிறிலங்கா விடயத்தில் ஐ.நா தலையீடு செய்யத் தவறியதால் ஐ.நாவின் 'உரிமைகளுக்கான முன்னணி' தோற்றம் பெறக் காரணமாகியது. ஆனால் சிறிலங்கா விடயத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பது துன்பகரமானது. பொலிஸ்காரர் மற்றும் பென் எமர்சன் போன்ற சுயாதீன வல்லுநர்கள் சிறிலங்காவில் இடம்பெறும் வன்முறைகள் தொடர்பாக வெளிப்படையாகத் தெரிவித் துள்ளனர்.

அரசியல் சக்தி என்ற நிலையிலிருந்து புலிகள் அமைப்பு நீக்கப்பட்டால் 'பிரச்சினைக்குத்' தீர்வு காணப்படமுடியும் என அனைத்துலகச் சமூகம் 2009இல் யுத்தம் இறுதிக்கட்டத்தை அடைந்த போது கூறியதையும் புலிகள் தோற்கடிக்கப்பட்டு சில ஆண்டுகளின் பின்னர், ராஜபக்ஷஆட்சியிலிருந்து நீக்கப்பட்டால் 'பிரச்சினை' தீரும் என எடுகோலாகக் கூறப்பட்டதையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இவ்வாறான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தனிநபர்களைக் குற்றம் சுமத்த முடியாது. இவற்றுக்குத் திட்டமிட்ட மற்றும் நிறுவக ரீதியான தோல்வியே காரணமாகும்.

சிறிலங்காவில் 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது அனைத்துலக சமூகத்தால் சிறிலங்காவிற்கு பிறிதொரு வாய்ப்பு வழங்கப்பட்டது. சிறிலங்காவில் கலப்பு நீதிப்பொறி முறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இன்னமும் இது நிறை வேற்றப்பட வில்லை. ஆகவே இது தொடர்பில் புதியதும் அதிநவீன அனைத்துலக அணுகுமுறையும் மிகத் துரிதமாக வரையறுக்கப்பட வேண்டும்.

இது நிறைவேற்றப்பட்டால் மட்டுமே 'புலி முத்திரை' குத்தப்பட்டு கைதுசெய்யப்படு வோர் சூடாக்கப்பட்ட இரும்புக் கம்பிகளால் சுடப்படும் நிலை தடுக்கப்படும் என நான் நம்புகிறேன்.

# இலங்கையில் பாரதி....

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

மழை என்ற மௌனகுருவின் நாடக நூலுக்கு, இலங்கையின் மூத்த கவிஞர் (அமரர்) இ.முருகையன் எழுதியிருக்கும் முன்னுரையில், ''இப்புத்தகத்தில்வரும் இன்னுமொரு நாடகம் நம்மைப் பிடித்தபிசாசுகள். அந்நியநாட்டு மோகம், பிரதேச பேதங்கள், உத்தியோக மோகம்,சீதனம் எனும் சின்னத்தனம், ஆகிய சமூகக் குறைபாடுகள் எல்லாவற்றையும் பிசாசுகளாக உருவகம் செய்கிறார். இவற்றினால் மக்கள் பலர் உருவேறி ஆடுகிறார்கள்.

ஆனால், இந்தப் பிசாசுகளின் பிடியிலிருந்து விடுதலை பெறுவதற்கு பாரதியார் சொல்லும் ஒரு மந்திரம் உதவுகிறது. அந்த மந்திரம் ஒருபாட்டு: *அச்சமில்லை அனுங்குதல் இல்லை நடுங்குதல் இல்லை நாணுதல் இல்லை பாவம் இல்லை பதுங்குதல் இல்லை ஏது நேரினும் இடர்படமட்டோம். கண்டம் சிதறினும் அஞ்சமாட்டோம் கடல் பொங்கி எழுந்தால் கலங்க மாட்டோம். யார்க்கும் அஞ்சோம். எதற்கும் அஞ்சோம். எங்கும் அஞ்சோம். எப்பொழுதும் அஞ்சோம்.* இன்னும் மந்திரங்கள் பல ஓதப்படுகின்றன. அவைகள் எல்லாம் பாரதி பாட்டுக்களே.

நம்மைப் பிடித்த பிசாசுகளில் பாரதியார் சொற்களும் கருத்துக்களும், உணர்வோட்டங்களும் தாராளமாக இடம் பெற்றுள்ளன. மௌனகுருவின் ஆக்கங்களில் பாரதியாரின் செல்வாக்குக் கணிசமாக மேலோங்கி நிற்பதைக் காணுகின்றோம் . பாரதியின் ஆளுமையின் ஆட்சித்திறன் என்று இதனை விவரிக்கலம்.

இந்த ஆட்சித்திறன் பற்றி மேலும் சிலவற்றைக் கூறுதல் வேண்டும். பாரதியார் கவிஞர். எல்லை இன்மை எனும் பொருள் தன்னைக் கம்பன் குறிகளாற் காட்டினானென்பது பாரதியார் கருத்து. பாரதியாரும் அப்படிப்பட்டவர்தான். அண்டம் முழுவதையும் தழுவி நின்றன அவருடைய எண்ணங்கள். மௌன குருவின் போக்கும் அப்படிப்பட்டது தான். சின்னஞ்சிறு வேடிக்கை மாந்தர்களின் அன்றாட சில்லறைச் சேட்டைகளைப் பற்றி அவருக்கு அதிக அக்கறையில்லை. ''அண்டம் முழுதும் அளந்து அறிவை எடுத்து ஊட்டுவதும், அந்திச் சுடர் வானை அப்படியே தீட்டுவதும், மிண்டும் கொடுமைகளை மாய்த்து அறத்தை நாட்டுவதும் மாசற்ற இன்பவெறி மக்களிடை மூட்டுவதும் தமது நோக்கங்கள் - என்று மகாகவி கருதியது போல ஆகாசம் அளாவுமொரு காதல் கொண்டவர் மௌனகுரு.

அதனாலேதான் அவரது படைப்புகளில் பிரமாண்டமான கற்பனைகளை நாம் காணுகின்றோம். இவரது தலை சிறந்த ஆக்கமான சங்காரம் இந்த இடத்திலே நினைவு கூரத்தக்கது.

அங்கு சாதி அரக்கனும், இனபேத அரக்கனும்,வர்க்க அரக்கனும் சங்காரம் செய்யப்பட்டனர். இங்கு நம்மைப் பிடித்த பிசாசுகள் ஓட்டப்படுகின்றன. மலை தகர்க்கப்படுகிறது, மழை பெய்விக்கப்படுகிறது எல்லாம் அரிய பெரிய சாதனைகளே. மனித குலம் செய்யவேண்டிய,செய்யக்கூடிய சாதனைகள். இச்சாதனைகளை நோக்கிய ஏக்கம், ஓர் இலட்சிய நாட்டம் இருப்பதனாலேயே பாரதியார் மௌன குருவைப் பிடித்தாட்டுகிறார் - பிசாசு போல அல்ல; தெய்வம் போல.

இலங்கையில் நாடகம், கூத்து முதலானவற்றில் பாரதியின் கவிதைகள் முக்கிய பங்காற்றியிருக்கின்றன என்பதற்கு மௌனகுருவின் முயற்சிகள் பதச்சோறு. தொடர்ந்தும் பாரதியின் ஊற்றெடுக்கும் சிந்தனைகளை தமது கலைப் படைப்புகளில் பயன்படுத்தி வருகிறார்.

மௌனகுருவின் மற்றும் ஒரு நாடகமான வனவாசத்திலும் துரியோதனன் சபையில் நடக்கும் சூதாட்டக்காட்சியிலும் பாரதியின் பாஞ்சாலி சபதத்திலிருந்து கவிதை வரிகளை எடுத்தாளவிருப்பதாக தெரிவித்துள்ளார். இவரது சக்தி பிறக்குது, காளிக்கூத்து நாட்டிய நாடகம் ஆகியனவற்றிலும் பாரதியின் வரிகள் இடம்பெறுகின்றன.

★

# முதல் இன்னிங்ஸில் சுருண்ட இலங்கை 2ஆவதில் மீள்வதற்குப் பகீரதப்பிரயத்தனம்!



இந்தியாவின் விஸ்வரூப ஓட்ட எண்ணிக்கையான 622க்கு முகம் கொடுக்க முடியாமல் முதல் இன்னிங்ஸில் 183 ஓட்டங்களுக்குச் சுருண்டது இலங்கை.

அதனை அடுத்து தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாடப் பணிக்கப்பட்ட இலங்கை இரண்டாவது இன்னிங்ஸில் மீண்டெழுவதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது. நேற்று மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது அது 2 விக்கெட் இழப்புக்கு 209 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தியா-இலங்கை அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் கொழும்பில் நடைபெற்று வருகிறது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் இழப்பிற்கு 622 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது. இந்திய அணி சார்பில் புஜாரா, ரஹ்னே சதமும் லோகேஷ் ராகுல், அஸ்வின், சகா மற்றும் ஜடேஜா ஆகியோர் அரை சதம் அடித்தனர். இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக ஹேரத் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதையடுத்து, இலங்கை அணி முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. தொடக்க வீரர்களாக களமிறங்கிய கருணாரத்ன, உபுல் தரங்க ஆகியோர் விரைவில் ஆட்டமிழந்தனர். அதன்பின் மெண்டிஸும், சந்திமாலும் ஜோடி சேர்ந்தனர். நேற்று முன்தினம் இரண்டாம் நாள் முடிவில் இலங்கை அணி 2 விக்கெட் இழப்பிற்கு 50 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில், நேற்று 3ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. இந்திய வீரர்களின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் இலங்கை அணியினர் திணறி வந்தனர். மதியவுணவு இடைவேளையின் போது, இலங்கை அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 183 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தது.

அந்த அணியில் அதிகபட்சமாக நிரோன் டிக்வெல்ல 51 ஓட்டங்களை எடுத்தார். இந்திய அணி தரப்பில் அஸ்வின் சிறப்பாக பந்து வீசி 69 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளைச் சாய்த்தார். ஷாமியும், ஜடேஜாவும் தலா 2 விக்கெட்டுகளையும், உமேஷ் யாதவ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அஸ்வின் 26ஆவது முறையாக 5 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 439 ஓட்டங்கள் பின்தங்கியுள்ள நிலையில், இலங்கைக்கு இந்திய அணி கப்டன் விராட் கோஹ்லி 'பொலோ ஒன்' கொடுத்தார். இதனால் இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை மீண்டும் ஆரம்பித்தது.

நேற்று ஆட்ட நேர முதலின்போது இலங்கை 2 விக்கெட் இழப்புக்கு 209 ஓட்டங்களை எடுத்திருந்தது. குசல் மெண்டிஸ் 110 ஓட்டங்களை எடுத்தார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திமுது கருணாரட்ண ஆட்டமிழக்காமல் 92 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இலங்கை இன்னும் 230 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# தேசிய மட்ட உதைபந்தாட்ட போட்டிகள்

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் பங்குபற்றும் அகில இலங்கை ரீதியிலான பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) கிண்ணியாவில் ஆரம்பமானது.

திருகோணமலை மாவட்டக்கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் இணைப்பாளர் ஏ.எல்.எம்.நபீல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், விசேட விருந்தினராகக் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம். அன்வர், கௌரவ விருந்தினராகக் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.அஹமட் லெப்பை உள்ளடங்களாகப் பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

நேற்று ஆரம்பமாகியுள்ள இந்தப் போட்டித் தொடர் தொடர்ந்து 3 நாள்களுக்கு இடம்பெறும். இதில், ஆண்களுக்கான போட்டிகள் கிண்ணியா எழில் அரங்கு மைதானம் மற்றும் பைசல் நகர் அல் - இர்பான் மைதானம் என்பவற்றிலும், பெண்களுக்கான போட்டிகள் சின்னம்பிள்ளைச்சேனை அல் - புர்க்கான் வித்தியாலய மைதானம் மற்றும் கருமலையூற்று ராடோ விளையாட்டு மைதானம் என்பவற்றிலும் நடைபெறவுள்ளன.

இம்முறைப் போட்டித் தொடரில் தேசிய மட்டத்தில் உள்ள 25 மாவட்டங்களிலிருந்து 54 பாடசாலை அணிகள் பங்குபற்றுகின்றன. கடந்த வருடத்தைப் போல இவ்வருடமும் பல முன்னணிப் பாடசாலைகள் இம்முறை போட்டித் தொடரில் பங்குபற்றுகின்றன.



# முடிவுக்கு வந்தது ஆஸ்திரேலியா வீரர்களின் சம்பளப் பிரச்சினை

ஆஸ்திரேலியாக் கிரிக்கெட் சபைக்கும், அந்நாட்டு வீரர்களுக்கும் இடையே இருந்து வந்த சம்பளப் பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளது.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபைக்கும் அந்நாட்டுக் கிரிக்கெட் வீரர்களுக்கும் இடையே சில நாள்களாகச் சம்பளப் பிரச்சினை இருந்து வந்தது.

சம்பளம் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்து இடப்படாததால் சுமார் 230 கிரிக்கெட் வீரர்களும் வீராங்கனைகளும் வேலையில்லாமல் இருந்தார்கள். பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க போவதில்லை என ஆஸ்திரேலியாகிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் இரு தரப்புக்கும் இடையே நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. இதன் படி அடுத்த 5 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் கையெழுத்தானது.

வீரர்களுக்குச் சம்பளமாக வழங்க 2,522 கோடி ரூபாயை ஒதுக்குவதாக ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபை ஒப்புக்கொண்டுள்ளது.

சம்பளம் குறித்த ஒப்பந்தத்தில் முதல்முறையாக கிரிக்கெட் வீராங்கனைகளும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# ரோஜர்ஸ் கிண்ண டென்னிஸ்: காயத்தால் மரியா ஷரபோவா விலகல்



கனடாவில் உள்ள டொரண்டோவில் நடைபெற இருக்கும் ரோஜர்ஸ் கோப்பைக்கான டென்னிஸ் தொடரில் இருந்து மரியா ஷரபோவா விலகியுள்ளார்.

ரஷ்யாவின் முன்னணி டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா. ஐந்து முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற இவர், ஊக்கமருந்து பயன்படுத்தியதாக 15 மாதம் தடைபெற்றார். அதன் பின் தற்போது டென்னிஸ் அரங்கில் களமிறங்கி விளையாடி வருகிறார்.

ஒகஸ்ட் 28 ஆம் திகதி அமெரிக்க கிராண்ட்ஸ்லாம் தொடர் நடைபெறுகிறது. இதற்கு முன்னோட்டமாக ரோஜர்ஸ் ஓபன் டென்னிஸ் தொடர் கருதப்படுகிறது.

இந்தத் தொடர் விளையாடுவதற்காக மரியா ஷரபோவாவிற்கு வைட் காட் வழங்கப்பட்டது. இதில் சிறப்பாகச் செயற்பட்டு, அமெரிக்க கிராண்ட்ஸ்லாம் தொடரில் சிறப் பாக விளையாட முடிவு செய்திருந்தார்.

ஆனால், மரியா ஷரபோவாவின் இடது முழங்கையில் காயம் ஏற்பட்டது. இதனால் ரோஜர்ஸ் ஓபனில் இருந்து விலகியுள்ளார். அதை அடுத்து, அமெரிக்க கிராண்ட்ஸ்லாம் தொடரிலும் ஷரபோவா பங்கேற்பது சந்தேகம் எனக் கூறப்படுகிறது.





# சங்ககார போன்று ஆட முயற்சிக்கிறேன்

## இந்திய வீராங்கனை ஸ்மிரிதி மந்தனா

இந்திய பெண்களுக்கான கிரிக்கெட் அணியில் ஒளிரும் நட்சத்திரங்களில் ஒருவரான ஸ்மிரிதி மந்தனா தனது துடுப்பாட்டத்திற்கு முன்மாதிரி முன்னாள் இலங்கை தலைவரான குமார் சங்ககார என தெரிவித்திருந்தார்.

அவரது துடுப்பாட்டத்தைக் கண்ட பலரும் இந்திய அணியின் முன்னாள் வீரரான சௌரவ் கங்குலி போன்று இருப்பதாகக் கூறி வருகின்றனர்.

இது குறித்து ஸ்மிரிதி மந்தனா கூறுகையில், நான் கங்குலின் ஆட்டத்தை ரசிப்பேன் . அவரது ஆட்டம் எனக்கு மிகவும் பிடிக்கும், ஆனால் சங்ககாரவின் துடுப்பாட்டத்தை பார்த்து ஆடுவது எனக்கு சிறு வயதிலிருந்தே பழகிவிட்டது. சங்ககாரவைப் போல் கவர் ட்ரைவ் ஆட முயற்சி செய்து வருகிறேன். சங்ககாரவைப் பார்த்து ஆடுவது எனக்குள் ஒரு தெளிவு மற்றும் தன்னம்பிக்கையை ஏற்படுத்தும். அவரிடம் இருந்து நான் என்னை மேம்படுத்தி கொள்கிறேன் எனக் கூறியுள்ளார்.

இது குறித்து சங்ககார கூறுகையில், ஸ்மிரிதி போன்ற மிக திறமை வாய்ந்த ஓர் இளம் வீரர் என்னைப் பற்றிப் பேசியது எனக்குப் பெருமையே ஆகும்.

அவரைப் போன்ற ஒருவர் என்னை முன்னுதாரணமாக எடுத்து விளையாடி வருவது என்னை மேலும் பாக்கியம் செய்தவராக மாற்றும் என்று நெகிழ்ச்சியாகக் கூறியுள்ளார். ஸ்மிரிதி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவதால், ஆஸ்திரேலியாவில் நடக்கும் பெண்களுக்கான பிக்போஷ் ரி20 லீக் தொடரில் பிரிஸ்பேன் ஹீட் அணிக்காக ஸ்மிரிதி விளையாடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டாக இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்திற்கான அழைப்பை விடுத்துள்ளன.

ஆர்ப்பாட்டம் நாளை மறுதினம் 3.30 மணியளவில் யாழ். பேருந்து தரிப்பிடம் முன்பாக இடம் பெறவுள்ளது. இது தொடர்பில் குறித்த ஐந்து அமைப்புக்களும் இணைந்து நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளன.

அதன் விவரம் வருமாறு:-

யுத்தம் முடிவுற்று எட்டு வருடங்கள் கழிந்தும் 130 பேர் வரையிலான அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளில் வாழ்கின்றனர். சிலருக்கு வழக்குத் தொடுக்கப்படவேயில்லை. வழக்குத் தொடுக்கப்பட்டோரில் பலருக்கு 8-10 வருடங்கள் கழிந்தும் வழக்கு முடிவின்றி துன்புறுகின்றனர். பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டதனால் பிணை மறுக்கப்படுகின்றது. கடந்த 2012ஆம் ஆண்டு ஜுலை மாதம் வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு அல்லது தொடுக்கப்பட்டிருக்கின்ற வழக்குகளைத் துரிதப்படுத்துமாறும் உண்ணாவிரதம் இருந்தனர்.

அன்றைய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் அவர்கள் மீது கொடூரக் கொலை வெறித் தாக்குதலை மேற்கொண்டு தலை, கை, கால்களை உடைத்தனர். தாக்குண்டவர்களில் நிமலரூபன், டில்ருக்ஸன் இருவரும் கொல்லப்பட்டனர். வவுனியா சிறையில் அரசியல் கைதிகள் நடத்திய போராட்டத்தை நிறுத்திட ஆயுதம் தரித்த இராணுவம் அனுப்பப்பட்டது. கைவிலங்கிடப்பட்டு அனுராதபுரம் சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்ட கைதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சார்ந்தோர் எனச் சந்தேகிக்கப்பட்டோரைத் தனிமைப்படுத்தி மேற்கொண்ட பயங்கரத் தாக்குதலில் 15 பேரளவில் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகினார்கள்.

இதில், நிமலரூபன் அடுத்த நாளே மரணித்தார். டில்ருக்ஸன் உடல் அசைவற்ற நிலையிலும் வைத்தியசாலையில் கை, கால்கள் விலங்கிடப்பட்ட நிலையில் ஒரு மாதத்தின் பின்னர் மரணத்தைத் தழுவினார்.

1983 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பல்வேறு காலகட்டங்களில் அரசியல் கைதிகளில் நூறு வரையானோர் சிறைகளில் கொல்லப்பட்டுள்ளனர். காயங்களுக்குள்ளாகி வாழ்நாள் பாதிக்கப்பட்டோரும் உள்ளனர்.

1971 மற்றும் 1989,1988 ஆம் ஆண்டுகளில் தெற்கின் இளைஞர்கள் அரசுக்கெதிராக ஆயுதம் தூக்கினர். கைதுசெய்யப்பட்டோரின் வழக்குகள் மூன்று முதல் நான்கு வருடங்களுக்குள் நிறைவு செய்யப்பட்டன.

கடந்த நாட்களில் நீதியமைச்சர் "தற்போது சிறைகளில் உள்ளோர் பயங்கரமானவர்கள். இவர்களை விடுதலை செய்ய முடியாது"என நீதிமன்றங்களில் வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதே தமது தீர்ப்பை வழங்கியிருப்பது நாட்டின் சட்டத்தையும் நீதிமன்றையும் அவமதிக்கும் செயலாகும். இவர்களிடம் நீதியை எதிர்பார்க்க முடியாது. நல்லாட்சி அரசில் நம்பிக்கை வைத்து வாக்களித்த நாம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எம் அரசியல் தலைவர்களும் ஏமாற்றுகின்றார்கள் என்பது எம்மை விரக்தி நிலைக்குள் தள்ளியுள்ளது. வடக்கின் காணிப் பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை, அகதிகள் பிரச்சினை போன்றன தீர்க்கப்படாததால் பாதிக்கப்பட்ட மக்கள் வீதிகளில் அமர்ந்து போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அரசியல் கைதிகளின் பெற்றோர் தம் உறவுகளின் விடுதலைக்காக ஏங்கித் தவிக்கின்றனர். காணாமல் ஆக்கப்பட்டோர், காணிகள் இழந்தோர், அரசியல் கைதிகள் போன்றோரின் பிரச்சினைகளைத் தீர்க்க ஆயத்தமில்லாதோர்கள் நாம் விரும்பும் அரசியல் தீர்வை முன்வைக்கப் போவதில்லை. நல்லாட்சி முகமூடி அணிந்தோர் இனவாத அரசியலுக்குள் அடைக்கலம் புகுந்து தமது எதிர்கால அரசியலைத் திட்டமிடுகின்றனர். இவர்களே நல்லிணக்கம் தொடர்பாகவும் கதைக்கின்றனர். இது தமிழர்கள் விடயத்தில் இவர்களின் இரட்டை நிலைப்பாடு எனலாம். டில்ருக்ஸன் நினைவேந்தல் நாளில் அரசிடம் கோருவது, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி, இராணுவ முகாம்களை அகற்றுதல், காணி விடுவிப்பு, அரசியல் தீர்வு என்பவற்றின் ஆரம்ப கட்டமாகவும் நல்லிணக்கத்தின் அடையாளமாகவும் ஆட்சியாளர் அரசியல் தீர்மானம் எடுத்து அனைத்து அரசியல் கைதிகளையும் உடனே விடுதலை செய்ய வேண்டும் - என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி 6ஆம் பக்கத்தில்)

# துன்னாலையில் நேற்று தீவிர பொலிஸ் கெடுபிடி



யாழ்ப்பாணம், ஓக.06

துன்னாலையில் நேற்று மாலை மீண்டும் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். நேற்றுக்காலை துன்னாலைப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டிருந்தது. பின்னர் அங்கிருந்து விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் அகன்றனர். மீண்டும் அவர்கள் நேற்று மாலையில் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.

வேம்படிச் சந்தியில் இருந்து கலிகைச் சந்தி வரை விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சாலையில் பயணிப்போரிடம் அவர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பொலிஸ் மற்றும் பொலிஸ் அதிரடிப்படையைச் சேர்ந்த 400 பேர் மேற்படி தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கையின் போது மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அத்துடன் உரிய ஆவணங்கள் இல்லாத ஹன்ரர் ரக வாகனம் ஒன்றும் 10 மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டன.

இந்த நடவடிக்கை தொடர்பில் செய்தி சேகரிப்பதற்காக அப்பகுதிக்குச் சென்றிருந்த ஊடகவியலாளர்களைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த சார்ஜண்ட் தர உத்தியோகத்தர் ஒருவர் தன்னுடைய கையடக்க தொலைபேசியில் ரகசியமன முறையில் ஒளிப்பதிவு செய்தார் எனவும் கூறப்பட்டது.

## கீழ்நோக்கி...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்றில் வாக்கு மூலம் அளித்தார்.

விசாரணைகளை யடுத்து எதிர்வரும் 15 ஆம் திகதிவரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டார்.

அத்துடன், சம்பவதினமன்று ஹன்ரர் வாகனத்தில் பயணம் செய்த ஏனைய நால்வரின் விவரங்களையும் நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டும் என்றும் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கை முன்னிட்டு நீதிமன்றில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. என்பது குறிப்பிடத்தக்கது.

## துவாரகேஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரை ஏழுநாள் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த மாத நடுப்பகுதியில் தனியார் போக்குவரத்து அமைச்சுக்குள் புகுந்து அங்கிருந்த பெண் அதிகாரிகளையும், உதவி ஆணையாளரையும் தரக்குறைவாகப் பேசி, அங்கு அட்டகாசம் புரிந்தார் என்றும், தனது போக்குவரத்து பஸ்ஸை அமைச்சுக்குக் குறுக்காகத் தரிக்க விட்டு பெரும் இடைஞ்சலையும், அசௌகரியங்களையும் வேண்டும் என்று ஏற்படுத்தினார் என்றும் இவருக்கு எதிராக நாரஹன்பிட்டிய பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

களேபரம் நடைபெற்ற சமயம் அவசர பொலிஸ் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டு பொலிஸ் வருவதற்குள் அவர் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார் என்றும் கூறப்பட்டது.

இதற்குப் பின்னர் அவருக்கு எதிராக நாரஹன்பிட்டிய பொலிஸ் முறைப்பாட்டின் அடிப்படையில் கொழும்பு ஹல்ஸ்டோர்ப் நீதிமன்றம் அவரைக் கைது செய்வதற்குப் பிடியாணை பிறப்பித்திருந்தது. அது பற்றிய செய்தி யாழ். பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் வெளியாகியுமிருந்து.

இந்தச் சூழலில் யாழ்ப்பாணத்தில் நடமாடிய அவர், சில தினங்களுக்கு முன்னர் யாழ். ஊடக மையத்தில் தோன்றி ஒரு செய்தியாளர் மாநாடும் நடத்தினார்.

அந்தச் செய்தியாளர் மாநாட்டில் ஒரு செய்தியாளர் கூட அவரிடம் உங்களுக்கு எதிராக பிடியாணை உத்தரவு நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றதே என்று எந்தக் கேள்வியும் எழுப்பவேயில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நாரஹன்பிட்டிய பொலிஸார் அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். ஒரு வார காலம் தடுப்புக்காவலில் வைப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டதாக அறிய வந்தது. (உ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த முன்னணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் மாகாண சபைத் தேர்தல் காலத்தில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த போனஸ் ஆசனத்தை அந்த முன்னணியின் முஸ்லிம் உறுப்பினரான அயூப் அஸ்மினுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

## அமைச்சரவையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய கூட்டத்தின் முடிவில் மூன்று அம்சத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

கூட்ட முடிவில் அது குறித்து விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் 'சகல கட்சித் தலைவர்களினதும் ஏற்கப்பட்ட தீர்மானம்' என்ற அடிக் குறிப்புடன் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும், கட்சித் தலைவர்களும், முதலமைச்சரும் தமிழ் மக்களின் நலன் கருதி பின்வரும் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர்.

1. முதலமைச்சர் தனக்கிருக்கும் சட்டரீதியான தற்றுணிபு அதிகாரங்களைப் பிரயோகித்து அமைச்சரவை மாற்றத்தை ஏற்படுத்தவோ திருத்தி அமைப்பதற்கோ அங்கத்துவக் கட்சிகள் சம்மதத்தை வெளிப்படுத்துகின்றன.

2. அமைச்சர்கள் மாற்றப்பட்டால் அது குறித்த அமைச்சர் எந்த ஒரு குற்றச்சாட்டையும் இழைத்தார் என அர்த்தப்படாது.

3. அமைச்சரவை நியமனங்களைப் பொறுத் தமட்டில் அங்கத்துவக் கட்சிகளின் ஆலோசனைகளையும் கருத்தில் எடுத்து அவை மேற்கொள்ளப்பட வேண்டும். - என்று இருந்தது. (உ)

## அங்கத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பி. மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் என்.சிறிகாந்தா ஆகியோரும் -

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

யாழ்ப்பாணம், நல்லூர் வீதியில் உள்ள முதல்வர் விக்னேஸ்வரனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று மாலை 6.30 மணி முதல் 9.30 மணிவரை இக்கூட்டம் நடைபெற்றது. (உ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மைத் தகவல்களைத் தாம் வெளியிடப் போகிறார் என அவர் தெரிவித்துள்ளார் எனவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடுகளை மீளவும் கட்டியெழுப்புவதற்காக உருவாக்கப்பட்ட 'ராடா' அமைப்பில் 12 கோடி ரூபா அரசாங்க நிதி மோசடி செய்யப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் உட்பட ஏனைய சிலருக்கு எதிராக இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணையில் சாட்சியாளராக எமில் காந்தன் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என குறிப்பிடப்படுகின்றது.

விடுதலைப்புலிகள் அமைப்பு மற்றும் தெற்கு அரசியல்வாதிகளுக்கு இடையிலான தொடர்புகள், இறுதிக்கட்ட போரின் இரகசியங் கள் உட்பட பல தகவல்களை எமில்காந்தன் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுவதாக அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## உலகத் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கப்பட்டிருந்த வடமாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் நேற்று யாழ்ப்பாணத்தில் நின்ற போதிலும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை.

கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் மாநாட்டைத் தொடக்கி வைத்தார்.

மதத் தலைவர்களின் ஆசியுரைகளுடன் ஆரம்பமான மாநாட்டில் பெரும் எண்ணிக்கையிலான கல்வியாளர்கள் பங்குபற்றினர்.

நேற்றுக் காலை மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு நடைபெற்ற அதேசமயம், பல்கலைக்கழகச் சூழலில் நான்கு வெவ்வேறு இடங்களில் ஆய்வரங்குகளும் இடம்பெற்றன என மாநாட்டின் ஊடக இணைப்பாளர் தெரிவித்தார்.

மாநாட்டில் சிறப்பரங்கம் இன்று காலை முதல் இரவு வரை யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் நடைபெறவிருக்கின்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் பங்குபற்றுகின்றார்.

சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.சிறிதரன், ஈ.சரவணபவன், அ.க.கோடீஸ்வரன் ஆகியோரும், வடமாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானமும் பங்குபற்றவுள்ளனர்.

மாவை சேனாதிராஜாவின் பவளவிழா நிகழ்வும், பவளவிழா மலர் வெளியீடும் இந்நிகழ்வின் இடையே இன்றுகாலை இடம்பெறவிருக்கின்றன. (உ)

## சுரேஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த இந்தக் கூட்டத்துக்கு நேற்று முன்தினம் இரவே, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடமிருந்து, பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பப் பட்டது என்பது தெரிந்ததே. சம்பந்தனின் உதவியாளர் ஒருவர் தொலைபேசி மூலம் நேற்று முன்தினம் இந்தத் தகவலைத் தெரிவித்த போது புளொட் தலைவர் சித்தார்த்தனும், ரெலோ தலைவர் செல்வமும் கொழும்பில் இருந்தனர். இருவரும் உடனடியாகப் புறப்பட்டு யாழ். வந்து நேற்று இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் மனநிலையில் அப்போது இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நின்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் தாம் இந்தக் கூட்டத்தில் பங்குபற்ற மாட்டார் என நேற்று முன்தினம் இரவே காலைக்கதிர் நாளிதழுக்குத் தெரிவித்திருந்தார். அவரது கட்சியைச் சேர்ந்த சிவசக்தி ஆனந்தன் எம்.பியும் அதனை ஊர்ஜிதம் செய்திருந்தார்.

எனினும் இந்த மூன்று கட்சித் தலைவர்களுடனும் நேற்று முன்தினம் முன்னிரவுக்குப் பின்னர் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார் என்றும் -

இந்தக் கூட்டத்தில் அவர்கள் கட்டாயம் பங்குபற்ற வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார் என்றும் - அறியவருகின்றது.

அக்கோரிக்கையை அடுத்தே மூன்று கட்சித் தலைவர்களும் இக்கூட்டத்தில் பங்குபற்றக் கூடியதாக விரைந்து வந்தனர் என்றும் கூறப்பட்டது. (உ)

# ஞாபக மறதி நோய் குணமாகும்வரை ரவியை வெளிநாடு செல்லவிடாதீர்!



## உதய கம்மன்பில ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 06

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கு ஏற்பட்டிருக்கும் ஞாபக மறதி நோய் குணமாகும் வரை அவரை வெளிநாடு களில் நடைபெறும் நிகழ்வு களுக்கு அனுப்ப வேண் டாம் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன் பில ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள் ளார்.

தனக்கு எதுவுமே ஞாபக மில்லை எனச் சகட்டு மேனிக்கு சாதித்துவரும் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு ஏற்பட்டிருக்கும் டிமென் ஷியா எனும் ஞாபகமறதி நோய் குணமாகும்வரை அவரை வெளிநாடுகளில் நடைபெறும் மாநாடுக ளுக்கோ அல்லது ஏனைய விவகாரங்களுக்கோ அனுப்பவேண்டாம் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அர்ஜுன் அலோசியஸின் கைபேசியிலிருந்து ரவி கருணாநாயக்கவுக்கு ரவி.கே. எம்.பி. என்ற குறி யீட்டுடன் அனுப்பப்பட் டிருந்த குறுஞ்செய்திகள் தனக்கானவை அல்ல என ஆணைக்குழுவின் முன்னி லையில் ரவி தெரிவித் திருக்கின்றார்.

நமது நாடாளுமன்றத்தி லுள்ள 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ரவி என்ற முதற்பெயருடன் ஆரம்பித்து ஆர்.கே. என்ற குடும்பப்பெயரின் முதலெ ழுத்தில் முடிவடையும் பெயரைக்கொண்டவர் ரவி கருணாநாயக்க மாத் திரமே என்பதை சிறு குழந்தைகூட சொல்லும்.

எனவே, தனது பெய ரையே மறந்துபோயிருக் கும் ரவி கருணாநாயக் கவை வெளிநாடுகளுக்கு இந்த நாட்டின் வெளி விவகார அமைச்சராக அனுப்புகின்றமை புத்தி சாலித்தனமல்ல.

அவ்வாறு அவரை அனுப் பினால் வெளிநாட்டு மாநாடுகளிலோ அல்லது ஏனைய நிகழ்வுகளிலோ தான் எந்த நாட்டைச் சேர்ந் தவர் என்பது அவருக்கு மறந்து போகலாம் என அவர் தெரிவித்துள்ளார். (க)

## பிள்ளைகளுடன் ரயிலிலிருந்து பாய்ந்து தற்கொலைக்கு முயன்ற இளம் தாய்!

கொழும்பு, ஒக. 06

இளம் தாயொருவர் தனது பிள்ளைகளுடன் ரயிலில் இருந்து பாய்ந்து தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

கல்கமுவ பிரதேசத்தி லேயே இந்தத் தாய் ரயிலில் இருந்து பாய்ந்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித் துள்ளார்.

இதன்போது ரயிலில் மோதுண்டு கடும் காயங் களுக்குள்ளான இவர் கல் கமுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன்பின்னர் அநு ராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7.40 மணியளவில் கொழும்பு கோட்டையில் இருந்து வவு னியா நோக்கிப் பயணித்த ரயிலில் இருந்தே அவர் குதித்து தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

இந்தத் தாய் 23 வயதா னவர் எனவும், அவர் 6 வயது டைய மகளுடனும், 3 வய துடைய மகளுடனுமே இவ் வாறு ரயிலில் இருந்து பாய்ந்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படு கின்றது.

இவர்கள் பழுகன் தெவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் களாவர்.

கல்கமுவ பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேல திக விசா ரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## அமைச்சர் ரவி கருணாநாயக்க விவகாரம்; ஜனாதிபதியும் பிரதமரும் முக்கிய பேச்சு!



வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் முக் கிய கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளனர் என அறிய முடிகின்றது.

பிரதமரின் 40 ஆண்டுகால நாடாளுமன்ற அரசியல் பய ணத்தை முன்னிட்டு இடம் பெற்ற விருந்துபசார நிகழ் வில் இருவரும் இது குறித்து கலந்துரையாடியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்தித்து இந்த விடயம் தொடர் பில் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர் என அறிய முடிகிறது.

இதன்போது அமைச்சர் ரவி கருணாநாயக்கவைப் பதவி நீக்க வேண்டும் என்ற கோரிக் கையை இரு தலைவர்களிட மும், இருகட்சியினர் முன்வைத் தனர் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக் கவை அமைச்சுப் பதவிலி யிருந்து விலகுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறி வுறுத்தியுள்ளார் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. (க)

## ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஒக.06

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற் பாட்டில் நடத்தப்படும் ஆய்வ ரங்குத் தொடரின் எட்டாவது அரங்கு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இல - 62, கே.கே.எஸ் வீதி, கொக் குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவி ஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இதில் 'ஒக்ரோபர் புரட்சியும் இரண்டாம் உலகப் போரும்' என்ற தலைப்பில் ஆய்வரங் கும், அதனைத் தொடர்ந்து திறந்த கலந்துரையாடலும் இடம்பெறும். (ச)

## இன்று தேர்த்திருவிழா

மண்டைதீவு, ஒக.06

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா இன்று ஞாயிற் றுக்கிழமை இடம்பெறும்.

காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை, தம்பபூசை என்பன இடம்பெற்று, முற்பகல் 10 மணியளவில் அம்மன் தேரில் ஆரோகணித்துத் திரு வீதி வலம் வரும் நிகழ்வு இடம்பெறும். (ச)

## சாரதிகளுக்கு பொலிஸாரின் அறிவுறுத்தல்

கொழும்பு, ஒக. 06

ஹட்டன் - கொழும்பு மற்றும் ஹட்டன் - நுவ ரெலியா பிரதான மார்க் கங்களில் பயணிக்கும் சாரதிகளை அவதானமாக செயற்படுமாறு பொலி ஸார் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

நுவரெலியா மாவட் டத்தில் அதிக மழையுடன் பனிமூட்டம் நிறைந்த காலநிலை காணப்படுகின் றது. இதனால் குறித்த பிர தான மார்க்கங்களில் நேற்று காலை முதல் அதிகளவி லான பனி மூட்டம் நிலவு வதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இந்த நிலையிலேயே, வாகனங்களின் முன் விளக் குகளை ஒளிரவிட்டு வாக னங்களைச் செலுத்து மாறு சாரதிகளுக்குப் பொலி ஸார் அறிவுறுத்தியுள்ள னர். (க)

## தரம் 5 மாணவருக்கான கருத்தரங்கும் கண்காட்சியும்

நல்லூர், ஒக.06

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில், கோண்டாவில், நல்லூர் பொதுநூலகங்கள் ஆகியன இணைந்து நடத்தும் தரம் 5 புலமைப் பரிசில் மாண வர்களுக்கான கருத்தரங்கும், சுற்றாடல் சார் கண்காட்சியும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலக மண்டபத்தில் பிரதேச சபை செயலாளர் எஸ்.சுதர்ஜன் தலை மையில் இடம்பெறும். (ச)

## ரவி பதவி விலக வேண்டுமென கபே அமைப்பும் வலியுறுத்து!

கொழும்பு, ஒக். 06

பிணைமுறி மோசடி விவ காரத்தில் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ள அமைச்சர் ரவி கருணாநாயக்க உடனடி யாகத் தனது பதவியை இராஜி நாமாசெய்து ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு இடமளிக்க வேண்டும் என கபே அமைப் பின் நிறைவேற்றுப் பணிப்பா ளர் கீர்த்தி தென்னக்கோன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

பிரச்சினை உருவாகியுள்ள இந்த வேளையில் அவர் தொடர்ந்தும் அமைச்சுப் பதவி யில் இருக்கின்றமை விசாரணை களுக்குப் பாதகமாக அமையும்.

ஜனாதிபதியின் தலைமை யிலான இந்த அரசுக்கு வாக்களித்த 62 லட்ச மக்களின் நம்பிக்கையை சிதறடிக்காமல் ரவி கருணாநாயக்க தனது பதவியை இராஜிநாமா செய்து ஆணைக்குழுவின் விசார ணைகளுக்கு இடமளிக்க வேண்டும்.

அரசு உள்ளூராட்சி சபைத் தேர்தல்களைத் தொடர்ந்தும் பிற்போட்டு வருவதற்குப் பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் மீதும் அதைச் சார்ந் தவர்கள் மீதும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அவப் பெயரும் ஒரு காரணம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க 13ஆவது சர்வதேச மாநாட்டு பதிவுகள்













நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது சர்வதேச மாநாட்டின் ஆரம்ப விழாப் பதிவுகள் இவை.

# இலங்கையில் நாளை பூரண சந்திர கிரகணம்

நாளை 7ஆம் திகதி இரவு வானத்தில் பூரண சந்திரன் தோற்றும் போது, சந்திர கிரகணம் தென்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சந்தன ஜெயரத்ன இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மட்டுமன்றி, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, தென்னாபிரிக்காவின் கிழக்குப் பிரதேசங்களிலும் மற்றும் பசுபிக், அட்லாண்டிக் பகுதிகளிலும் சந்திர கிரகணம் தெளிவாகத் தென்படும் என்று பேராசிரியர் கணித்துள்ளார்.

நாளை இரவு 9.20 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் அதிகாலை 2.21மணியளவில் சந்திர கிரகணம் தோற்றும் என்றும் –

சந்திர கிரகணத்தின் முக்கிய பகுதிகள் இரவு 10.53மணிக்கு மிகத் தெளிவாகத் தெரியும் என்றும் –

எதிர்வரும் 21ஆம் திகதியன்று அமெரிக்க மாநிலங்கள் எல்லா வற்றிலும் மிகத் துல்லியமாக சந்திர கிரகணம் கண்ணுக்குத் தென்படும் என்றும் பேராசிரியர் சந்தன ஜெயரத்ன கருத்து வெளியிட்டுள்ளார். (உ)

# 4 பேர் கைது!

இலங்கையிலிருந்து சட்டவிரோதமான முறையில் சுமார் ஒரு கோடி 20 லட்சம் ரூபா பெறுமதியான வல்லப்பட்டைகளை கடத்திச்செல்ல முற்பட்ட 4 இலங்கையர்கள் கட்டுநாயக்காவில் வெள்ளியன்று கைது செய்யப்பட்டனர்.

# மாணவி மீது துஷ்பிரயோகம் அதிபர் நையப்புடைக்கப்பட்டார்!

## வவுனியா வடக்கு கல்வி வலயத்தில்

பாடசாலை அதிபர் ஒருவர் மாணவி ஒருவரை தனது வீட்டில் வைத்து துஷ்பிரயோகம் செய்த நிலையில் பெற்றோரால் நையப்புடைக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலையில் புதிதாக பதவியேற்று அதிபராக கடமையாற்றி வரும் இளம் அதிபர் ஒருவரே இவ்வாறு மாணவியைத் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்த அதிபர் திருமணம் ஆனவர் என்பதுடன் திருமணமாகி சிறிது காலத்திலேயே மனைவி அவரை விட்டுப் பிரிந்து வாழ்ந்து வருகின்றார் என்றும் கூறப்படுகிறது.

வவுனியா நகரிற்கு அண்மையில் உள்ள தனது வீட்டிற்கு தரம் 10இல் கல்வி பயிலும் மாணவி ஒருவரை அவர் அழைத்து வந்து துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட வேளையில் மாணவியின் பெற்றோரினால் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டுள்ளார். (உ–100)

யாழ். மண்ணில் முதன் முறையாக சினிமா பாடல்களுடன்
பிரபல தென்னிந்தியப் பாடகர் கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
உத்ரா உன்னிகிருஷ்ணன்
இணைந்து வழங்கும்
இன்னிசை பாடிவரும்...
மாபெரும்
திரை இசை நிகழ்ச்சி
மாலை 6.00 மணிக்கு
இம் மாதம் ஒகஸ்ட் 12 இல்





நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: K.T.பிரசாத்
யாழ். ஸ்ரான்லி வீதி லிங்கம் கூல்பார் முன்பாக உள்ள மைதானம் (வெலிங்டன் தியேட்டர்)
டிக்கெட் பெற்றுக் கொள்வதற்கு....
பூபாலசிங்கம் புத்தகசாலை T.P: 021 222 6693
மற்றும்
நெல்லியடி த போன் சொப் (The Phone Shop) T.P: 077 285 0285
Event Management C.A.C Tel: 077 550 4910
டிக்கெட்டுக்கள்: 300/= 500/= 1000/=

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை





அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536
எமது சேவை 365 நாட்களும்
விரைவாகவும் பாதுகாப்பாகவும் 72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (EXPRESS SERVICE)
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.